



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19/01/02

# இயற்கை

உருவகக் கதைகள்

எஸ். முத்துமீரான்


மீரா உம்மா நூல் வெளியீட்டகம்

நிந்தவூர். ஸ்ரீலங்கா.



Rs 100 -

800.0277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EYARKKAI (NATURE)
(Collection of Parable Stories)

by S. MUTHUMEERAN. (C)

Published by
MEERAUMMA BOOK PUBLISHERS
"PEARL"
Nintavur,
Srilanka.

First Edition May 1999

Laser Typeset
AKARAM
Sivagangai

Printed at
NOVENA OFFSET PRINTING CO.,
Chennai - 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

நன்றியின் சின்னமாக
என் உள்ளத்தில் தூய்மையோடு வாழும்.
இலங்கை வாழ் முஸ்லிம்களின்
ஈடு இணையற்ற தானைத் தளபதியும்.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
தேசியத் தலைவரும்.
துறைமுக அபிவிருத்தி. புனர்வாழ்வு.
புனரமைப்பு அமைச்சருமான
'கவிஞர் திலகம்' ஜனாதிபதி சட்டத்தரணி
மாண்புமிகு எம். எச். எம். அஸ்ரஃப் அவர்களுக்கு.

நேசத்தோடு
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

வாழ்க்கை கற்றுத் தருகிற உண்மைகளையும் இயற்கையின் தன்மைகளையும் எடுத்துச் சொல்லி மக்களின் மனசிலே பதிய வைப்பதற்கும் சிந்திக்கத் தூண்டுவதற்கும் உருவகக் கதைகள் நன்கு பயன்படும். ஞானிகளும் அறவோரும் இந்நோக்கில் உருவகக் கதைகளை கையாண்டிருக்கின்றனர். ஏசு சொன்ன உபதேசக் கதைகளும், இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய நீதிக் கதைகளும் நல்ல உருவகக் கதைகளாக அமைந்து காணப்படுகின்றன.

இலக்கியத்திலும் உருவகக் கதைகள் தனி இடம் பெற்றுத் திகழ்கின்றன. வாழ்க்கை உண்மைகளை தத்துவ நோக்கில் எடுத்துக் கூறுகிற போது, கற்பனை நயத்தையும் கவிதைத் தன்மையையும் நடை அழகையும் சேர்த்து வளம் செய்திருக்கிறார்கள் இலக்கியவாதிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்கார் ஒயில்டு ஆங்கிலத்தில் எழுதியுள்ளனவும், ரஷ்ய எழுத்தாளர் ஐவான் துர்கனேவ் எழுதியுள்ளனவும் இத்தகையனவே. அவை வசனகவிதைகள் ('ப்ரோஸ் போயம்ஸ்') என்றே வழங்கப்பட்டுள்ளன.

தமிழிலும் அத்தகைய முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. ஆஸ்கார் ஒயில்டு, ஐவான் துர்கனேவ் எழுத்துக்களால் தாக்கம் பெற்ற வல்லிக்கண்ணன் 1940 களில் எழுதி, பல பத்திரிகைகளிலும் இடம் பெற்ற உருவகக் கதைகள் அக்காலகட்டத்தில் நல்ல கவனிப்பைப் பெற்றிருந்தன. பின்னர் வி.ஸ. காண்டேகர் மராட்டியில் எழுதி, கா.ஸ்ரீ.ஸ்ரீ. தமிழில் தந்த 'உருவகக் கதைகள்' தொகுப்பு தமிழ் வாசகர்களைப் பெரிதும் ஈர்த்தது. தொடர்ந்து, 'கலை மகள்' ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன் அவர்களின் மகன் ஜ. சாமிநாதன் எழுதி வந்த உருவகக் கதைகள் ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றன.

இம்முயற்சி தமிழில் தொடர்ந்து வளர்க்கப்படவில்லை என்ற போதிலும், அவ்வப்போது சிலர் உருவகக் கதைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டியே இருக்கிறார்கள்.

அவ்வகையில் கவிஞர் முத்துமீரானும் தன் ஆற்றலையும் ஆர்வத்தையும் நிரூபித்திருக்கிறார் என்றும் அழியாத இறைவனின் இயற்கையையும், இறைத்தன்மையின் சக்திகளையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் அவர் இக்கதைகள் மூலம் சுட்டிக் காட்டுகிறார். பல்வேறு மிருகங்கள், ஜீவராசிகள், இயற்கை சக்திகள் முதலியவற்றைக் கதாபாத்திரங்களாக்கி, வாழ்க்கை உண்மைகளை அழகான முறையில் கதைகளாக அவர் படைத்திருப்பதைப் படித்து, சுவைத்து, பாராட்ட வேண்டும்.

அவருக்கு என் வாழ்த்துக்கள்

வல்லிக்கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நான் எழுதிய உருவகக் கதைகளில் என் இதயத்தை வருடிய கதைகள் ஐம்பதைத் தெரிவு செய்து, இந்நூலில் தந்துள்ளேன். இக்கதைகளில் பெரும் பாலானவைகள், இறைவனின் சூட்சுமங்களையும், அவன் சக்தியின் வெளிப்பாடுகளையும் துல்லியமாக எடுத்தோதுகின்றன.

சில, வாழ்க்கையின் தத்துவங்களையும், அதன் மெய்மையையும் பறைசாற்றுகின்றன.

இன்னும் சில, உண்மையைப் புடம் போட்டு அதன் பேரின்பத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இவை யாவும், என்னோடு இரவு பகலாகப் பேசிப் பழகிய, என் ஆத்மாவின் பிம்பங்களாகும்.

எனவே, இவை இனி உங்களோடு பேசுவதற்கு வந்துவிட்டன. என் உயிரினும் மேலாக நான் நேசிக்கின்ற இவற்றை நீங்களும், தூய உள்ளத்தோடு பேசி, மகிழுங்கள். இவற்றை நீங்களும் நேசித்து, உள்ளன்போடு உறவாடுங்கள். இறைவன் தன் எண்ணற்ற தத்துவங்களை வைத்து விளையாடும் சித்துக்களை நீங்களும் அறியலாம். அகங் குளிர அவன் மகிமையோடு கலக்கலாம். உங்கள் மகிழ்ச்சியே என் திருப்தி.

இந்நூல் இவ்வளவு சிறப்பாக வெளிவரப் பல வழிகளில் எனக்கு ஆலோசனைகளையும், உதவிகளையும் அளித்த அருமைச் சகோதரர் கவிக்கோ டாக்டர் அப்துல் ரகுமான், அணிந்துரை வழங்கிய மூத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணன், இரவு பகல் பாராது என்னோடு இருந்து தட்டச்சுப் பிரதிகளைச் சரிபிழை பார்த்து உதவிய என் இதயக் கொழுந்து அன்பு மகள் ஹஸ்னா மீரான், என் மனநிலை அறிந்து மனம் கோணாது, அதற்கேற்றவாறு உறுதுணை புரிந்த என் இனிய மனைவி ஆசியா முத்துமீரான், எழுத்துப் பிரதிகளை தட்டச்சு செய்து தந்த மருதமுனை எச். எம். முஸம்மில் உப அதிபர், நண்பர்கள் டாக்டர் ஏ.எம். ஜாபிர், ஏ.எல் அன்வர்டீன், எனது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வைக்கும் மீரா உம்மா நூல் வெளியீட்டகப் பணிப்பாளர்களான எஸ். அப்துல் வாகிது, எஸ். அப்துல் ஜப்பார், சட்டத்தரணி, எஸ். செய்யது அப்பாசி ஆகியோர்களுக்கும், என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

எஸ். முத்துமீரான்.
நிந்தவூர், ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

காற்று தன் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி புயலாக வீசிக்கொண்டிருந்தது. புயலின் வேகத்தில் மரங்களும், மலைகளும், கட்டடங்களும் உடைந்து சிதறிக்கொண்டிருக்கின்றன. மிருகங்களும், பறவை களும் திசையறியாமல் சென்று கொண்டிருந்தன.

எங்கும் ஒரே அமர்க்களம்.

பயங்கர வேகத்தில் பரவிக்கொண்டிருக்கும் புயலால், ஆழி பொங்கி மலை போன்ற அலைகளை கக்கிக் கொண்டிருந்தது. பொங்கி எழுந்து வரும் அலைகளை அமைதியாகக் கிடக்கும் கரை, கபளீகரம் செய்து கொண்டிருந்தது.

பார்க்குமிடமெல்லாம் புயலின் ஆட்சி, பேயாட்ட மிடும் புயலால் உலகம், தடுமாறித் தவித்துக்கொண் டிருந்தது. வேதனையில் மக்கள் விம்மி அழுது புலம்பிக் கொண்டிருந்தனர்.

"இறைவா! எங்களைக் காப்பாற்று. இந்த இயற்கை யின் சீற்றத்திலிருந்து எங்களையெல்லாம் காப்பாற்று. உன்னையன்றி எங்களுக்கு உதவி செய்வார் யாருளர்? இயற்கையின் கோபம் எங்களைப் பாதித்துவிடாமல், காப்பாற்று." மனமுருகிப் பிரார்த்தித்துக்கொண்டு, மக்கள் அழுதவண்ண மிருந்தனர்.

மக்களின் பிரார்த்தனையைக் கேட்டு இறைவன் சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவுமே புரியாமல் மக்கள் திகைத்தனர். புயல் ஓயாமல் வீசிக்கொண்டே இருந்தது.

"எது இயற்கை? இயற்கையின் தத்துவமென்ன?"

இறைவன், பிரார்த்தனை செய்துகொண்டிருந்த மக்களிடம் கேள்வியைக் கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தான்.

ஆவேசமுற்று ஆடும், சுடுகாட்டுப் பேயைப் போல், புயல் சுழன்று, சுழன்று வீசி, உலகை பிய்த்துக் கொண்டிருந்தது.

"இறைவா! எங்களைக் காப்பாற்று நாங்கள் ஒன்றுமே அறியாத பாவிகள். காற்றும், மழையும், கடலும், கானகமும் இயற்கைதானே. இதைத்தானே வாழையடி வாழையாக எங்கள் மூதாதையர்களும் கூறிச் சென்றார்கள். முற்றுமறிந்த ஞானக் குரவர்களும் இதைத்தானே உண்மை என்றார்கள். நாங்களும் இதைத்தான் மெய்யென்று நம்புகிறோம்." அறிந்தவற்றை அடக்கமுடன் கூறிவிட்டு, மக்கள் மீண்டும் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றனர். புயல், வேகமாக வீசிக்கொண்டிருக்கிறது.

"இயற்கை நித்தியமானது. அதற்கு அழிவென்பதே இல்லை. அது, தானாகப் பிறந்து, தயவின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் மெய்ப்பொருளாகும். அழியக்கூடிய புயலும், கடலும், மரமும், செடியும், காவும், கானகமும் இயற்கையல்ல. அவை அனைத்துமே செயற்கைதான்." இறைவன் தத்துவமாகிறான். சூட்சுமங்கள் அவிழ்க் கின்றன. இறைவனின், விளக்கத்தில் மக்கள் நிலை குலைந்து நிற்கின்றனர். புயல், உலகை ஆட்டி உசுப்பிக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பீதியினால், குடல் தெறிக்க விபரம் புரியாது ஓடிக்கொண்டிருக்கின்றனர். மிருகங்கள் எதுவும் புரியாமல் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக் கின்றன.

"இறைவா! காற்று செயற்கை என்றால், அதற்கு அழிவும் உண்டா?" மக்கள் கேள்வியைக் கேட்டு விட்டு, அழுகின்றனர்.

இறைவன் சிரிக்கிறான்.

விரல் நொடிக்கும் நேரம்.

பேயாட்டம் ஆடிக்கொண்டிருந்த புயல், இருந்த இடம் தெரியாமல் மறைகிறது. உலகம் அமைதியா கிறது. மக்கள் சிரிக்கின்றனர்.

மறுகணம்.

"இறைவா! நீயே, இயற்கை. இந்த உலகமும் அதிலுள்ள அனைத்துமே செயற்கைதான். என்றுமே, அழிவில்லாத எங்கள் இறைவா, நீயே நித்தியமான இயற்கை."

மக்கள் எல்லோரும் ஒருமித்துக் கூறிவிட்டு, சிரிக் கின்றனர். அதைப் பார்த்து அழிவில்லா இயற்கையும் எழிலோடு சிரிக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறியாளன்

நடுநிசி, அமைதியின் பிரதிபிம்பமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் அச்சிறு குடிசையில், குப்பி விளக்கொன்று இருளையே தனக்குத் துணையாக்கிக் கொண்டு எரிகிறது. மங்கிய நிலையில் எரிந்து கொண்டிருக்கும் விளக்கின் ஒளியில், எலிகள் சில சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. சூத்திரதாரியின், பசி என்ற களத்திலே, அவை விசை ஏற்றிவிட்ட பம்பரம்போல் சுழன்று கொண்டிருக் கின்றன. அவா என்ற மொட்டு வெடிக்கிறது. இறைவனின் நெறியாள்கையில் நாடகம் தொடர்கிறது, திரை அகல்கிறது.

குடிசையின் ஒரு மூலையில், இரண்டு எலிப் பொறிகள் நாடகத்தின் முடிவை எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கின்றன. பொறிகள் இரண்டும் உணவுப் பண்டங்களால் பிணைக்கப் பட்டிருக்கின்றன.

பொறியிலிருந்த உணவுப் பண்டத்தை நாடி எலியொன்று பாய்கிறது. ஏகன் சிரிக்கிறான். பாய்ந்த எலி, எமனின் முறுவலில் குற்றுயிராகிக் கிடக்கிறது. நாடகத்தின் முதல் அங்கம் முடிவுற்ற களிப்பில் ஏகன் மீண்டும் சிரிக்கிறான், திரை விழுகிறது.

நாடகத்தின் சூத்திரதாரி சுறுசுறுப்படைகிறான். பதுங்கிக் கொண்டிருந்த இன்னொரு எலி அடுத்த பொறியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

"சகோதரா! சற்றுநில்! வீணாக உன்வாழ்வை அழித்துக் கொள்ளாதே! இந்த வீட்டுக்காரன் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசக்காரன். என்னையும் இந்த இறைச்சித் துண்டையும் பணயமாக வைத்து, உன்னை அழிக்கப் பார்க்கிறான். இவன் ஆணவத்தில், தர்மத்தையே, விலை பேசுகிறான். உன்னைப் படைத்த ஈசன் உனக்கு உணவைக் கட்டாயம் தருவான். அவனை நம்பு. நீ என்னைத் தீண்டாதே.. உயிர் இருந்தால், எப்படியோ உணவைப் பெற்றுக்கொள்ளலாம். எதையும் யோசிக்காமல் இங்கிருந்து ஓடிப்போய்விடு" என்று பாய்ந்து வரும் எலியைப் பார்த்து, அமைதியாகக் கூறியது; எலிப்பொறி.

தர்மம் என்ற முடிச்சு அவிழ்கிறது. தத்துவம் என்ற அங்கம் மேடை ஏறுகிறது.

"நீ அறியாமையினால் பேசுகிறாய். ஈசன் என்ற எண்ணமே போலி. நான் மூடநம்பிக்கை வாதிகளின் கடவுள் என்ற சிருஷ்டியை, என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை. என் உடம்பில் துளிர்விட்டுக்கொண்டிருக்கும் சக்தி என்ற பலத்திற்கும், அறிவிற்குமே நான் மதிப்பளிக்கிறேன். அதற்கே தலை வணங்குகிறேன். இதோ! என் சக்தியை நீயே நேரில் பார்த்துக்கொள்" என்று எலி கூறிவிட்டுப் பொறியை நோக்கி நகர்ந்தது. எண்ணங்கள் பொங்கி எழுந்து கொண்டிருக்கின்றன. தர்மம் போலியாகி, அதர்மம் தத்துவமாகிறது.

"சகோதரா! உன் தன்னம்பிக்கையைக் கண்டு என் உள்ளம் எல்லாம் பூரிப்படைகிறது. உன்னைப் போன்ற முற்போக்குச் சிந்தனையுள்ள மக்களைத்தான் நானும் மதிக்கிறேன். ஆனால், படைத்தவன் போலி என்றால் நீ யார்? நீயும் போலியா? நீ பெருமையாகப் பேசும் உன் சக்தியும் போலியா? உன்னையே நீ ஏமாற்றப் பார்க்கிறாய். உன் சக்தியென்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் ஆற்றல்தான். இறைவன் இல்லையேல் சக்தி என்பதும் இல்லை; நீயுமில்லை. இந்த உண்மையை அதோ, உன் சகோதரன் ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையிலிருந்து அறிந்துகொள்! பாவம் அவன் அறிவும், சக்தியும் எங்கே போய்விட்டன? வீணாக அழிந்து போகாமல் ஓடிவிடு" என்று பொறி ஆணித்தரமாகக் கூறிவிட்டுத் தன் கடமையில் கண்ணும் கருத்துமாயிருந்தது. எங்கும் ஒரே அமைதி.

"சீ! நீயொரு கோழை. பிறப்பதும் அழிவதும் இயற்கையின் தோற்றப்பாடு, எனக்கு நான் வாழும் நிமிடம் தான் வாழ்க்கை" என்று கூறிவிட்டுப் பொறியில் குதிக்கிறது, எலி. நிழல் அழிகிறது. குப்பி விளக்கு நித்திய ஜுவாலையுடன் எரிந்து கொண்டிருக்கிறது. இரண்டு ஆத்மாக்களைக் கைப்பற்றிக்கொண்ட திருப்தியில் எமன் எக்காளமிட்டுச் சிரிக்கிறான். நாடகம் இனிதாக முடிவுற்ற முறுவலில், ஏகனென்னும் நெறியாளன் தத்துவமாகிறான்.

தங்கள் கடமையைச் சரியாகச் செய்துவிட்ட திருப்தியோடு பொறிகள் அமைதியாகக் கிடக்கின்றன.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைத்தவனும் படைப்பும்

மாபெரும் கும்பாபிஷேகம். சரித்திரப் பெருமை வாய்ந்த அவ்வாலயத்தில், எழுந்தருளி எல்லோரையும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் முருகனின் அன்பு வேண்டிய பக்தர் கூட்டம், ஆலயத்தினுள்ளே நிரம்பிக் கொண்டிருக்கிறது. ஆலயம்; பக்தர்களின் அரோகராச் சப்தத்தினால் இடிந்துவிடும் போல் இருக்கிறது. எங்கு நோக்கிலும் மக்கள் கூட்டம். "முருகனின் முகத்தில் தான் எத்தனை கனிவு. அவன் அங்கங்களில் தான் எவ்வளவு பொலிவு. முருகனின் உருவத்தைக் காணும் போது உள்ளமெல்லாம் குளிர்கிறது. இந்த முருகனின் சிலையைச் செதுக்கியவனல்லவோ தெய்வீகச் சிற்பி!"

ஆலயத்தின் உள்ளிருந்து வருகின்ற பக்தர் ஒருவர், கும்பாபிஷேகம் செய்யப்படும் முருகப் பெருமானின் அழகையும், அவனை வடித்தெடுத்த சிற்பியையும் வாயாரப் புகழ்ந்து கொண்டு வருகிறார். அப்பொழுது ஆலயத்தின் வெளி மூலையில் மனிதன் ஒருவன் வாய்விட்டு அழுது கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி பக்தர் கூட்டம். கூடிநிற்கும் பக்தர் கூட்டத்தில் ஒருவித சலசலப் சிலர் கூத்துக்கு மேளம் தட்டுவதைப் போல், அவன் அழுகைக்கு உரமிட்டுக் கொண்டிருக் கின்றனர். இன்னும் சிலர் சும்மா கிடந்த வாய்க்கு ஒருபிடி அவல் கிடைத்த மாதிரி, அவனைப்பற்றி பேசிக்கொண்டிருப்பதில் பூரிப்படைந்து கொண்டிருக் கின்றனர். பாவம்! அவன் எதையும் சிந்தியாமல் அழுதுகொண்டே இருக்கிறான். அவன் ஒரு பேயனா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகாண முடியாத புதிரா?

சிந்தனையோட்டத்தில் மொட்டவிழ்ந்து விரிகிறது. எங்குமே பக்திப் பரவசம்.

சிற்பியையும், அவன் வடித்த முருகனின் உருவத்தையும் உள்ளம் குளிரப் புகழ்ந்து வந்த பக்தர், அழுது கொண்டிருக்கும் மனிதனைச் சூழ்ந்து நிற்கும் கூட்டத்தை நெருங்கி, விஷயத்தை வினாவுகிறார்.

"ஏன் இந்த மனிதன் அழுது கொண்டிருக்கிறான்? இவனுக்கு என்ன குறை?"

"இவனுக்கு எந்தக் குறையுமே இல்லை. இவனொரு கைதேர்ந்த சிற்பி. எண்ணற்ற அழகுச் சிலைகளை வடித்தவன். ஆலயத்தின் உள்ளே, கும்பாபிஷேகம் செய்யப்படும் முருகனின் திருவுரு வத்தை வெள்ளியினால் செய்த சிற்பிதான் இவன். பாவம்! தான் வடித்த சிலைக்கு செய்யப்படும் கும்பாபிஷேகத்தை, ஆலயத்தினுள்ளே சென்று பார்க்க முடியாத துர்ப்பாக்கியம் பிடித்த சாதியில் பிறந்ததை எண்ணித்தான் இவன் அழுதுகொண்டிருக்கிறான்." கூட்டத்திலிருந்து ஒருவர்! ஆசிரியரின் கேள்விக்கு விடையைக் கூறிவிட்டு இருப்பிடம் நோக்கிச் செல்லும் மாணவனைப்போல், பக்தரின் கேள்விக்கு பதிலைக் கூறிவிட்டு, கூட்டத்தைப் பிரிந்துகொண்டிருக்கிறார். எவன் உயர்ந்த சாதி? சாதியைப் படைத்தவன் யார்?

படைத்தவன் பாதையோரத்தில் நின்று அழு கிறான். அவன் படைப்போ எவருடைய பாதமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாத கர்ப்பக்கிருஹத்தில், இருந்து சிரிக்கிறது. ஞானம் பெரிதா அல்லது அதைக் கூறும் ஞானியா?

சிந்தனை விரிகிறது, கடவுள் என்ற சிக்கலான முடிச்சு அவிழ்கிறது. சூனியம் அகல்கிறது. ஆலயத்தின் உள்ளிருந்து வந்த பக்தர் முருகனை வடித்த சிற்பியின் பாதங்களில் தஞ்ச மடைகிறார்.

சிற்பி கடவுளானால், சிலை எந்தச் சாதி?

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான குரு

அது ஒரு ஓலைக் குடிசை. அதன் மூலையென்றில், பகலெல்லாம் தெருத்தெருவாகச் சுற்றிப் பிச்சை யெடுத்த களைப்பில், கிழவனொருவன் உலகத்தையே மறந்து உறங்கிக்கொண்டிருக்கிறான். அப்பொழுது, குடிசையை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட நுளம்பொன்று, தன் விருந்தாளி நுளம்பொன்றுடன் சேர்ந்து, கிழவனின் குருதியை உருஞ்சுவதில் ஆட்டிவிட்ட பம்பரம்போல் சுழன்றுகொண்டிருக் கின்றன. நுளம்புகளின் வெறிச் செயலைச் சட்டை செய்யாது கிழவன் உறங்கிக்கொண்டே இருக்கிறான். கிழவனின் உறக்கத்தை தங்களின் இச்சைக்குப் பலியிட்டு, அதன் இன்பத்தில் இரு நுளம்புகளும் தங்களையே மறந்து பேசிக்கொள்கின்றன.

"நண்பா! இம்மனிதன் எவ்வளவு நல்லவன் தெரியுமா? என் பிறப்பிலிருந்து இவனே எனக்கு உணவளித்துக் கொண்டிருக்கிறான். இவன் உள்ளம் தான் எத்துணை விசாலமானது! இவனைப் போல் அமைதியுடன் அமுதூட்டும் ஒருவனை இதுவரை இந்த உலகத்தில் நான் கண்டதேயில்லை. இவன்தான் உலகிலேயே கருணையுள்ளம் படைத்த பெரும் தயாளன். என் தாய்க்கு நிகரான இம்மனிதன் நீடூழி வாழ வேண்டும்" என்று தன் நன்றிக்குப் பாத்திரமான கிழவனை, வாயாரப் புகழ்வதில் குடிசை நுளம்பு மனநிறைவடைகிறது.

"சீ! நீ உலகம் புரியாதவன். என் வாழ்க்கையில் இவனைப்போல் எத்தனையோ தயாளர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிருக்கிறேன். அவர்கள் முன் இம்மனிதன் ஒரு தூசி, போயும்போயும் இவனையும் இவன் அளிக்கும் உணவையும் வானுயர்த்திப் பேசும் உன்னைப் பார்க்கும்போது, எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது." என்று விருந்தாளி நுளம்பு அலட்சியமாகக் கூறிவிட்டு, அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்க்கிறது.

"அப்படியெல்லாம் சொல்லாதே நண்பா! எப்படியிருந்தாலும், தன் சக்திக்கு ஏற்றவாறு எங்களின் பசியைப் போக்கும் எந்த ஜீவனும் எமக்கு மேலானவையே. அன்புடன் அளிக்கும் ஒரு துளி விஷ மானாலும், அது அமிர்தத்திலும் மேலென்று நீ கேள்விப்படவில்லையா? வாழ்க்கையில் உண்டியளித் தவர்களை உதாசீனப்படுத்திப் பேசுவது அறமல்ல" என்று அமைதியுடன் கூறியது குடிசை நுளம்பு.

"வெட்கம்! இவனுடைய அன்பும் அமுதும் உனக்குத்தான் பெரிது. இந்தக் கிழவனின் உதிரத்தை உறிஞ்சி, வயிற்றையே பாழாக்கிக் கொண்டேன். என் வயிறெல்லாம் குமட்டுகிறது. அமுதென்றால் ஒரு சுவையாவது இருக்கக் கூடாதா? என்னுடன் வந்து பார், உன் வாழ்க்கையில் என்றுமே நீ சுவைத்திராத அற்புத அமுதைத் தருகிறேன். நான் அளிக்கப்போகும் உணவை நீ ஒருதரம் சுவைத்தால் போதும், நீயே என் வார்த்தைகளின் உண்மையைப் புரிந்துகொள்வாய். என் மேனியின் அழகையும் வனப்பையும் பார்த் தாயா? எல்லாம் நான் அருந்தும் அமுதின் பலன்தான். எதற்கும் வாழ்க்கையில் கொடுத்து வைக்கவேண்டும் நண்பா. வாழ்க்கையென்றால் இந்தக் குடிசை என்பதா உன் எண்ணம்? நீ எண்ணிக் கொண்டிருப்பது பெரும் தவறு.என்னோடுவா வாழ்க்கையை உனக்கு வடிவாக்கிக் காட்டுகிறேன்." என்று கூறிவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசையைத் துறந்து பறந்து கொண்டிருக்கிறது விருந்தாளி நுளம்பு. குடிசை நுளம்பிற்கு என்றுமில்லாத வேகம். நண்பனின் ஆசை வார்த்தைகளில் கட்டுண்டு மீள முடியாமல், பின் தொடர்ந்து பறக்கிறது குடிசை நுளம்பும்.

அழகான வீடு. பால்போன்ற நிலாவொளியில் வீடு மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்கிறது. வீட்டின் அறை யொன்றில், வாழ்க்கையைப் பூரணப் பொலிவுடன் அனுபவித்து வரும் பெண்ணொருத்தி, அன்றலர்ந்த ரோஜா மலரைப்போல் சயனித்துக்கொண்டிருக் கிறாள். அவள் கட்டிலைச் சுற்றி நுளம்பு வலை காவலிட்டுக் கொண்டிருக்கிறது. அப்பொழுது குடிசை யைத் துறந்து வந்த இரு நுளம்புகளும் பெண்ணின் அறைக்குள் நுழைகின்றன. "நண்பா! அங்கே பார்! அங்கு உறங்கிக் கொண்டிருப்பவள்தான், இந்த ஊரிலேயே பெரும் பணக்காரி, இவள் பன்னீரில் குளித்துப் பழரசங்களைப் பருகும் பழக்கமுள்ளவள். இவள் குருதியைக் குடிப்பதற்கு நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்." என்று தம்பட்டமடித்தது, குடிசை நுளம்பின் நண்பன். குடிசை நுளம்பிற்கு என்றுமில்லாத ஒருவித உளக் கிளர்ச்சி. அதன் வாழ்க்கையில் என்றுமே கண்டிரா புது அனுபவம் மயக்கநிலை.

"நீ உண்மையில் என்னைப் பார்க்கிலும் அதிர்ஷ்ட சாலி தான். நீ சொன்னது உண்மையே! என் வாழ்க் கையில் இப்படியான புதுமையான இடத்தையும், பெண்ணையும் இன்றுதான் காண்கிறேன். நான் வாழ்ந்த குடிசை எங்கே, இந்த மாளிகை எங்கே? அந்த நாற்றமெடுத்த கிழவனை நினைக்கும்போது என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிறெல்லாம் குமட்டுகிறது. அந்தக் குடிசையை இனி நான் திரும்பிப் பார்க்கப்போவதே இல்லை. நீ தான் என் ஊனக்கண்களைத் திறந்த ஞானகுரு, உனக்கு நான் அடிமை, நீயே என்னைக் காப்பாற்ற வேண்டும் நண்பா." என்று தன் நண்பனை வாயாரப் புகழ்ந்து கொண்டு, சயனித்துக் கொண்டிருக்கும் பெண்ணை நோக்கி அவாவுடன் பறக்கிறது, குடிசை நுளம்பு.

பாவம்! பறந்து சென்ற குடிசை நுளம்பு, வலையில் சிக்குண்டு குற்றுயிராகித் தவித்துக்கொண்டிருக்கிறது. எதுவும் தெரியமால் பெண் அமைதியாக உறங்கிக் கொண்டே இருக்கிறாள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடம்

ஏகனின் நித்திய ஒளியின் தெறிப்பில், சத்தியங்கள் பட்டை தீட்டப்படுகின்றன. எல்லையற்ற சக்தியின் கூரிய விளிம்பில், மேலான மகத்துவம், காந்த விசைப் பாதையில், இழுபட்டுக்கொண்டிருக்கிறது. படைப்பின் சுருக்குகள், அவிழ்கின்றன. தத்துவமாகி, ஏகன் சிரிக்கிறான். சிரிப்பின் கலவியில்; வறுமையும் செல்வமும் ஜனிக்கின்றன. சிருஷ்டியின் புனிதத்துவம் மேலோங்கி நிற்கிறது. எங்கும் மகிழ்ச்சி; மகிழ்ச்சி மகிழ்ச்சியே!

விரல் நொடிக்கும் நேரம், படைப்பாளியின் சிருஷ்டித் தத்துவத்தின் முன்னே, அவன் படைப்புகளான வறுமையும், செல்வமும் சிரம் தாழ்த்தி நிற்கின்றன.

ஏகனின் வாழ்த்துக்களில், அவன் படைப்புக்கள் பனிக்கட்டிகளாகி, உண்மையை நாடுகின்றன. காந்தம் அசைகின்றது.

மறுகணம், நாடகம், ஏகனின் நெறியாளுகையில், கட்டியம் சொல்கிறது.

வறுமையும், செல்வமும் உலக மேடையில் பாத்திரங்களாகி, தங்கள் தங்கள் பங்களிப்பினை, பக்கு வமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன.

வறுமையின் யதார்த்த பூர்வமான நடிப்பில், மண்டபம் போர்க்களமாகிறது. எங்கும் ஒரே ஆவேசம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூக்குரல், வேண்டாத குழந்தையின் தாலாட்டு, அழுகுரலாகி, தொண்டைக் குழிகளில் சங்கமமா கின்றன. தீயின் கனப்பில் வறுமை ஒரு மூலைக்குள் ஒதுங்கி நிற்கிறது. நேத்திரங்கள் குளமாகின்றன.

செல்வம் மேடைக்குவர, மண்டபம் சிரிக்கிறது, எங்கும் வாழ்த்தொலி, வரவேற்பு. ஏகன் எனும் நெறியாளன் சிரிக்கிறான். புகழ்ச்சியின் தீரத்திலே நின்று நர்த்தனமிடும் செல்வம், தன்னையே மறந்து சிரிக்கிறது.

"சீ! என்ன உலகம், நானும் அந்த ஏகனின் சிருஷ்டி தானே, என்னை ஏன்தான் இந்தப் பொல்லாத உலகம் இப்படியெல்லாம் வெறுத்தொதுக்குகின்றதோ? என்னைப் படைத்தவன் பொல்லாதவன், இரக்க மில்லாதவன், என்னைப் படைத்தவனே இழி வானவன். என்னை வெறுக்கும் உலகில் என்னைப் படைத்தது ஏன்? பரிகசிக்கவா? இறைவன் சுயநலக் காரன். படைப்பில் ஏன் இந்த வித்தியாசம்? படைப் பெல்லாம் ஒன்றானால், ஏனதில் வர்க்க பேதம்?" வறுமை தன் உள்ளுந்தல்கள் அனைத்தையும் கொட்டித் தீர்த்துவிட்டு விம்மியது.

நாடகம் தொடர்கிறது. திரையினுள் மறைந்த படியே இறைவன் சிரிக்கிறான்.

"இறைவா! நீ மேலானவன். புகழ்ச்சிக்குரியவன். உன் சக்திக்கு நிகர், ஒன்றுமே இல்லை. உன்னை நான் வாழ்த்துகிறேன், போற்றுகிறேன்." என்று செல்வம் தன்னையே மறந்து தன் எஜமானைத் துதித்தது.

வறுமையின் பொறுமை கட்டவிழ்கிறது. உலக மேடை போர்க்களமாகிறது. எங்கும் வீர கர்ஜனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரங்கள் சுழல்கின்றன. வறுமையின் புயங்கள் புடைக்கின்றன. மறுகணம், வறுமை தன் சக்தியனைத் தையும் ஒன்று திரட்டி, செல்வத்தின்மேல் பாய்கிறது. வறுமையின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் செல்வம் நிலைகுலைந்து அடிபணிகிறது. தாக்குதல் தொடர்கிறது. வறுமையின் வீரம் வெற்றிபெற, செல்வம் தான் பூண்டிருந்த அலங்கார உடைகளையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டு குடல் தெறிக்க ஓடுகிறது. ஓடும் செல்வத்தின் உடை களையெல்லாம் வறுமை பூரிப்புடன் எடுத்து அணிந்து கொண்டு, உலக மேடையில் நடனமிடுகிறது. அதன் வெற்றிக் களிப்பில் தத்துவங்கள் சிதறு கின்றன. நாழிகை அழிய செல்வத்தின் உடைகளினுள்ளே மறைந்திருக்கும் வறுமைக்கு வாழ்த்தொலிகள் நாலா பக்கமும் இருந்து கிடைக்கின்றன. உலகம் களிக்கிறது. “இறைவனே! நீயே தலைவன். நீயே சக்தியுள்ளவன். உன்னையே துதிக்கிறேன். உன்னிடம் மன்னிப்பு கோருகிறேன்!” என்று தன்னைப் படைத்தவனைத் தன் வாய்குளிர வறுமை வாழ்த்திக் கொண்டே சிரிக்கிறது. செல்வம்? பூஜ்ஜியத்தின் உள்ளே வட்டங்கள் கருக் கட்டுகின்றன. நாடகம் முடிகிறது. ஏகனென்னும் மாபெரும் நெறியாளன் தத்துவமாகிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்து

ஏகனின் நெறியாள்கையில் தத்துவமென்னும், மொட்டவிழ்ந்து கொண்டிருக்கிறது.

"குருதேவா"!

பக்தியின் விளிம்பில் சங்கமமாகி, விழிக்க பாடங்களில் வாழ்க்கையின் சூட்சுமங்களை ஒழித்து, ஆத்மாவைப் புனிதமாக்கி, நிஷ்டையில் இருந்து கொண்டிருக்கும் குருதேவரின் பாதக்கமலங்களில், சீடனொருவன், எண்சாண் உடம்பையும் குறுக்கிப் புஸ்ப்பமாகிக் கிடக்கிறான்.

குருவே தஞ்சமெனக் கிடக்கும் சீடனின் ஸ்பரிசத் தால், குருவின் நேத்திரங்கள் திறந்து பூரண ஒளியைப் பரப்புகின்றன.

அமைதியின் சிறையில் அகப்பட்டுக்கிடந்த அவர் இதழ்கள், இளஞ்சிரிப்பை உதிர்க்கின்றன. ஞானம் ஒளிவிட்டுப் பிரகாசிக்க, சீடன் எழுந்து நிற்கிறான்.

கண்ணனின் கர்மயோகம் ஜனிக்கிறது. காண்டீபன் உத்வேகம் அடைகிறான்.

"குழந்தாய்! நான் கூறியபடி எல்லாவற்றையும் முடித்து விட்டாயா?" குருதேவரின் கேள்விக்கு விடை யிறுக்க முடியாமல் சீடன் தடுமாறுகிறான். ஞானம் பூரணத்துவம் அடையாமல் தடுமாறிக்கொண்டிருப் பதைப் பார்த்து குருதேவர் சிரிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குருதேவா! பாவம் என்னை விரட்டுகிறது. ஆனால் புண்ணியம் என்னை மயக்குகிறது. நான் இரண்டிற்கும் அடிமையாகித் தவித்துக்கொண்டிருக்கின்றேன். நீங்கள் பாவத்தை அழித்து புண்ணியத்தை மீட்டு வரக் கட்டளை இட்டீர்கள். என்னால் அதைச் செய்யவே முடியவில்லை. ஏனென்றால், பாவம் என் தாய். அதேநேரம் புண்ணியம் என் தந்தை. நான் இருவருக்கும் ஜனித்த குழந்தை. அவர்கள் இருவரின் உதிரத்தின் பிரதிபிம்பமே நான். பத்து மாதம் சுமந்து பெற்றவளை என்னால் இழக்கவே முடியாது. நான் என்றுமே உங்கள் அடிமைதான். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்."

சீடன் பேசிவிட்டு, மௌனமாகி குருதேவரின் நேத்திரங்களை நோக்கி நிற்கிறான்.

ஏகனின் நாடகம் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. மாயை என்னும் திரை அகல்கிறது. கொக்கிறகுத் தாடியை தடவிக் கொடுத்தபடி குருதேவர், மீண்டும் சீடனைப் பார்த்துப் புன்னகைக்கிறார். சித்து, புடம் போடப்படுகிறது.

மறுகணம், சீடனின் முன்னே பாவமும் புண்ணியமும் ஜனித்து எக்காளமிடுகின்றன. ஞானம் மௌனமாகிக் கிடக்கின்றது. ஒளி பிரகாசிக்கிறது.

"அழிப்பதும் ஏகனே; ஆக்குபவனும் அவனே. அணுவைப்பிரித்து, அண்டத்தை ஆட்டிப்படைப்பவனும் அவனே. அவனின்றி நானில்லை. அவன் ஆட்டுகிறான். நான் ஆடுகிறேன். அவன் ஆடாவிட்டால் எனக்கு ஆட்டமே இல்லை. நான் எதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தாலும் அது, அவன் செயலே. நான் செய்பவை பாவமென்றால், அதற்கு என்னை ஆட்டிப் படைக்கும் ஏகனே பொறுப்பாளி. அவனே பாவத்தின் சூத்திரதாரி அவனே, பாவம்! அவனே அதன் மூலம்," என்று சித்தின் மூலத்தைத் தெளிவுபடுத்தி விட்டு, பாவம் குருதேவரை நோக்கிப் புன்னகை புரிகிறது.

ஞானத்தின் வித்தைப் பிரித்து, அதன் மூலத்தை இருப்பிடமாக்கிக் கொண்டிருக்கும் குருதேவர், நேத்திரங்களை மூடி அமைதியாகக் குந்திக்கொண் டிருக்கிறார். சீடன், சூனிய ஆழியில் கலம் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

"ஈசன், பாவத்தைப் படைக்கவுமில்லை, அதை விரும்பவுமில்லை. பாவமே அவன் எதிரி. பாவத்தை நாடுபவர்கள் வழிகேட்டில் என்றும் உழல்பவர்கள். மந்திரங்கள் அனைத்தும் உன்னை தூஷிக்கின்றன; வெறுக்கின்றன. ஈசனின் படைப்புகளை வழிகெடுக்கும் நீயே கொடியவன். உன்னை நினைப்பதே இழுக்கு. படைப்பின் மூலத்தையே மாசுபடுத்தும் நீ, ஏகனைப் பற்றிப் பேசுவதற்கே தகுதியற்றவன். நானே இறைவனின் நண்பன். என்னையே அவன் என்றும் நேசிக்கின்றான். அவனே நான், நானே அவன். அவனின்றி நானில்லை, நானின்றி அவனில்லை. நான் எங்கெல்லாமிருக்கின்றேனோ, அங்கெல்லாம் இறைவனும் இருக்கின்றான். இதுவே ஏகனின் தத்துவம். இத் தத்துவத்தைப் பூரணமாகப் புரிந்து கொள்ளாமல் ஊளையிடாதே கொடியவனே குரைக் காமல் தத்துவத்தை வாழவிடு" என்று புண்ணியம் சாந்தமாகக் கூறிவிட்டு, மௌனமாக அமர்ந்திருக்கும் குருதேவரை நோக்கிச் சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களம் ஜனிக்கிறது. எங்கும் அமர்க்களம்.

சீடன், துடிப்பின்றிக் கலத்தோடு போராடுகிறான். ஆழி கொதிக்கிறது.

"என்னை அழிப்பதனால்தான் நீ உயிர் பெறு கிறாய். நான் அழியாவிட்டால் நீ இல்லை. உன் பிறப் பிற்கு நானே மூலகாரணம். நானே உனக்குத் தாயும் தந்தையும். என் நாமம் உச்சரிக்கப்படாவிட்டால், உன் நாமத்திற்கே மதிப்பில்லை. ஆதி இன்றி அந்த மில்லை. என்னிலேயே நீ, என்றும் ஜனிக்கிறாய், என்னால் சுத்தியடையும் சித்தை, நீ புரியாமல் ஊளையிடுவது கேலியாகவே இருக்கிறது. வித்தின்றி விளைவில்லை. சித்தின்றி பக்தியில்லை. இதுவே ஞான தத்துவம்." புண்ணியத்தைப் பார்த்து பாவம் கூறிவிட்டு எக்காளமிட்டுச் சிரிக்கிறது.

முடிச்சவிழ்கிறது! ஞானம் சிரிக்கிறது! ஏகன், நாடகத்தை ஒழுங்காக மேடையேற்றிவிட்ட பூரிப்பில், மௌனமாகக் குந்திக்கொண்டிருந்த குருதேவரின் இமைக் கபாடங்களை அசைத்துவிடுகிறான்.

ஞானத்துக்கு வழிவிட்டுப் பாவமும் புண்ணியமும் மறைகின்றன.

சீடன் ஒளி பெறுகின்றான்.

பாவத்தின் பிரதி பிம்பமாக வாழ்ந்து கொண் டிருக்கும் தன் தாயைக் கொல்வதற்காகச் சீடன் ஓடிக் கொண்டிருக் கிறான்.

ஏகன் சிரிக்கிறான்.

ஞானம் பூரணமடைந்துவிட்ட களிப்பில், குருதேவர் மீண்டும் தன் இமைக்கபாடங்களை மூடி நிஷ்டையில் மூழ்கிக்கொண்டிருக்கிறார்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி

அடர்ந்த காடு, எல்லையற்ற விஸ்தரணத்தைத் தன்னகத்தே கொண்டு, சென்னி நிமிர்த்தி நிற்கிறது. வானுயர்ந்த மலைகளும், வளைந்தோடும் அருவிகளும் அதற்கு வண்ணமூட்டிக் கொண்டிருந்தன. எண்ணெய் தடவி வாரிவிட்ட பற்றைகள், வானத்தை முட்டி நிற்கும் மரங்கள், உருண்டு திரண்ட கொடிகள் யாவுமே அதன் பொலிவுக்கு மெருகூட்டிக் கொண்டிருந்தன.

அழகே உருவாகிக் கிடக்கும் காட்டில் பெரும் அமர்க்களம். மதங்கொண்ட யானையொன்று காட்டையே கதிகலங்க வைத்து, மதி மயங்கி ஓடிக் கொண்டே இருக்கிறது. யானையின் அடிச்சுவடுகளுக் கிடையில் சிக்குண்டு, எண்ணற்ற ஜீவராசிகள் அழிந்து கொண்டிருக்கின்றன. காடு குருதிப் புனலாகிறது.

ஓடிக் களைத்த யானை தன் துதிக்கையை மரக்கிளையொன்றின் மேலே போட்டு, ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது. அப்பொழுது மரக்கிளையில் அமைதியாக ஊர்ந்து வந்த சிற்றெறும்பொன்று யானையின் துடிப்பான துதிக்கையின் மேல் ஏறி, பயணத்தைத் தொடர்கிறது. சிற்றெறும்பின் போக்கில் சிந்தை குலைந்த யானை, பலமாக பிளிறுகிறது. சிற்றெறும்பு எதையுமே சட்டை செய்யாது தன் இலக்கை நோக்கி, வினாடிகளை விழுங்கிக் கொண்டிருக்கிறது. யானையின் மூர்க்கம், சென்னி யைத் தாண்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அற்ப எறும்பே! இந்தக் காட்டின் அரசன் நான். இந்தக் காடே எனக்கு நிரந்தர அடிமை. நான் நடந்து வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பார்! என் சக்தியின் வெற்றிகள் தான், இதோ உடைந்தும், முறிந்தும் கிடக்கும் மரங்களும், கொடிகளும். இந்த உலகில் என் சக்திக்கு நிகர் என் சக்தியே. நான் நினைத்தால், ஒரு நொடிப்பொழுதில் இப்பாரிய காட்டையே அழித்து விடுவேன். என் சக்தியையும், உருவத்தையும் கண்டு, குடல் தெறிக்க ஓடும் மிருகங்களையும், மனிதர்களையும் நீ பார்த்த தில்லையா? வீணாக அழிவைத் தேடிக் கொள்ளாமல் இறங்கிப் போய்விடு. பாவம்! உன்னையும், உன் உருவத்தையும் பார்த்தால் எனக்குப் பெரிய பரிதாபமாக இருக்கிறது."

யானை தன் சக்தியின் தோற்றப்பாடுகள் அனைத் தையும் தீட்சண்யமாகக் கோடு கிழித்துக் காட்டிவிட்டு, துதிக்கையை அசைக்கிறது. சிற்றெறும்பு, தன் இலக்கை நாடி வினாடிகளை விழுங்கிக் கொண்டே இருக்கிறது.

யானை, மீண்டும் பிளிறுகிறது.

"எறும்பே! என் துதிக்கையை விட்டு இறங்கி ஓடப் போகிறாயா அல்லது உன்னை நசுக்கிவிடவா? நானே அரசன் நானே பலவான்."

யானை ஆவேசத்துடன் கூறிவிட்டு, மீண்டும் துதிக் கையைப் பலமாக ஆட்டியது. துதிக்கையின் உக் கிரமான ஆடலில் விழிப்புற்ற சிற்றெறும்பு, அதிர்ச்சி யினால் யானையில் மூக்குத் துவாரத்தினூடே புகுந்து, ஊர்ந்து கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களம் கனக்கிறது.

விரல் நொடிக்கும் நேரம்!

காடு மீண்டும் அதிர்கிறது. நொடிப் பொழுதில் காட்டையே அழித்துவிடக் கூடிய சக்தி வாய்ந்த யானை, தன் மூக்குத் துவாரத்தினூடே ஊர்ந்து கொண்டிருக்கும் சிற்றெறும்பின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் தன் துதிக்கையை மரத்திலும், மண்ணிலும் போட்டு அடித்து, அடித்து காடே அதிரும்படி அலறிக்கொண்டிருக்கிறது.

யார் பலவான்? தத்துவம், மொட்டவிழ்ந்து சிரிக்கிறது. ஏகனென்னும் மாபெரும் சூத்திரதாரி மெய்யாகி நிற்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மை

முற்றுமறிந்த ஞானி அவர்.

அறிவின் முதிர்ச்சியில் சடை முடி விழுதுகளாகித் தொங்கிக் கொண்டிருக்கின்றன. நேத்திரங்களின் தீட்சண்யமான பார்வையில், ஞான ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வண்ண மான் தோலாசனத்தை மெத்தையாக்கி, குந்திக் கொண்டிருக்கும் குருதேவரின் வதனங்கள் மொட்டவிழ்கின்றன. ஞானத்தின் பக்குவ நிலையில், தத்துவங்கள் பூரணமாகி, ஜனித்துக் கொண்டிருக்கின்றன. எங்கும் அமைதியின் ஆட்சி.

பக்தியின் கனிவில், சீடர்கள் தியானத்தின் விளிம்பில் நின்று, குருவின் புண்ணிய போதனைகளைக் கண்ணியத்துடன் மனங்களில் பதித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஏகனின், சுருக்குகள் கட்டவிழ்ந்து வழிந்து கொண்டிருக்கும்போது, அமைதியின் பூரண கட்டுப்பாட்டில், ஞானம் கோலோச்சிக் கொண்டிருக்கின்றது.

"இறைவன் தூய்மையானவன். அவன் எண்ணங்களும், செய்கைகளும் தூய்மையானவைகளே. ஏகனின் பார்வையில், மனிதர்கள் எல்லோரும் மேலானவர்களே. மனிதனில் அவன் இனப்பாகுபாடோ அல்லது சாதிப் பாகுபாடோ காண்பதில்லை. தூய்மையான உள்ளங்களை அவன் ரசிக்கிறான். அவைகளிலேயே அவன் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதேவரின் சிந்தனைத் தொடர். நீண்டு கொண்டிருக்கிறது.

மறுகணம், அமைதியின் ஆட்சி தடுமாறுகிறது. கீதை உபதேசத்தில், காண்டீபன் குருவாகிறான். கண்ணன் கேள்வியாகிறான்.

சீடர்கள் மத்தியில் பெரும் சலசலப்பு.

'குருதேவா! தூய்மையான உள்ளங்களை நாங்கள் எப்படி அறியலாம்? தூய்மையின் லட்சணங்கள் என்ன? ஏகனின் பார்வையில் மனிதர்கள் எல்லோரும் மேலானவர்களாக இருக்கும்போது, எப்படி அவர் களிடம் தூய்மையற்ற இதயங்கள் இருக்க முடியும்?.......'

சீடனொருவனின் சிந்தையில் கருக்கட்டிய கேள்வி, சிசுவாகப் பிரசவமாகிறது.

குருதேவர், நேத்திரங்களை அகல விரித்து சீடனை நோக்குகிறார்.

அக்கினிக் குண்டத்தில் பசுநெய் வார்க்கப்படு கிறது. காண்டீபனின் தேர் நகர்கிறது.

"தூய்மை என்பதே ஈசன் தான். இறைவனின் மேலான படைப்பாகிய மனிதன், எப்பொழுது இன்னொரு மனிதன் மேல் அன்பும், பாசமும், கருணையும் கொள்கிறானோ அப்பொழுதே அம்மனிதனின் இதயம் தூய்மையடைந்து விடுகிறது. தூய்மையற்ற இதயம், அழுக்கடைந்த குப்பைத் தொட்டியைப் போன்றது. அதில் பஞ்சமாபாதகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடி கொண்டிருக்கின்றன. அழுக்கடைந்த இதயங்களில் ஏகன் குடியேறுவதேயில்லை." குருதேவரின் விரிவான விடையில், சீடர்கள் புஷ்பங்களாகின்றனர்.

சந்தேக வேட்கையில் மீண்டும் சீடன் களத்தில் குதிக்கின்றான்.

போர்க்களம் பிரகாசிக்க, நாண்கள் முறுக்கேறுகின்றன. காண்டீபன் நிலைகண்டு கண்ணன் புன்னகை செய்கிறான்.

"மன்னிக்க வேண்டும் குருதேவா!; ஒரு மனிதனின் உள்ளத்தில் உள்ளதை, அவனைப் படைத்த ஆண்டவனால் மட்டும்தான் அறியமுடியும். ஆனால், எம்போன்ற மனிதப் பிறவிகளினால், ஒரு மனிதனின் உள்ளத் தூய்மையினை எப்படிப் புரிதல் முடியும்?." தத்துவம் பட்டை தீட்டப் படுவதினால், ஞானம் ஒளி பெற்றுக் கொண்டிருக்கிறது.

"காந்தவிசைக் கோட்டில் இரும்புத் துகள்கள் எப்படிக் கவரப்படுகின்றதோ, அதைப்போன்றே ஒரு தூய்மையான உள்ளம் இன்னொரு தூய்மையான உள்ளத்தைக் கவர்ந்திழுக்கும் சக்தி உள்ளதாயிருக்கும். அச்சக்தியே ஞானம்."

குருதேவர், பதிலை உமிழ்ந்துவிட்டு சீடர்களை நோக்குகின்றார்.

சீடர்கள் மத்தியில் மீண்டும் சலசலப்பு.

"ஞானத்தை எல்லோரும் அடைதல் முடியுமா?"

சீடனின் கேள்வியில் களம் கனக்கிறது. தேர் வேகமாக நகர்கிறது. காண்டீபன் நிமிர்ந்து நிற்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பக்குவம் உள்ள எல்லா உள்ளங்களினாலும், ஞானத்தை அடைதல் முடியும். காலமெல்லாம் கோயில்களை வலம் வருவதினாலோ அல்லது அவைகளைப் பிரதிஷ்டை பண்ணுவதினாலோ ஞானத்தைப் பெறுதல் முடியாது. ஏகனின் மேலான படைப்பாகிய மனிதனின் இதயமே கோயில். அதில் தூய்மையும், பாசமும், மானிடநேயமும் இருந்தால், ஞானம் என்னும் ஏகன் தொடர்ந்து அங்கே வாழ்ந்து கொண்டே இருப்பான்."

கொக்கிறகுத் தாடியைக் கோதிவிட்டு, குருதேவர் சிரிக்கிறார்.

பூரணமடைந்த சீடன் கமண்டலத்தைக் கையிலேந்தி, உறுதியுடன் சுவடுகளைப் பதித்துக்கொண்டிருக்கிறான். தூய்மையான இதயங்களைத் தேடி நடந்துகொண்டிருக்கும் சீடனை, குருதேவர் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்.

அவன், பயணம் பக்குவமாகிவிட்டது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி

வண்ணத் தடாகம். அதன் நடுவில் சில கன்னித் தாமரைகள், அழகான இலைகளை அகல விரித்துக் கொண்டு, ஆனந்தமாக நிற்கின்றன.

இளம் ஞாயிறு இன்பத்துடன் தன் பொற்கரங் களை விரித்து விண்ணை நோக்கி வீறு நடைபோடு கிறான். ஞாயிற்றின் வரவில் சிந்தையிழந்த பனித் துளிகள் பரிதவித்து நிலைகுலைகின்றன. அப்பொழுது, தடாகத்தின் மத்தியில் நிற்கும் தாமரைச் செடி யொன்றினது இலையின் வயிற்றில், சில நீர்த்துளிகள் நிலையின்றித் துடித்துக் கொண்டிருக் கின்றன.

இவைகளுக்குள் இன்று என்றுமில்லாத விசித்திரப் போட்டி. "நண்பர்களே! உங்களில் நான்தான் மிகப் பெரியவன். எனக்குத்தான் எல்லாம் தெரியும். நான் நன்றாகப் படித்தவன். என்னை யாரும் அசைக்க முடியாது. நானே பலவான். ஆகையினால் எல்லோரும் ஓடிவந்து என்னோடு சேர்ந்து கொள்ளுங்கள்." என்று ஒரு பெரிய நீர்த்துளி அகம்பாவம் பிடித்து சக நீர்த்துளிகளை பார்த்துக் கூவிக் கொண்டிருக்கிறது.

"போய்விடாதீர்கள்! அவன் பெரிய ஏமாற்றுக் காரன். உங்கள் எல்லோரையும் ஏமாற்றப் பார்க் கிறான். உங்களில் நான்தான் மிகப் பெரியவனும், படித்தவனும், பலவானும். உடனே எல்லோரும் ஓடிவந்து என்னோடு சேர்ந்துகொள்ளுங்கள்." என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஒரு பெரிய நீர்த்துளி ஆணவத்துடன் கூறி ஆனந்திக்கிறது. விசித்திரப் போட்டி விரிந்து கொண்டே இருக்கிறது.

அதே நேரம், எங்கிருந்தோ தவளையொன்று கிளம்பித் தாமரை இலையின் மேல் பாய்கிறது. வீரப் போட்டியிட்ட நீர்ததுளிகள் இருந்த இடமின்றி மறைகின்றன!

தாமரை இலை, இருந்த இடத்திலேயே அமைதியாகக் கிடக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்கள்

நடுநிசி, உலகம் அமைதியின் சின்னமாகிக் கிடக்கிறது. அப்பொழுது, பொது மையவாடியில் வாழும் பேயொன்றும், செல்வச் சீமான்களை அடக்கம் செய்யும் மையவாடியில் வாழும் பேயொன்றும் சந்திக்கின்றன.

“நண்பா, என்றுமில்லாதவாறு இன்று ஏன் வேதனையோடு போய்க் கொண்டிருக்கிறாய்?”

பொது மையவாடியில் வாழும் பேய் சீமான்களை அடக்கம் செய்யும் சிறப்பு மையவாடியில் வாழும் பேயைப் பார்த்துக் கேட்டது.

“என்னுடைய இடத்தில் ஒரு வினாடியும் என்னால் இருக்கமுடியவில்லை. இரவும் பகலும், என் மையவாடியில் புதைக்கப்பட்டிருப்பவர்கள் போடும் கூச்சலையும், வேதனையையும் என்னால் கேட்டுக் கொண்டிருக்கவே முடியவில்லை: சதா அழுது கொண்டிருக்கும் அவர்களின் அலறல்களைக் கேட்டு, கேட்டு என் செவிப்பறைகளே வெடித்து விடும் போல் இருக்கிறது. எல்லாப் பாவாத்துமாக்களும் ஒன்று சேர்ந்து என் நிம்மதியையே கெடுத்துக்கொண்டி ருக்கின்றன.”

சிறப்பு மையவாடியில் வாழும் பேய், தன் பயங்கர வாழ்வைக் கூறிவிட்டு அழுதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவம்; உன்னைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. எவ்வளவு உயர்ந்த மையவாடியில் வாழும் உனக்கு இப்படியொரு துர்ப்பாக்கிய நிலையா..? சிறப்பு மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டால் இறுதி நாள் வரை நிம்மதியாகவும் பக்குவமாகவும் உறங்கலாம் என்று காணிகளையும், பூமிகளையும் சிறப்பு மையவாடியின் பராமரிப்புக் காகவும் நிர்வாகத்துக்காகவும் எழுதிக் கொடுத்துவிட்டுப் போனவர்களுக்கா இத்தனை கொடுமைகள்? கேட்கவே மனம் கொதிக்கிறது."

பொது மையவாடியில் வாழும் பேய், பேசிவிட்டு அமைதியானது.

"அதுசரி, உன்னுடைய மையவாடியின் நிலை எப்படி? என் நிலைதானா? உனக்கும் இதே கதிதானா?"

சிறப்பு மையவாடிப் பேய் கேட்டது.

"உன்னுடைய நிலைக்கு என் நிலை எதிர் மாறானது. என் மையவாடியில் சப்தமே இல்லை. இரவும் பகலும் அமைதிதான். அங்கு புதைக்கப்பட்ட எல்லா ஆத்மாக்களும் அமைதியாக உறங்கிக்கொண் டிருப்பதால், எனக்கு அங்கு இருக்கவே பிடிக்க வில்லை. எங்கும் அமைதியின் ஆட்சி! இந்தச் சூழலில் எப்படித்தான் வாழமுடியும்?"

பொது மையவாடிப் பேய்; தன் நிலையைக் கூறிவிட்டுச் சிரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பு மையவாடியில் வாழும் பேய்க்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படியாவது, பொது மையவாடிக் குப் போய்விடத் துடித்தது.

"நண்பா, கொஞ்சக் காலத்திற்காவது என்னை உன்னுடைய மையவாடியில் வாழ்வதற்கு விடு. உன் கால்களில் விழுந்து கெஞ்சிக் கேட்கிறேன். எனக்கு எப்படியாவது நிம்மதியைக் கொடு."

பொது மையவாடிப் பேயிடம் சிறப்பு மையவாடிப் பேய் கால்களில் விழுந்து கெஞ்சியது. மறுகணம், பொது மையவாடிப் பேய், சிறப்பு மையவாடிக்கும் சிறப்பு மையவாடிப் பேய் பொது மையவாடிக்கும் சென்றன. நிமிடங்கள் மணித்தியாலங்களாயின. சிறப்பு மையவாடிப் பேய், பொது மையவாடியில் உலகையே மறந்து அமைதியாக உறங்கிக்கொண் டிருந்தது.

பாவம்! சிறப்பு மையவாடிக்குச் சென்ற பொது மையவாடிப் பேய், பயங்கரமாகக் கத்திக்கொண்டு பொது மையவாடிக்கு ஓடிவந்து, சிறப்பு மையவாடிப் பேயிடம் அழுதது.

"நண்பா, என்னால் ஒரு வினாடியுமே அங்கே இருக்க முடியாது. அங்கு புதைக்கப்பட்ட எல்லோரும் சேர்ந்து தொண்டை வெடிக்கக் கத்துகிறார்கள். அங்கே கிடப்பவர்கள் எல்லோரும் ஏழைகளைச் சுரண்டிக் கொழுத்தவர்கள். மக்களையெல்லாம் ஏமாற்றி அவர்கள் உழைப்புக்களினால் தங்கள் குடும்பங்களையும், குலங்களையும் உயர்த்திய கொடுமையாளர்கள். அவர்களின் வேதனையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலங்களை என்னால் கேட்கவே முடியவில்லை. ஏழைகள் வாழுகின்ற பொது மையவாடியே எனக்கு வேண்டும். தயவு செய்து இங்கிருந்து போய்விடு."

கெஞ்சியபடி பொது மையவாடிப் பேய் அழுதது. சிறப்பு மையவாடிப் பேய் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பின் கோலங்கள்

அவன் கைதேர்ந்த சிற்பி. எண்ணற்ற அழகிகளின் வண்ணச் சிலைகளைக் கண்ணைக் கவரும் வண்ணத்தில் வடித்தெடுத்து, தன் கலாமண்டபத்தை அழகூட்டி, இரவும் பகலும் இன்ப உலகில் மூழ்கிக் கொண்டிருக்கிறான். ஆழங்காண முடியாத அவன் கற்பனையின் பிம்பங்களான அச்சிருஷ்டிகள், நாலா பக்கமும் கோலவிழி காட்டி, குறுநகை உமிழ்ந்து கொண்டிருந்தன.

சிற்பியின் புகழ் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தது. உயிர்த்துடிப்புள்ள அவ்வதியற்புத சிருஷ்டிகளை வருவோரும் போவோரும் வாயாரப் புகழ்ந்தனர், வாழ்த்தினர். ஒருநாள், சிற்பி என்றுமில்லாத கற்பனையில் மூழ்கினான். கற்பனையின் முடிவு; தன் சிருஷ்டிகள் அனைத்துக்கும் உயிர் வரவேண்டுமென்று இரவும் பகலும் ஊண் உறக்கமின்றிக் கடவுளைத் தியானித்தான்.

நாட்கள் நகர்ந்தன, கலாமண்டபம் கவனிப்பாரற்று இருள் சூழ்ந்து கிடந்தது. எங்கும் ஒரே அமைதி. சிற்பி, தியானித்துக்கொண்டே இருந்தான். மக்கள், எதுவுமே புரியாமல் திகைத்தனர்.

சிற்பியின் தவத்தால் கட்டுண்டு கடவுள் தோன்றினார். மறுகணம், கற்சிலைகள் யாவும் உயிர் பெற்றன. கலா மண்டபம் களிப்பில் மூழ்கியது.

சிற்பி, வானத்தைப் பிடித்த பூரிப்பில் தன்னையே மறந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்பெற்ற சிலைகளுக்கிடையே விசித்திரப் போட்டி. "எங்களில் யார் பேரழகு நிறைந்தவள்?" சிலைகளைப் படைத்த சிருஷ்டிகர்த்தாவிடமே உயிர்பெற்ற சிலைகள் கேட்டன.

பாவம்! அழகின் சின்னமாக விளங்கிய கலாமண்டபம், அமைதியிழந்தது. பார்க்குமிட மெல்லாம் ஒரே பரபரப்பு- பதற்றம்! கேள்வியோ, விடை கிடைக்காமல் தவிக்கிறது. உயிர்பெற்ற அழகிகள், உலகை மறந்தனர்.

சிற்பியோ திகைத்தான்! ஒவ்வொன்றும் வெவ்வேறு அழகினை வெளிப்படுத்தும் அவன் சிலைகளில் எது சிறந்தது? எது அழகு?

பாவம்! அவன் சித்தம் கலங்கித் தன்னைப் படைத்த இறைவனிடமே, மீண்டும் மண்டியிட்டுக் கொண்டிருக்கிறான்; அழகிகளின் உயிரைப் பறிப்பதற்கு.

கடவுள் இன்னும் காட்சியளிக்கவில்லை. அழகிகள் எல்லோரும் சிரித்துக் கொண்டிருக் கின்றனர். படைப்பின் தத்துவத்தைப் புரியாத சிற்பி, பைத்தியமாகி, அணு அணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறான்.

கலாமண்டபம், அழகிகளின் ஆட்டத்தில் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

மெய்ப்பொருளாகிய இறைவன், சிற்பியைப் பார்த்து முறுவலிக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிம்பங்கள்

இருளின் புணர்ச்சியில் வேட்கையுற்று, மதுவுண்ட வண்டாகிக்கிடக்கும், உலகின் நிஷ்டையில் பொறாமைகொண்டு, ஆந்தைகளும், கோட்டான் களும், தெரு நாய்களும் குடல்தெறிக்க கத்திக் கொண் டிருக்கின்றன. இளந்தென்றலின் ஸ்பரிசம் உணர்ச் சியின் ஓடையாகிறது. சிறிய ஓலைக்குடிசை யொன்று ஏழ்மையின் பிரசவ நோக்காட்டில் ஜனித்து, தனிமையின் நித்திய தாலாட்டில் துயின்று கொண்டிருக்கிறது. இறுதி மூச்சோடு போராடிக் கொண்டிருக்கும் குப்பி விளக்கின் பக்கத்தில் கிழவன் ஒருவன் சாந்தமே உருவாகிக் குந்திக்கொண்டிருக் கிறான். காலதேவனின் பவனியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் அவன் குழி விழுந்த நேத்திரங்கள், ஜீவமரணப் போரில் முன்னேறிக் கொண்டிருக்கும் குப்பிவிளக்கில் நிலை குத்தி நிற்கின்றன. அங்கே, ஏகனின் திருவிளையாடல் மொட்டவிழ்கிறது. விளக்கின் ஒளியில் இரு சிறிய நுளம்புகள் தங்கள் பிம்பங்களைப் பார்த்துப்பார்த்து எக்காளமிடுகின்றன.

"நானே பலவான். நானே பெரியவன். இன்று தான் என்னையே நான் நன்கு உணர்ந்தேன். என் உருவத்தைப் பார்க்கும்போது எனக்கே வியப்பாக இருக்கிறது. இனி நான் யாருக்குமே பயப்படப் போவ தில்லை. என் உருவத்தைக் கொண்டு இந்த உலகத் தையே ஆட்டிப்படைக்கப் போகிறேன். இனி நானே தலைவன். நானே அரசன். உலகம் இனி என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலடியில். இதோ! என் எதிரில் குந்திக்கொண்டி ருக்கும் இந்தக் கிழவனை இந்த நிமிடமே கொன்று விடப்போகிறேன்."

ஒளியில் தெறிக்கும் பிம்பத்தில் மதிமயங்கிய நுளம்பொன்று தன்னையே மறந்து கூறிவிட்டு, குந்திக் கொண்டிருக்கும் கிழவனின் உடம்பில் தன் ஊசியைப் பலம் கொண்ட மட்டும் பதித்துக் குருதியை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது.

ஏகனின், விசித்திர விளையாட்டில் தத்துவத்தின் கரு உருமாறிக் கொண்டிருக்கிறது. அறியாமையின் அடித்தளத்தில் போர்க்களம் ஜனிக்கிறது. கிழவன் எதையுமே சட்டை செய்யாது சாந்தமே உருவாகக் குந்திக் கொண்டிருக்கிறான்.

"வார்த்தைகளை அளந்து பேசு. உன்னைப் பார்க்கிலும் நானே பெரியவன். இதோ! என் உருவத்தைப் பார்! உன் உருவத்தைப் பார்க்கிலும் இரு மடங்கு பெரிதாக இருக்கிறது. நான் நினைத்தால் இந்த உலகத்தையே ஒரு நொடிப்பொழுதில் அழித்து விடுவேன். என் சக்திக்கு நிகர் இனி என் சக்தியே! இனி நானே பெரியவன். நானே பலவான். இனி, உங்களுக்கெல்லாம் நானே தலைவன். நீங்கள் எல்லோரும் என் அடிமைகள். இன்று முதல் என் ஆணைப்படியே நீங்கள் எல்லோரும் ஒழுகவேண்டும்... இதோ! என் சக்தியின் மகிமையைப் பார். இந்தக் கிழவனை இப்பொழுதே கொன்று விடப்போ கிறோன்."

பிம்பத்தில் மயங்கிக் கிடந்த அடுத்த நுளம்பு, ஆத்திரத்துடன் கூறிவிட்டு, அமைதியாகக் குந்திக் கொண்டிருக்கும் கிழவனின் உடம்பில் தன் சின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசியைப் பதித்து வேகமாக குருதியை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. போர்க்களம் அக்கினிஜுவாலை யில் கருகிக் கொண்டிருக்கிறது. ஏகளின் நித்திய சக்தியில், நுளம்புகளின் பிம்பங்கள் நாலா பக்கமும் சிதறுகின்றன. காலதேவன், நேரத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறான்.

காலத்தின் நோக்காட்டில் கிழவன், தன் பக்கத்தில் மங்கிய ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த குப்பி விளக்கை அணைத்துவிட்டு, அமைதியாகத் தூங்கிக் கொண்டிருக் கிறான்.

விளக்கின் ஒளி மறைய, நுளம்புகளின் பிம்பங்கள் சிதைகின்றன. இருளின் ஆட்சியில் குடிசை அடிமை யாகிக்கிடக்கிறது. பாவம்! நுளம்புகள் தங்கள் உண்மை யான உருவங்களையே காண முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

கிழவன் உலகையே மறந்து உறங்கிக்கொண்டிருக் கிறான்; ஏகன், எல்லாவற்றையும் பார்த்து விழித்துக் கொண்டிருக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழஞ் செருப்புகள்

அது ஒரு செருப்புக்கடை. அதில் விலையுயர்ந்த ஆடம்பரச் செருப்புகள் நிறைந்து கிடந்தன. நவீன பாணியில் உருவாக்கப்பட்ட செருப்புகள், கண்ணாடி அலுமாரிகளிலிருந்து மினுங்கிக் கொண்டிருந்தன. புதுமையை விரும்பும் பணக்காரர்கள், அக்கடையிலிருந்து வண்ணச் செருப்புக்களை வாங்கிச் சென்றனர். கடையில் வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது.

அக்கடையில் பணக்கார வாலிபனொருவன், விலை உயர்ந்த செருப்புச் சோடி ஒன்றை வாங்கினான். அச்செருப்புக்கள் மன்னர்கள் அணியும், செருப்புக் களைப்போல் இருந்தன. அவ்வளவு அழகு.

ஒருநாள், அவ்வாலிபன் தன் விலையுயர்ந்த வண்ணச் செருப்புக்களை போட்டுக்கொண்டு, ஆண்டவனைத் தொழுவதற்காக ஆலயத்தின் உள்ளே சென்றான். அவன் செல்லும்போது, ஆலயத்தின் வெளியே தன் செருப்புக்களை கழற்றி பக்குவமாக வைத்துவிட்டுச் சென்றான். அவ்வண்ணச் செருப்புக் களுக்கு பக்கத்தில், பழைய, அழுக்கான செருப்புக்கள் சில அமைதியாகக் கிடந்தன, அவைகளைப் பார்த்து வாலிபனின் அழகிய விலையுயர்ந்த செருப்பு மூக்கைப் பொத்திக் கொண்டது.

"சீ! ஒரே நாற்றம். அழுக்குப் பிண்டங்களே என் பக்கத்தில் நில்லாமல் தூர ஓடுங்கள்." பழஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருப்புக்களை வெறுப்புடன் பார்த்துக் கூறிவிட்டு, விலையுயர்ந்த செருப்பு காறி உமிழ்ந்தது.

'பைத்தியக்காரா! நீயும் நானும் யாரோ ஒருவனைச் சுமக்கும் தொழிலைத்தான் செய்கிறோம். எவனோ ஒருவனின் சுயநலத்திற்காக அழியும் நமக்குள் என்ன பேதம், பெருமை? சொந்த இனத்தையே கேவலப்படுத்தும் நீயும் ஒரு ஜீவனா? உன்னைப் பார்க்கவே எங்களுக்கு வெறுப்பாயிருக்கிறது. பேசாமல் வாயை மூடிச் சும்மா இருந்துகொள்."

புதிய செருப்பைப் பார்த்துக் கூறிவிட்டு பழைய செருப்புக்கள் நகைத்தன. போர்க்களம் ஜனிக்கிறது.

"சீ! வார்த்தைகளை அளந்து பேசுங்கள். என் தகுதியென்ன? மதிப்பென்ன? நான் சுமப்பவன் எங்கே? நீங்கள் சுமப்பவர்கள் எங்கே? எனக்கும் உங்களுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. நான் உங்களைப் பார்க்கிலும் பல மடங்கு எல்லாவற்றிலும் உயர்ந்தவன். என்னை, உங்களோடு ஒப்பிட்டுப் பேசுவதற்குக்கூட நீங்கள் தகுதியற்றவர்கள். நான் உங்கள் இனமே இல்லை. இங்கு, பேசாமல் வாயை மூடிக் கொண்டு ஓடிவிடுங்கள்..."

விலையுயர்ந்த புதிய செருப்புச்சோடி, கனல் தெறிக்கக் கத்திவிட்டு கொதித்தது.

"நீ எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும், எங்களைப் போன்று, ஒரு மனிதனைத்தானே சுமந்து கொண்டிருக்கிறாய். நீயொரு தேவனைச் சுமக்க வில்லையே....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய செருப்புக்களைப் பார்த்து பழஞ் செருப்புக்கள் கிண்டல் செய்தன. புதிய தத்துவம் விரிகிறது.

"என் எஜமான் பெரும் பணக்காரன். அவன் தேவனைப் பார்க்கிலும் உயர்ந்தவன். அவனைச் சுமப்பதற்கு நாங்கள் பாக்கியம் செய்திருக்க வேண்டும். உங்களைப் போன்ற ஊத்தைகளை அவனக்குப் பிடிப்பதேயில்லை. கத்தாமல் தூர ஓடிப்போங்கள். நாற்றம் மூக்கை அரிக்கிறது."

ஆத்திரத்துடன் கூறிய புதிய செருப்புச்சோடி, பழஞ் செருப்புகளுக்கு மீண்டும் காறி உமிழ்ந்தது.

பாவம்! பழஞ்செருப்புகள் மௌனமாகின. புதுச் செருப்புக்கள் எக்காளமிட்டுச் சிரித்தன.

இறைவனைத் தொழுதுவிட்டு வந்த இளைஞன், தன் விலையுயர்ந்த செருப்புச் சோடியை கால்களில் மாட்டி, பக்கத்தில் மௌனமாகக் கிடந்த பழஞ் செருப்புக்களை அலட்சியமாக மிதித்துக் கொண்டு இறுமாப்புடன் சென்றான்.

பழஞ்செருப்புக்கள் வேதனை தாங்கமுடியாமல், அழுதன. உயர்ந்தவன், திரும்பிப் பார்க்கவே இல்லை.

காலம் உருண்டது. இளைஞனின் விலையுயர்ந்த செருப்புக்கள் வாரறுந்து பழுது பார்ப்பதற்காக, சம்மான் ஒருவனின் கைகளில் தஞ்சமடைந்தன. அவன், விலையுயர்ந்த செருப்புக்களை பழுது பார்ப் பதற்காக ஏற்கனவே தன்னிடம் தஞ்சமடைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழஞ்செருப்புக்களோடு சேர்ந்து, கோணியொன்றில் கட்டி, மூலையில் போட்டான்.

பாவம்! உயர்ந்தவனைச் சுமந்த விலையுயர்ந்த செருப்புக்கள் சாதாரண மனிதர்களைச் சுமந்த பழஞ் செருப்புக்களோடு வாய்மூடி மௌனமாகிக் கிடந்தன. இன்று, அவைகள் எல்லாமே பழஞ்செருப்புக்கள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழ் !

அது, பலவருங்களாகப் பாழடைந்து கிடக்கும் சிறுவீடு. வௌவால்களுக்கும், எலிகளுக்கும் அது வாடகையின்றிப் புகலிடமளித்துப் புண்ணியம் தேடிக்கொண்டிருக்கிறது. இருளரக்கன் வீட்டைச் சுற்றிக் காவலிட்டுக் கொண்டிருக்கிறான்.

இருளரக்கனின் ஆட்சியில் களிப்புற்று ஆந்தை யொன்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது.

பயங்கரக் குற்றங்களைச் செய்துவிட்டு சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி வாழும் குற்றவாளிகளைப் போன்று, வௌவால்கள் பகலெல்லாம் பதுங்கி வாழ்ந்த அலுப்பில் சில ஆர்ப்பரித்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

வீட்டின் வளையென்றில், யோகாசனப் பயிற்சியில் சிரத்தையுடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பயிற்சி யாளனைப் போல், வௌவாலொன்று தலைகீழாகத் தொங்கிச் சிரசானமிட்டுக் கொண்டிருக்கிறது.

புதையல் எடுக்கச் சென்று பூதத்தால் விரட்டப் பட்டுத் தலைதெறிக்க ஓடிவரும் மந்திரவாதியைப் போல், எலியொன்று வௌவால் தொங்கிக் கொண்டிருக்கும் வளையால் ஓடிவருகிறது. ஓடிவந்த எலி தொங்கிக்கொண்டிருக்கும் வௌவாலைப் பார்த்து நிலைகுலைந்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, உனக்கென்ன பைத்தியமா? எவ்வளவு நேரமாகத்தான் தலைகீழகத் தொங்கிக்கொண்டிருக் கிறாய். உன் குறை எதுவாயிருந்தாலும் என்னிடம் தயங்காமல் கூறு. உடன் நிறைவேற்றுகிறேன்! வீணாகத் தலைகீழாகத் தொங்கி உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. வீண் பிடிவாதத்தை விட்டு, எல்லோ ரையும்போல் வந்து இருந்துகொள்." என்று வெளவாலைப் பார்த்து கூறியது, எலி.

எலியின் முகத்தில் என்றுமில்லாத இளஞ்சிரிப்பு.

"சகோதரா; உன் அன்புக்கு என் ஆழ்ந்த நன்றி. உலகில் வாழும் ஒவ்வொரு ஜீவராசிகளும் ஈசன் இச்சைப்படியே வாழுகின்றன. நானும் அவன் கற்றுத் தந்தபடிதான் வாழுகிறேன். இதுவே நியதி" என்று கூறியது வெளவால். வாழ்க்கையின் சூட்சுமம், ஒளி பெறுகிறது.

"எது நியதி? வாழத் தெரியாமல் எங்கள் வயிற்றில் நாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்வதா நியதி? ஈசன் மூளையை எல்லோருக்கும்தான் வைத் துள்ளான். அதனைப் பயன்படுத்தாமல் வாழ்வது மடமையல்லவா? உன்னைப்போல் தொங்கிக்கொண் டிருக்க என்னாலும் முடியும்" என்றது எலி. ஈசன் தத்துவமாகிச் சிரிக்கிறான்.

"அது மட்டும் உன்னால் முடியாது"; என்றது வெளவால். உடனே, எலிதன் வாலை வளையில் சுற்றி வெளவாலைப்போல் தலைகீழாகத் தொங்க எத்தனித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகணம், எதிர்பாராமல் கீழே விழுந்து உயிருக்காக அது போராடிக்கொண்டிருப்பதை பார்க்க முடியாமல் வெளவால் பறந்துகொண்டிருந்தது.

தன் பணியைப் பக்குவமாக நிறைவேற்றிவிட்ட வெற்றியில், எமன் எக்காளமிட்டுச் சிரிக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமே இறைவன்

புகழ்பெற்ற ஆலயத் திருவிழா. பார்க்குமிட மெல்லாம் பக்தர் கூட்டம். கேட்கும் குரல்கள் யாவும், இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருக் கின்றன. அணையை உடைத்து வரும் வெள்ளம்போல், பலவழிகளாலும் வந்து குவியும் பக்தர்களால் ஆலயம் நிரம்பி விம்மிக்கொண்டிருக் கிறது. ஆலயத்தைச் சுற்றி பல கடைகள் எழுந்து நிற்கின்றன. அங்கே, ஒரு கடையில் ஈசனின் வண்ணத் தோற்றங்களை மண்ணிலும், பளிங்கிலும், மரக்கட்டையிலும் வடித்து, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பெருமானின் அழகில் கட்டுண்ட இரு பக்தர்கள் கடையை நாடி வருகின்றனர். பக்தர்களின் வரவால் கடைக்காரனின் முகம் மொட்டவிழ்ந்த பூவைப் போல், மலர்கிறது. ஒரே மகிழ்ச்சி!

கடைக்கு வந்த பக்தர்கள், சிலைகளின் விலையைக் கேட்டு, விடைவேண்டி நிற்கின்றனர்.

"பளிங்குச் சிலைகள் ஒவ்வொன்றும் நூறு ரூபாய். மரச்சிலைகள் பத்து ரூபாய். களிமண் சிலைகள் இரண்டு ரூபாய் உங்களுக்கு இதில் எந்தச்சிலை வேண்டும்?"

சிலைகளின் விலையை சீக்கிரமாகக் கூறிவிட்டு, விற்பனையில் மும்முரமாகிக் கொண்டிருக்கிறான் கடைக்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி கரை புரண்டோடிக் கொண்டிருக்கிறது. பக்தர்களில் ஒருவர் பளிங்குச் சிலையொன்றை வாங்கி பக்குவமாக நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறார்.

அடுத்தவர், களிமண் சிலையொன்றை வாங்கித் தன் இடுப்பில் கட்டியிருந்த சீலையை அவிழ்த்து, அதில் சுற்றிக்கொண்டு இருவரும் நடக்கின்றனர். அவர்களுக்குள் ஒருவித இன்பக் கிளுகிளுப்பு. இறைவனை இதயத்துள் வைத்து சுமந்து செல்லும், இரு அடியார்களும் மண்ணுக்கும் நோகாது, மௌன முடன் நடந்து கொண்டிருக்கின்றனர்.

"மனமே இறைவன், மகிழ்ச்சியே அவன் தோற்றம். ஈகையே அவன் இயல்பு. ஈசனின் அடியார்களே, இந்த ஏழைக்கு ஏதாவது போடுங்கள்."

தெருவோரத்தில் குந்திக்கொண்டிருக்கும் பிச்சைக் காரன் ஒருவன் இரந்துகொண்டிருக்கிறான்.

அங்கே, களிமண் சிலையோடு வந்த பக்தர், சில சில்லறைகளையெடுத்து, பிச்சைக்காரனின் துண்டில் போட்டுவிட்டு, பளிங்குச் சிலையோடு வரும் தன் நண்பரைத் திரும்பிப் பார்க்கிறார். பெருமானின் பளிங்குச் சிலையை பக்தியில் மார்போடு அணைத்து, பக்குவமாக வரும் அவர், பிச்சைக்காரனின் முகத்தைக் கூடத் திரும்பிப் பார்க்காமல் நடந்துகொண்டிருக் கிறார். கடவுளும் மௌனியாகி அவரோடு போவது, அவருக்கு பரமதிருப்தி.

"மனமே இறைவன், மகிழ்ச்சியே அவன் தோற்றம். ஈகையே அவன் இயல்பு" பிச்சைக்காரன் எதையும் சட்டை செய்யாது இரந்துகொண்டே இருக்கிறான்.

திருவிழா, மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரன், ஆலயத்தின் உள்ளிருந்து பக்தர் களுக்கு தரிசனம் கொடுத்துக்கொண்டிருக்கும் பெருமான், வெளியே வரும்வரை, காத்துக் கொண்டிருப்பானா? பரமன்தான் பதில் கூற வேண்டும்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

அப்பொழுதுதான் முட்டையிலிருந்து வெளிவந்த கோழிக்குஞ்சுகள், தாயின் அணைப்பில் பிறக்கும் களிப்பில் சுகம் கண்டு, உலகையே மறந்து உல்லாசமாக இருக்கின்றன. புதிர் காண முடியாத புதுவித உலக மொன்றில் காலடி எடுத்து வைத்த ஆனந்தக் களிப்பில் அவைகள், மிதந்து கொண்டிருக்கின்றன. குஞ்சுகளை தாய்க்கோழி, தன் நேத்திரங்களில் எண்ணெய் வார்த்துக்கொண்டு கண்ணும், கருத்துமாக காத்துக் கொண்டிருக்கிறது. அங்கே, கோழிக் குஞ்சுகளின் குதூகலத்தைச் சாதகமாக்கிக்கொண்டு, பக்கத்து மரமொன்றில் மோனத் தவமிருந்த காக்கை; நொடிப் பொழுதில் பாய்ந்து, கோழிக்குஞ்சொன்றைக் கொத்திக்கொண்டு பறக்கிறது. எங்கும் ஒரே அமர்க்களம். குஞ்சைப் பறிகொடுத்த தாய்க்கோழி பதறித் துடித்துக் கொண்டிருக்கிறது.

மறுகணம், குஞ்சொன்றை இழந்த கோழிகளின் உரிமையாளன் கோழியோடு குஞ்சுகளையும் சேர்த்துக் கூட்டுக்குள் அடைத்து விடுகிறான். பரந்த உலகத் திலிருந்து பயங்கர உலகமொன்றுக்குப் படுமோசமான நிலையில் தூக்கி எறியப்பட்ட நினைப்பில், கோழிக் குஞ்சுகள் கூட்டுகள் கிடந்து கொக்கரிக்கின்றன. கோழிகளின் உரிமையாளன் நிம்மதியாக பெருமூச்சு விட்டபடி தன் வேலையைச் செய்கிறான்.

காக்கையொன்று, பக்கத்திலுள்ள மாமரத்தில் மீண்டும் மோனத்தவத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறது. காக்கையின் போக்கில் எவ்வித மாற்றமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் ஒரே அமைதி. கோழிகளின் உரிமையாளன், கூட்டில் கிடக்கும் கோழிகளின் பக்குவத்தினை உணர்ந்து, எதையும், சட்டை செய்யாது, தன் வேலையில் கண்ணும் கருத்துமாக முன்னேறிக் கொண்டிருக்கிறான். மரத்தில் மோனத்தவ மிருக்கும் காக்கையின் நேத்திரங்கள், சதா கோழிகள் அடைக்கப் பட்டிருக்கும் கூட்டையே நோக்கிக் கொண்டிருக் கின்றன.

கோழிக் கூட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் குஞ்சுகளில் ஒன்று, தான் சில மணித்தியாலங்கள் வாழ்ந்த புதுமை உலகத்தின் பூரிப்பையும், வனப்பையும் நினைத்து அதில் மயங்கி "சீ! இது என்ன உலகம்? எங்கும் இருள் மயம். எனக்கு இவ்வுலகம் பிடிக்கவேயில்லை. நான் முன்பிருந்த உலகிற்கே போகப் போகிறேன்." என்று கூறி மண்ணைத் தன் இள அலகினால் தோண்டுகிறது.

சேயின் போக்கை உணர்ந்த தாய்க்கோழி "மகனே! வேண்டாம் வீண் வம்பு. நீ, இந்த நிலையில் வெளியில் போனால் உன்னைக் கொன்றுவிடுவார்கள். இந்தப் பொல்லாத உலகத்தைப் பற்றி இன்னும் நீ அறிய வில்லை. நீ நினைப்பதுபோல் இவ்வுலகம் அவ்வளவு நல்லதல்ல. உனக்காக ஒரு கொலைஞன் அந்த மரக் கிளையில் காத்துக்கொண்டிருப்பது உனக்குப் புரியாது. எங்கள் எஜமான் மிகவும் நல்லவன். அவன் எங்களை மிகவும் நேசிக்கிறான். இவ்வுண்மையை நீ போகப் போகப் புரிந்து கொள்வாய். ஆகையினால், வீண் வம்பை விலைக்கு வாங்காமல் எங்களோடு அமைதியாக இருந்துகொள்" என்று புத்தி கூறியது. தாயின் புத்திமதிகளைத் துச்சமென மதித்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணைத் தோண்டும் முயற்சியில் வெற்றி பெற்ற கோழிக்குஞ்சு, கூட்டிலிருந்து வெளிப்பட்டு, ஆனந்தக் கூத்தாடியது. விரல் நொடிக்கும் நேரம்; மோனத்தவ மிருந்த காக்கை, கும்மாளமிட்ட குஞ்சைக் கொத்திக் கொண்டு பறக்கிறது. பாவம்! எதுவும் செய்ய முடியாமல் தாய்க் கோழி பதறுகிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிருஷ்டிகர்த்தா

பரந்த வயல்வெளி. நாலாபக்கமும் நெற்கதிர்கள். முற்றித் தாய்மைப் பேற்றினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிறைமாதக் கற்பிணியைப் போன்று, சோர்ந்து கிடக்கின்றன. இளம் தென்றல் மென்மையாக வீசிக் கொண்டிருக்கிறது. தென்றலின் ஸ்பரிசத்தால், நெற் கதிர்கள் தங்களையே மறந்து கிடக்கின்றன.

முதிர்வின் மோகன நிலையில், உலகம் தென்றலோடு கலந்து கொண்டிருக்கிறது. பிறப்பின் தத்துவத்தைப் போதித்துக் கொண்டிருக்கும் உலகத்தைக் கண்டு, இயற்கை எக்காளமிட்டுச் சிரிக்கிறது.! எங்குமே மதுவின் வெறி.

வயலின் ஓரிடத்தில் சின்னக் குருவிகள் சில சாய்ந்து கிடக்கும் கதிர்களில் அமர்ந்து பிதுங்கிக் கொண்டிருக்கும் நெல்மணிகளை அவாவுடன் கொத்திக்கொண்டிருக்கின்றன.

குருவிகளின் போக்கில் அமைதி குலைந்த முற்றிய நெற்கதிர் ஒன்று வெறுப்புற்று விம்முகிறது.

"என்னருமைக் குருவிகளே! யாரோ ஒருவன் பாடுபட்டு உழைத்து வைத்துள்ள பயனை இப்படியெல்லாம் கண்மூடித்தனமாக நீங்க விரயம் செய்வது முறையாகுமா? அடுத்தவனின் சொத்தை அவன் அனுமதியின்றிப் புசிப்பது அறமாகுமா? எத்தனை இரவுகள் கண்விழித்து எங்களைப் பாதுகாத்தான். மாடமாளிகைகளில் வாழும் சுரண்டல் வர்க்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினரையும், மண்குடிசைகளில் புழுக்களைப் போன்று ஒட்டிக்கிடக்கும் ஏழைகளையும் வர்க்க பேதத்திற்கு அப்பால் நின்று ஒன்றுபோல் காப்பாற்றும் புனிதப் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஏழை விவசாயியின் வயிற்றில் நெருப்பைக் கொட்டாமல் இங்கிருந்து பறந்துவிடுங்கள்." என்று கூறியது அந்த முதிர்ந்த நெற்கதிர். கதிரின் பேச்சைக்கேட்டு, பக்கத்தில் நின்ற ஏனைய கதிர்களும் தலையசைத்து மகிழ்ந்தன. எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம்!

"சீ! கிழட்டுப் பயலே! வாயை மூடு. எம்மைப் படைத்த இறைவன்; உங்களை எங்களுக்காகத்தான் படைத்திருக்கிறான். நீங்க஌ெல்லாம் இயற்கையின் சொத்து. இதனால், உங்களை நாங்கள் தாராளமாகப் புசிக்கலாம். ஒன்றின் அழிவில்தான் மற்றதின் உயிர்ப்பு நிகழ்கிறது. எனவே, நீங்கள் அழியத்தான் வேண்டும். நாங்கள் வாழத்தான் வேண்டும். வீணாக, விவசாயி, உழைப்பு பயன் என்றெல்லாம் தொண்டை கிழியக் கத்திக்கொண்டு சாகாதீர்கள்." என்று உபதேசித்த வாயாடிக் குருவியொன்று புன்னகை உமிழ்கிறது. மின்னல் திடீரென வெடிக்கிறது, புதிய சுருதியில் தத்துவ கீதம் பிறக்கிறது, ஜனித்த சுருதிக்கு ஏற்ற முறையில், எல்லாக் குருவிகளும் பின்னணி பாடுகின்றன.

"சின்னக் குருவியே! உன் அறிவுதான் தத்துவம் என்று எண்ணி விடாதே. கர்த்தா இன்றி சிருஷ்டி இல்லை. இதுதான் உலக இயல்பு. உன் பெற்றோர் இன்றி நீ இல்லை. இதுபோல் விவசாயி இன்றி நாங்களில்லை. எல்லாம் ஒன்றின் அடிப்படையில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை. ஆகையினால், எங்களின் படைப்பாளி வருவதற்கு முன், இங்கிருந்து பறந்துவிடுங்கள்" என்று கூறிக் கதிர் தன் உடலை ஆட்டிக் கொண்டது.

எல்லையற்ற ஆழியில், எண்ணற்ற அலைகள் எழுந்து மடிந்துகொண்டே இருக்கின்றன. கிளிஞ்சல்கள் தரையில் சிதறுகின்றன. ஆனால், கடல் கடலாகவே இருந்துகொண்டிருக்கிறது.

"கதிரே! உன் பேச்சை உன்னிடமே வைத்துக் கொள். வீணாக எங்களுக்கு உபதேசம் செய்து மண்டையை உடைக்காதே. சிருஷ்டிகள் எல்லாம் ஏகனின் சொந்தமே." என்று கூறிய வாயாடிக் குருவி நெல் மணிகளைப் புசிப்பதில் மும்முரமாகியது. அந்த குருவியின் புனித அடிச்சுவடு களைச் சீடர்கள் பக்தியுடன் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

அப்பொழுது, விவசாயி தன் வயல் வரப்பில் நடந்து வருகிறான். சிருஷ்டிகளின் பொலிவினைக் கண்டு பூரிப்புடன் வரும் அவன் நேத்திரங்கள் நெல் மணிகளைக் கொத்திக்கொண்டிருக்கும் குருவிகளைக் காணுகின்றன.

மறுகணம், ஆத்திரத்துடன் கையிலிருந்த தடியை குருவிகளை நோக்கி வீசுகிறான். எங்கும் பதற்ற நிலை. மரண ஓலம். பாவம்! வாயாடிக் குருவியுடன் இன்னும் சில குருவிகளும் சேர்ந்து பிணமாகிக் கிடக்கின்றன. சிருஷ்டிகர்த்தா முறுவலிக்கிறாள்.

நெற்கதிர்கள், இளங்காலையின் இன்பக் கதகதப் பில், பூரித்து நிற்கின்றன.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி

சிறிய மேசையின் மேல் மெழுகுவர்த்தி ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது. மெழுகுவர்த்தியின் ஒளியில் மனிதன் ஒருவன் எதையோ அக்கறையோடு எழுதிக் கொண்டிருக்கிறான். அவன் ஒரு எழுத்தாளன். சிந்தையில் வரும் சிறந்த எண்ணங்களை எழுத்தில் வடித்து உலகத்திற்கு அளிப்பதில் அவனுக்கு உள்ளப் பூரிப்பு. எழுத்தாளனின் மதிப்புக்காகத் தன்னையே தியாகம் செய்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தி மெதுவாகச் சிரிக்கிறது.

“ஏன் சிரிக்கிறாய்? இந்த உலகத்தில் வதியும் மக்களின் நல்வாழ்வே என் வாழ்வென்று, என் சுக போகத்தை வெறுத்து, என்னையே தியாகம் செய்து கொண்டிருக்கும் என்னைப் பார்க்கும்போது உனக்கு சிரிக்கவும் மனம் வருகிறதா?” என்று எழுத்தாளன் கூறிவிட்டு மீண்டும் தன் வேலையில் முன்னேறிக் கொண்டிருக்கிறான்.

“நீயா தியாகி? உன் பெருமைக்கும் மதிப்புக்கும் என்னையே தியாகம் செய்துகொண்டிருக்கும் நானே தியாகி. என் தியாகத்தில்தான் உன் மதிப்பும் உலக மக்களின் நல்வாழ்வும் தங்கியிருப்பதை மறந்து விடாதே!” என்று மெழுகுவர்த்தி கூறிவிட்டு மீண்டும் தன்னை உருக்கிக்கொண்டிருக்கிறது. சில வினாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் மெழுகுவர்த்தியின் ஒளி மங்கி எங்கும் இருள் சூழ்கிறது. அது மடிந்துவிட்டது.

மறுகணம்,

உலகமக்களின் நல்வாழ்வுக்காவும், யாரோ ஒருவனின் மதிப்புக்காவும் தன்னையே அர்ப்பணித்த பெருமையில் மெழுகுவர்த்தி இருந்த இடத்திலேயே மடிந்து மௌனமாகி சிதைந்து கிடக்கிறது. எழுத்தாளன், ஒளியின்றி எழுத முடியாமல் இன்னொரு மெழுகுவர்த்தியைத் தேடிக் கொண்டிருக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரணம்

இறைவனின் ஈடு இணையற்ற சத்திய ஒளி, அண்டமெல்லாம பட்டுத் தெறித்து பூவுலகம் பூபாளம் பாடிக்கொண்டிருக்கிறது. எல்லையற்ற அவ்வொளி யில் பரிணாம சூத்திரங்கள்யாவும் பட்டை தீட்டப் பட்டு, பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. நித்திய ஒளியில், காந்த விசைக்கோட்டில் இழுபடும் இரும்புத் துகள்களைப்போல், தத்துவங்கள் அனைத்தும் இழுபட்டுக்கொண்டிருக்கின்றன. ஒளி மெய்யாகி அதன் ஆளுமையில் பூரணமாகி, அப்பழுக்கற்ற ஜோதியில் வியாபித்து நிற்கின்றது.

எங்கும், இளங்காலையின் கதகதப்பு; இன்பப் பொலிவு. அது ஒரு சிறிய கம்மாலை. கம்மாலையின் துருத்தி அக்கினி ஜுவாலையைக் கக்கிக் கொண்டிருக் கிறது. கொல்ல னொருவன் நேரான இரும்புப் பட்டங் களைத் தட்டி நிமிர்த்தி, துண்டுகளாக வெட்டி யெடுத்து, அக்கினி ஜுவாலையில் காய்ச்சி, அவை களை வட்டங்களாக வடிவமைத்துக் கொண்டிருக் கிறான். உருவாக்கப்பட்ட வட்டங்களின் முனை களைச் சேர்த்து ஒட்டுவதில், அவன் உதவியாளன் விசையேற்றிவிட்ட பம்பரம்போல் சுழன்றுகொண்டி ருக்கிறான். வெட்டித் துண்டங்களாக்கப் பட்ட இரும்புப் பட்டங்களை, ஒன்றும் பாக்கி வையாமல் கபளீகரம் செய்துவிட வேண்டுமென்ற அகோர வெறியில், அக்கினிச் ஜுவாலையை துருத்தி மூச்சுப் பிடித்துக் கக்கிக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அஹ்ஹா!......ஆஹ்..!" பயங்கரச் சிரிப்பொலியினால் மௌனம் அழிகிறது. ஆணவம் ஜனிக்கிறது. வளைத்து கிடக்கும் சற்றுப் பெரிதான வட்டமொன்று தன்னையே மறந்து எக்காளமிட்டுச் சிரிக்கிறது. சிறிய வட்டங்கள் வாய் மூடி மௌனிகளாகிக் கிடக்கின்றன. ஆணவம் பொங்கி வெடிக்கிறது.

"இந்த உலகத்தில் நானே பெரியவன். நானே பலவான். நானே தேவன். நானே மன்னன். இந்த அண்ட சராசரம் அனைத்தும் எனக்கே சொந்தம். என் சக்தியின் முன்னே நீங்கள் எல்லோரும் தூசிகள்."

பருமனைத் தேராக்கி, அமைதியைக் களமாக்கி, ஆணவத்தால் ஆட்சியைப் பிடித்து, தான்தோன்றித் தனமாகத் தானே தனக்கு கிரீடமணிந்து, கிலிபிடித்துத் துடிக்கும் பெரிய வட்டத்தின் முன்னே சிறிய வட்டங்கள் எல்லாம் சென்னி தாழ்த்திக் கிடக்கின்றன.

கொல்லன் வட்டங்களை வளைத்துப் போடுவதில் தீவிரமாகிக் கொண்டிருக்கிறான். வளைத்துப் போடும் வட்டங்களின் முனைகளைச் சேர்த்து ஒட்டுவதில் கொல்லனின் உதவியாளன் கருமமே கண்ணாகி முன்னேறிக் கொண்டிருக்கின்றான். களையாது துருத்தி கருவழிக்கும் கத்தியைப்போல், சளையாது நெருப்பை ஊதிக்கொண்டே இருக்கிறது.

"விண்ணும் நானே, மண்ணும் நானே. என் செங்கோலின் ஒளியின்றி இந்த உலகில் எதுவுமே ஒளிபெற முடியாது. என் சக்தியின் தோற்றப்பாடுகள் தான் நீங்களும் இந்த அண்டமும். நான் நானே. நானின்றி ஒன்றுமே இல்லை. நீங்கள் எல்லாம் என் அடிமைகள், என் ஆணையின்றி நீங்கள் எங்கும் அசையக் கூடாது! இது என் கட்டளை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை தோலுரித்து, அதைச் சவுக்காக்கிக் கையிலெடுத்து, எக்காளமிடும் பெரிய வட்டத்தின் முன்னே; மெய்யில் கலந்து; மெய்யோடு மெய்யாகி, நிஷ்டையில் தீட்சண்யமாகி நிற்கும் துறவிகளைப் போல், சிறிய வட்டங்கள் உடல் சுருங்கி தலைவணங்கி, அமைதியாகக் கிடக்கின்றன.

உச்சியை நோக்கி ஏறிக்கொண்டிருக்கும் பொழு தோடு போட்டி போட்டுக்கொண்டு, கொல்லன் தன் வேலையில் உக்கிரமாகிக் கொண்டிருக்கிறான். போர்க்களம் ஜனிக்கிறது.

படைப்பின் தத்துவத்தையும், படைப்பாளியின் சக்தியையும் புரிய, புரிந்துகொள்ள முடியாமல், வாய்க்கு வந்ததையெல்லாம் உளறிக் கொண்டிருக்கும் பெரிய வட்டத்தின் போக்கில் சிந்தை குலைந்து கொல்லனின் கையிலிருக்கும் சுத்தியல், ஆத்திரத்தால் குமுறுகிறது. "அறிவற்ற அற்ப வட்டமே, ஆணவத்தால் ஆத்திரமடைந்து அலறாதே. உன்னையும் உன் அகங்காரத்தையும் நினைத்தால் எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. உன்னை வளைத்து வட்டமாக்கு வதற்காக நான் உனக்குத் தந்த அடிகளைச் சற்று எண்ணிப்பார்! உன் திமிரையும் ஆணவத்தையும் அடக்கி, என் இஷ்டத்திற்கு உன்னைக் கொண்டு வருவதற்கு நான் உனக்களித்த தண்டனைகளை நினைக்கும்போது எனக்குச் சிரிப்பதா இல்லை அழுவதா என்றே புரியவில்லை. நீ யார் என்பதை மறந்து, அர்த்தமற்ற பேச்சுக்களினால் உன்னையே நீ அழித்துக் கொள்ளாதே!" ஆண்டவன் சிரிக்கிறான். அவனின் நெறியாள்கையில் நாடகம் அணுப்பிசகாமல் அரங்கேறிக் கொண்டிக்கிறது. கர்மம் களத்தில் தனித்து போரிட்டுக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையின், குறைப்பிரசவ சிசுவாய், சென்னி வீங்கிக் கத்திக்கொண்டிருந்த பெரிய வட்டம் சுத்தியலின் திடீர்ப் பிரசவத்தால் நிலைகுலைந்து, பொங்கி வடிகிறது.

"மண்டை வீங்கி மரியாதை இல்லாமல், மல்லுக்கு வந்திருக்கும் மடச் சுத்தியலே, வாயை அடக்கிப் பேசு. எவனோ ஒருவனின் சக்தியில் பிச்சையெடுத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் நீயுமா வீராப்புப் பேசுகிறாய்? உன்னாலேயே உன் சக்தியை உணர முடியாத நிரந்தர அடிமையான உனக்கேன் வீண் வம்பு? உனக்கென்று எதுவுமே இல்லாத முண்டம் நீ. யாரோ ஒருவனின் சக்திக்கு அடிமையாகி அவன் ஆளுமையில் பளிச்சிடும் உன்னையும் உன் போக்கையும் பார்த்தால் எனக்கு சிரிப்புத்தான் வருகிறது."

பொறுமையை விழுங்கி ஜீரணிக்க முடியாமல் பெரிய வட்டம் கத்திக் கொண்டிருக்கிறது.

அணுவின் அசைவிலும் அணுப்பிசகாமல் அண்டத்தின் சுழற்சியில் கண்ணாயிருக்கிறான் காவலன். துருத்தி ஓயாமல் சுழன்றுகொண்டிருக்கிறது.

கால தேவனின் ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் கொல்லன் தடுமாறித் தவித்துக்கொண்டிருக்கிறான்.

பாவம்! பெரிய வட்டத்தின் ஆத்திரத்திற்கு நின்று பிடிக்க முடியாமல் சுத்தியல் மௌனியாகிக் கிடக்கிறது.

மெய்பட்டை தீட்டப்பட்டு, ஞானம் ஒளி பெறுகிறது.

"அறிவற்ற முண்டங்களே, உண்மை புரியாமல் ஏன் நீங்கள் உளறிக் கொண்டிருக்கிறீர்கள்? என் சக்தி மட்டும் இல்லாவிட்டால் நீ வட்டமாகிவிட முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது உன்னால் மட்டும் தனித்து ஒரு வட்டத்தை உருவாக்கிவிட முடியுமா? உங்கள் இருவருக்கும் மூல கர்த்தாவே நான் தான். நான் மட்டும் இல்லா விட்டால் நீங்கள் மட்டுமென்ன இந்தக் கம்மாலையே ஸ்தம்பிதமாகிவிடும். என் சக்தியில் பூரணமாகி ஒளிபெற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் இருவருமே என் அடிமைகள். நானே உங்கள் இருவரையும் ஆட்டி வைப்பவனும், ஆடச் செய்பவனும். இதை மறந்து உளறாதீர்கள்."

துருத்தியின் வேகத்தில் குமுறிக்கொண்டிருக்கும் அக்கினி, அமைதியாகக் கூறிவிட்டு தன் பணியில் மும்முரமாகிக் கொண்டிருக்கிறது.

ஞானம் ஒளி வீசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அறியாமை தடுமாறிக்கொண்டிருக்கிறது.

கர்மங்கள் களத்தில் ஒளிவீசிக் கொண்டிருக் கின்றன. ஏகன் தத்துவமாகிறான். கொல்லன் வெட்டிய பட்டத் துண்டுகள் எல்லாம், வட்டங்களாகிவிட்டன. வட்டங்களையெல்லாம் பரிசோதித்துக் கொண்டிருந்த கொல்லனின் கையாள், தலை வீங்கிக் கத்திக் கொண்டிருந்த பெரிய வட்டத்தைத் தெரிந்தெடுத்து, மீண்டும் கொல்லனிடம் கொடுக்கிறான். ஆணவத் தால் அகங்காரம் பிடித்து கத்திக் கொண்டிருந்த அப்பெரிய வட்டத்தை மீண்டும் ஒரு தரம் வெட்டி மற்ற, வட்டங்களின் அளவிற்கு ஆக்கிப் போட்டு விட்டுக் கொல்லன் பெருமூச்சு விடுகிறான்.

எல்லியரக்கன் சோர்ந்து போய்க் கொண்டிருக்க, கொல்லனின் கையாள் ஆக்கிய வட்டங்கள் அனைத் தையும் சேர்த்து எடுத்து சாக்கொன்றில் போட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி, கம் மாலையின் மூலையில் போடுகிறான். பாவம்! தன்னையே உணர முடியாமல் வீறாப்புப் பேசிய வட்டம் அழுது கொண் டிருப்பதைப் பார்த்து மற்ற வட்டங்கள் சாக்கினுள் சிரித்துக்கொண்டிருக் கின்றன. அவைகள் எல்லாம் இப்பொழுது, பொது வுடமைவாதிகள், ஞானஸ்நானம் பெற்ற தேவனின் குழந்தைகள். வேகமாக கொல்லன் கம்மாலையைப் பூட்டிக்கொண்டு போகிறான். அங்கே, சுத்தியல் சக்தி யற்ற முண்டமாகிக் கிடப்பதைப் பார்க்க முடியாமல் அக்கினி, சாம்பலாகிக் கிடக்கிறது. ஞானத்தின் எல்லையற்ற ஒளியின் பிரகாசத்தில் ஈசன் சிரிக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை

தேவனின் நெறியாள்கையில் நாடகமொன்று மேடையேறிக் கொண்டிருக்கிறது.

அந்தமும் ஆதியுமற்ற நித்திய ஜீவனை நினைந் துருகி அண்ட சராசரம் பயந்து, பணிந்து கிடக் கிறது. காந்த விசைக்கோட்டில் இழுபடும் இரும்புத் தூள்களாக சக்திகள் இழுபட்டுக்கொண்டிருக்கின்றன. ஞானம் பூரணமடைந்து சிரிக்கிறது.

விடியச்சாமம். அல் அகலத் திரை விரிகிறது. மண்டலத்தை ஆளும் ம்ாமன்னன் ஒருவனின் பட்டத்து யானை, கொற்றவனின் குடையின்றி, பாகனின் கட்டளைக்கு அடிபணிந்து தெருவில் போய்க் கொண்டிருக்கிறது.

யானையின் முதுகில் மகிபன் போல் அமர்ந் திருக்கும் பாகன், சூனிய வெளியில் மிதக்கிறான்.

தெருவில் வந்து கொண்டிருக்கும் யானைக்குப் பயந்து மக்களெல்லாம் வீதியில் ஓரமாக ஒதுங்கி நிற்கின்றனர்.

எதையுமே சட்டை செய்யாது யானை அமைதி யாக நடந்துகொண்டிருக்கிறது. பாகன் தன்னையே மறக்கிறான். மண்டலத்தை ஆளும் மாமன்னன் நானேயென்று, அங்குசத்தை ஆட்டி ஆணவத்தால் கத்துகிறான். நித்திய ஒளியில் ஆணவம் விட்டிலாகிறது. பள்ளம் நிரம்பி திட்டியாவதைப் பார்த்து, சத்தியம் மௌனமாகிக் கிடக்கிறது. ஈசனின் மெய்ஞானக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டில் பாகனின் அறியாமை சேர முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

முகத்துவாரம் மூடிக் கிடப்பதினால் விம்மி வரும் வேதநதி, விதியின் சென்னியின் சத்தியம் செய்துவிட்டு நிற்கிறது. ஒளியைச் சேரமுடியாத மின்னல், குழந்தையைப் போல் ஓலமிட்டு அழுதுகொண்டு, பின்னால் துரத்தி ஓடிக்கொண்டிருக்கிறது.

"நானே மன்னன், நானே மண்டலம், நானே எல்லாம், நானே நித்தியம்."

பாகன், தன் நிலையில் உண்மையைக் கபளீகரம் செய்து தனக்கே சத்தியம் செய்துகொண்டிருக்கிறான்.

*"அஹ்ஹா.....!"*

மொட்டு வெடிக்கிறது. ஆச்சரியத்தால் பாகன் அலறித் துடிக்கிறான்.

*"யார் சிரிப்பது?"*

"வேறு யாருமல்ல, நானேதான்."

*"அங்குசமா?"*

"ஆமாம். அறியாமையின் விளிம்பில் நின்று கூத்தாடும் உன்னைப் பார்த்து எப்படிச் சிரிக்காமல் இருக்கமுடியும்?"

பரமாத்மா பாற்கடலிலிருந்து வேதமாகிறார், காண்டீபன் கர்மயோகமாகிறான்.

அங்குசம், மீண்டும் சிரிக்கிறது.

"அற்பனே, எனக்காக உருவாகி, என் தயவிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் நீயா என்னைப் பார்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பது.....? இந்த மண்டலமே என்னைக் கண்டு மண்டியிட்டுத் துதிபாடிக் கொண்டிருப்பதை உன் விழிக் கபாடங்களை நன்றாகத் திறந்து பார்"

பாகன் அங்குசத்திற்கு உபதேசித்துவிட்டு எக்காள மிட்டுச் சிரிக்கிறான்.

யானை எதையுமே சட்டை செய்யாது பாகனைச் சுமந்து கொண்டு அமைதியாக நடந்து கொண்டிருக் கிறது.

ஏகனென்னும் நெறியாளன் அனுப்பிசகாமல் நாடகத்தை நெறிப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

"ஆகாயத்தில் கருக்கட்டி அக்கினி ஜுவாலையில் முட்டையிட்டு, கற்பனையில் அடை காத்துக் கொண்டிருக்கும், உன் அறியாமைக்கு என் ஆழ்ந்த அனு தாபங்கள். மண்டலத்தை ஆளும் மாமன்னன் எங்கே? அவன் பட்டத்து யானையைக் கழுவித் துடைத்துப் பாதுகாக்கும் பரதேசிப்பாகன் நீ எங்கே? எலி வாலைக் கொண்டு கடலாழத்தை அளந்து கொண்டிருக்கும் நீயொரு பைத்தியம்; முட்டாள். விட்டமில்லாத வட்டத்தை சின்னவிரலால் கீறிக் கொண்டிருக்கும் நீயொரு கோணங்கி. நீ, நிழலை நிஜமென்று எண்ணி, நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் பூஜ்யம்"

அறியாமையில் அமிழ்ந்து தத்தளித்துக்கொண்டி ருக்கும் பாகனைப் பார்த்து, அங்குசம் ஆவேசமாகக் கூறிவிட்டு மீண்டும் சிரிக்கிறது.

ஞானம் அக்கினி ஜுவாலையில் வெந்து பழுப்பாகிக் கொண்டிருக்கிறது. போர்க்களத்தில் பாகனின் அறியாமை, சென்னியைத் தாண்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறிவற்ற அங்குசமே, அமைதியாகக் கேள்! நானே நீ. என் சக்தியின் தோற்றப்பாடுதான் உன் சக்தியும் நீயும். நான் இல்லையென்றால் நீயுமில்லை. உன் நாமமுமில்லை. என் வித்தையின் செயற்பாடு தான் உன் தொழிற்பாடு. என் விசையின் கோட்பாட்டில் அணு பிசகாமல் இழுபட்டுக்கொண்டிருக்கும் நீயொரு சக்தியற்ற ஜடம். என் தீட்சண்யமான ஒளியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் நீயா எனக்கு ஞான வுபதேசம் செய்வது? முட்டாளே, வாயை மூடிக் கொண்டு கவனமாக இருந்துகொள். இல்லாவிட்டால் தூக்கி எறிந்து விடுவேன்."

பாகன் தன் எல்லையைக் கோடு கிழித்துக் காட்டி விட்டு மணிமுடியை உருவாக்க சென்னியின் பருமனை சூனிய வெளியில் அளந்து கொண்டிருக் கிறான்.

வேதம், சீடனாகிச் சிரிக்க, ஞானம் அழுகிறது. எதுவுமே புரியாமல் யானை அண்டத்தை அளப்பதில் அமைதியாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. அங்குசம் காளியாகி, ஊழிக் கூத்தாடுகிறது.

"புத்தியற்ற மடையா? பூஜ்ஜிய வெளியில் அறியாமையினால் கானலை மேய்ந்துகொண்டி ருக்கும் நீயொரு முட்டாள். பித்தம் தலைக்கேறி, மெய்யைப் புரிய முடியாமல் பிதற்றும் நீ, இருட் டறையில் கறுத்தப் பூனையைத் தேடி அலையும் குருடன், உன்னிடம் எதைச் சொல்லித்தான் என்ன பயன்? அந்தக் கடவுள் வந்தாலும் உன்னைத் திருத்தவே முடியாது."

பாகனின் அறியாமையை அளந்து காட்டிவிட்டு அங்குசம் அமைதியாகிறது. அடுத்தகணம் பித்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து கையிலிருந்த அங்குசத்தை ஆத்திரத்தால் தூர வீசியெறிகிறான், பாகன். அங்குசம் தோல்வியைப் பொறுமையோடு தழுவி, எதுவுமே செய்யமுடியாமல் விழுந்த இடத்திலேயே அமைதியாகக் கிடக்கிறது. பகடைக்காயை சாதகமாக உருட்டிவிட்ட இறுமாப்பில் பாகன் தன்னையே மறந்து களிக்கிறான்.

விரல் நொடிக்கும் நேரம்.

அமைதியாகச் சென்று கொண்டிருந்த யானை, எதிர்பாராத விதத்தில் தன் எதிரே வந்து விழுந்து வெடித்துச் சிதறிய பட்டாசு வெடியொன்றின் தாக்கத்தால், சிந்தை குலைந்து, ஆவேசமாகப் பிளிறி ஓடிக்கொண்டிருக்கிறது. பாகன் தான் கற்ற வித்தைகள் அனைத்தையும் கொண்டு, ஓடிக்கொண்டிருக்கும் யானையை அமைதிப்படுத்தி அடக்க முடியாமல், நிலை தடுமாறிக் கீழே விழுந்து பரிதாபமாக கிடக்கிறான். பாவம்! அவன் அன்போடு பேணி வளர்த்த யானையே தன் துதிக்கையால் அவனை அள்ளியெடுத்து தரையில் அடிப்பதை பார்க்க முடியாமல், கிடந்த இடத்திலேயே அங்குசம் கிடந்து அழுகிறது.

நாடகம் அணு பிசகாமல் முழுமையாக அரங்கேறி விட்ட களிப்பில் ஈசன் மெய்யாகிறான். ஞானம் ஒளிவிட்டு பிரகாசிக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடுகள் உடைந்து விட்டன!

அவன் கைதேர்ந்த குரங்கு வித்தைக்காரன். காந்த விசைக்கோட்டில் இழுபடும் இரும்புத் துகள்கள் போல், மக்கள் அவன் வித்தையால் கவரப்பட்டு இழு பட்டுக் கொண்டிருந்தனர். கானகத்தில் வாழும் வானரங்களை, வளைத்துப் பிடித்து, அவைகளுக்கு எண்ணற்ற வித்தைகளைப் பழக்கி, அவைகளின் மூலம் செல்வத்தைப் பெருக்கிக்கொண்டிருந்தான். திறமை யின் விளிம்பில் நடந்து கொண்டிருந்த வித்தைக் காரனின் புகழ், நாலா பக்கமும் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. சென்ற இடமெல்லாம் அவனுக்குப் பேரும் புகழும் குவிந்து கொண்டிருந்தன.

கால தேவனின் இனிய பவனியில், கந்தையோடு ஓலைக் குடிசையில் வாழ்ந்து கொண்டிருந்த வித்தைக் காரன், கைநிறையக் காசோடு, கண்ணைக்கவரும் வண்ண மாளிகையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனால், அவனுடைய உயர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் உதிரத்தைச் சாறாக்கி உழைத்துக் களைத்த குரங்குகள் மட்டும் கம்பிக் கூடுகளில் உண்ண உணவின்றிச் சோர்ந்து கிடந்தன. கானகத்தின் கனிகளை உண்டு, களிப்புடன் திரிய வேண்டிய குரங்குகள், ஒட்டிய வயிறுகளோடு, அடிமைகளாக கம்பிக் கூடுகளில் கிடந்து விம்மிக் கொண்டிருந்தன. அவற்றின் மத்தியில் கோடை காலப் புழுக்கம்! இளவேனிற் கால இன்ப நினைவுகளை நினைந்து நினைந்து, அவை ஏங்கின. மலைமுகடுகளில் படியும் பனிப்படலங்கள், அவை களின் நேத்திரங்களில் படிந்து கிடக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம், வித்தைக்காரன் முன்போல் வித்தைகள் காட்ட வெளியில் செல்வதில்லை. முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு மட்டும் அவன் சென்று வந்தான். இதனால், தன் வாழ்க்கையை வளமாக்கிய குரங்குகளை இப்பொழுது அவன் நல்லபடி கவனிப்பதில்லை. வேளாவேளைக்கு உணவு இல்லாமல் குரங்குகள் கஷ்டப்பட்டன. உணவின்றிச் சில செத்து மடிந்தன. பசியால் கத்தும் குரங்குகளை, அவன் தடியினால் அடித்து அடக்கினான். வித்தைக்காரனின் போக்கில் சிந்தை குலைந்த குரங்குகளெல்லாம் அவன் மேல் வெறுப்புற்றன. சதா, அவனைத் திட்டின. எரிமலைகள் வெடித்தது. தீக்குழம்புகள் நாலா பக்கமும் சிதறிப் பறக்கின்றன. அக்கினி ஜுவாலையின் அகோரத்தால் இயற்கை தடுமாறிக்கொண்டிருக்கிறது. எங்கும் பயங்கரம், ஏழ்மையின் ஓங்காரம், பொங்கும் உளச் சீற்றம், பொல்லாத வெறியாட்டம்!

ஒருநாள், உணவுக்காகக் கத்திக்கொண்டிருந்த குரங்கு களிலொன்று தனது சக நண்பர்களைப் பார்த்து "நண்பர்களே! நாங்கள் இப்படியே ஒவ்வொரு நாளும் உணவுக்காக கத்திக்கொண்டிருந்தால், எங்கள் வாழ்க்கையில் எங்களுக்கு விமோசனமே கிடைக்காது. எப்படியாவது நாங்கள் இக்கூடுகளை உடைத்து வெளியில் செல்ல வேண்டும். எங்களால் உயர்ந்து, எங்களைக் கவனியாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் வித்தைக்காரனைக் கடித்துச் சாகடிக்கவேண்டும். நன்றியில்லாத அவனைக் கொல்வதுதான் மேல். இதற்கு முக்கியம் ஒற்றுமைதான். நாங்கள் ஒற்றுமையுடன் இயங்கினால், இந்தக் கம்பிக் கூடெல்லாம் எமக்கு ஒரு தூசி. எனவே, உடனே ஆயத்தமாகுங்கள். அநீதியை அழித்து, நீதியை நிலை நாட்டுவோம்." என்று கூறிவிட்டுப் பலமாகக் கத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின் கனத்தால், குளத்தில் வெடிப்பு விழுகிறது. அழுக்கம் கூடிக்கொண்டே இருக்கிறது. அமைதி குலைகிறது. ஆவேசம் பொங்கி வழிகிறது. "பாவம்! எப்படி இருந்தாலும் இவ்வளவு காலமும் எங்களுக்கு உணவும், உறையுமளித்துப் பாதுகாத்த எங்கள் எஜமானை அப்படிக் கொல்வது கூடாது. இதனால், கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம்" என்று வயது வந்த குரங்கொன்று அமைதியாகக் கூறிவிட்டு, உணவை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருந்தது. எண்ணங்கள் பூஜ்யமாகின்றன.

"எது பாவம்? கால்நடையாகத் திரிந்த எங்கள் எஜமானை நாங்கள் காரில் சவாரிசெய்யச் செய்தோம். பத்துச் சதத்திற்கும் வழி இல்லாதவனைப் பணக்கார னாக்கினோம். இவ்வளவும் செய்த எமக்குக் கிடைத்த பலன் என்ன? சதா, பசி, பட்டினி, அடிமை வாழ்வு. இந்நிலை, எங்கள் மத்தியில் இன்னும் நீடிக்கத்தான் வேண்டுமா? வேண்டாம் இந்த அடிமை வாழ்வு. பொறுத்தது போதும் பொங்கியெழுவோம், புது வாழ்வு காண! ஒற்றுமையால் இந்த உலகத்தை வென்றெடுக்க, உடனே புறப்படுங்கள் வெற்றி நமதே!" என்று, சத்தியம் செய்துவிட்டு, ஆத்திரத்துடன் இரும்புக் கூட்டை ஒரு குரங்கு உடைத்தது. குரங்குகள் மத்தியில், ஒற்றுமை சத்தியமாகிறது. விம்மிக் கொண்டிருந்த குளம் உடை கிறது. வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஒரே அமர்க்களம்!

விரல் நொடிக்கும் நேரம், கூடுகள் உடைகின்றன. பாவம்! மறுகணம், கத்திக்கொண்டிருந்த குரங் கெல்லாம், தங்களை ஆட்டிப்படைத்த எஜமானைத் துரத்தித் துரத்திக் கடித்துக்கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம்! குரங்குகளின் சக்திக்கு ஈடுகொடுக்க முடியாமல் வித்தைக்காரன் குடல் தெறிக்க ஓடிக் கொண்டிருக்கிறான்!

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாற்றம்

அழகான வீடு, அதன் முற்றத்தில் இரண்டு செடிகள். இளம்காலையைக் களிப்புடன் வரவேற்று, நிற்கின்றன. ஒன்று சூரியகாந்தி; மற்றது கன்னிக் குரோட்டன்.

சூரியகாந்தி அழகான பூவொன்றை உமிழ்ந்து கொண்டு, கற்பை விலைபேசித் திரியும் கணிகை களைப் போல், வண்டுகளை நாடி நிற்கின்றது.

அப்பொழுது, பூவின் அழகில் மயங்கிய வண்டொன்று, ஆலிங்கனமிட்டுச் செல்கின்றது.

எங்கும் இன்பக் கிளுகிளுப்பு.

சூரியகாந்தி மீண்டும் முகத்தைக் குலுக்கி மோகனப் புன்னகையொன்றை உதிர்த்து, வண்டுகளை வரவேற்று வனப்புடன் நிற்கிறது.

மீண்டும், மீண்டும் வண்டுகளின் ஆலிங்கனம்.

சூரியகாந்தியின் சுணையற்ற போக்கு, பக்கத் திலிருக்கும் குரோட்டன் செடியின் அகத்தை கிளறிக் குருதியை உறிஞ்சுகிறது.

"சகோதரி! நீ, வாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? உனக்காகவொரு உலகம் காத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதை மறந்து விட்டாயா? வாழ்க்கையில் ஒழுக்கம் உயிரினும் மேலானது. இதை நாங்கள் மறக்கலாமா? எங்களையே நாங்கள் ஏமாற்றிக் கொள்ளலாமா?'' என்று குரோட்டன் செடி கெட்டியாக மொழிந்துவிட்டு மௌனமாகியது.

போர்க்களம் ஜனிக்கிறது.

"நான் அழகி. என்னால் வாழக்கூடிய வாழ்க்கை உன்னால் வாழ முடியாதே என்று பொறாமைப் படுகிறாய். உலகில் வாழ்க்கை எல்லோருக்கும் இனிப்ப தில்லை. இது நியதி." என்று கூறிவிட்டு, முகத்தை குலுக்கி மோகனப் புன்னகை உதிர்த்தது, சூரியகாந்தி.

"சீ! தாய்க்குலத்திற்கே நீயொரு சாபக்கேடு. நீயும் உன் வாழ்க்கையும்.'' என்று அடிவற்றிலிருந்து சுளியோடிவரும் அனலொத்த வார்த்தையை மொழிந்துவிட்டு, குரோட்டன் அமைதியாகிறது.

"சீ! வாயை மூடு. வாழ்க்கையின் இன்பத்தை ருசிக்க முடியாத மலட்டுப் பிண்டம் நீ. உனக்கென்ன தாய்மை உணர்வு? வெட்கம், உன் அறியாமையை வெளியில் சொல்லாதே" என்று ஏளனமாகப் பதிலை மொழிந்துவிட்டு, எக்களிக்கிறது, சூரியகாந்தி.

குரோட்டன் செடியின் முகத்தில் ஏழ்மை படர்கிறது. அப்பொழுது, வீட்டினுள் இருந்து சிறுவ னொருவன், முற்றத்தை நோக்கி வருகிறான். அங்கே சிறுவனின் கண்கள், மஞ்சள் குளித்து முகமினுக்கி மாயப்பொடி பூசி நிற்கும் அழகிய சூரியகாந்திப் பூவை நாடுகின்றன. மறுகணம்; சூரியகாந்திச் செடியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்து, அழகான பூவைப்பறித்து கசக்கி கூறு போட்டுக்கொண்டு, நடையில் முன்னேறிக்கொண்டிருக்கிறான். பூவைப் பறிகொடுத்து, மொட்டையாய் நிற்கும் சூரியகாந்தி, அகங்காரமழிந்து வெட்கத்தால் தலைகுனிந்து நிற்கிறது.

குரோட்டன் செடிக்கு மனவேதனை. சிதைந்து கிடக்கும் அழகிய பூவைப் பார்த்து, அது, அழுகிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவு !

அது ஒரு சிறிய தோட்டம். அதன் ஒரு பகுதியில் இளங்காலையின் இனிய பொலிவில் இன்புற்று, ஏகாந்தமாக நிற்கும் வெண்டிச் செடிகளினுள்ளே, தான்தோன்றிகளாக சில கோரைப் புற்கள் வளர்ந்து நிற்கின்றன. வண்ணமுடன் வளர்ந்து நிற்கும் வெண்டிச் செடிகளின் செழிப்பில் பொறாமை கொண்ட, புற்கள் குமுறுகின்றன. புற்கள் மத்தியில் ஒரே புகைச்சல்.

புற்களின் புலம்பல்களைச் சட்டை செய்யாது, எண்ணற்ற காய்களையும் பூக்களையும் உமிழ்ந்து தாய்மைப் பொலிவுடன் நிற்கின்றன, வெண்டிச் செடிகள். "எப்படி வளர்ந்தாலும் உங்களால் வானத்தையா தொட்டுவிட முடியும்? இவ்வளவு அகங்காரமும், ஆடம்பரமும் உங்களுக்குத் தேவை தானா? சிறு காற்றுக்கே ஈடுகொடுக்க முடியாத உங்களுக்கு ஏன் இந்தக் கர்வமோ?"

அமைதியின் சின்னங்களாக நிற்கும் வெண்டிச் செடிகளைப் பார்த்துக் கூறிவிட்டு, புற்கள் எக்காள மிட்டுச் சிரிக்கின்றன.

"சீ! அற்பப் பயல்களே கொல்லன் தெருவிலா ஊசி விற்கப் பார்க்கிறீர்கள்? எங்கள் தயவிலே உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் உங்களுக்கு இவ்வளவு திமிரா? உலகம் அழிந்தாலும் எங்கள் உயரத்திற்கு உங்களால் வளரவே முடியாது. வாழ்க்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே இறைவனின் சிந்தனையோட்டத்தின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. நாம் நினைத்தபடி எதுவுமே நடைபெறுவதில்லை. இதுதான் ஏகனின் ஏற்பாடு, ஆகையினால், வீணாகப் பொறாமையினால் சப்தம் போடாமல், வாயை மூடிக்கொண்டு அமைதியாக இருங்கள்."

கத்திக் கொண்டிருந்த புற்களுக்கு புத்திமதி கூறிவிட்டு வெண்டிச்செடிகள் அமைதியாயின.

புற்களின் பொறாமையில் வெடிப்பு விழுகின்றது. குருவின் சென்னியில் சீடர்கள் அமர்ந்துவிட்டனர்.

தத்துவம் குருவா அல்லது சீடனா? கேள்வி தவிக்கிறது. ஞானம் ஒளியாகிப் படர்ந்து கொண்டிருக் கிறது.

"தடிப் பயல்களே! வார்த்தைகளை அளந்து பேசுங்கள். ஏகனின் தயவால் உங்களைப்போல் எங்களாலும் வளர முடியும் என்பதைச் செயலில் காட்டுகிறோம். பொறுத்துப் பாருங்கள். புளித்துப் போன பழைய பல்லவிகளை இனியும் எங்களிடம் பாடாதீர்கள். நாங்கள் புதுப் பல்லவிகளைப் படைத்து, நவீன கானம் மீட்டப் போகிறோம்."

உயர்ந்து நிற்கும் வெண்டிச் செடிகளைப் பார்த்து சவால் விட்டுவிட்டு,. புற்கள் ஊணையும், உறக்கத் தையும் வெறுத்து ஈசனின் அருள் வேண்டித் தவமிருந்தன. எங்கும் ஒரே அமைதி. புற்களின் தவத்தால் ஏகன் மனமிரங்கிப் புற்கள் முன் தோன்றினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னருமைப் புற்களே! உங்களுக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படித் தவக்கோலம் பூண்டு நிற்கிறீர்கள்?"

"ஈசா! இந்த வெண்டிச் செடிகள் எங்களை மிகவும் இழிவுபடுத்தி இகழ்கின்றன. எங்களையும் எங்கள் தோற்றத்தையும் கண்டு அவைகள், எள்ளி நகைக் கின்றன. நாங்களும் உன் சிருஷ்டிகள்தானே. ஆகை யினால் அந்த வெண்டிச் செடிகளைப் போன்று எங்களையும் நன்றாக உயர்த்தி வளர்த்துவிடு. உன் அடியார்களின் வேண்டுதலை நிறைவேற்றி அருள். எங்களைத் தலைநிமிர்ந்து வாழ விடு. எங்கள் கௌரவத்தைக் காப்பாற்று!"

ஈசனின் கருணை வேண்டி எல்லாப் புற்களும், ஒருமித்துக் கூறிவிட்டு, உடல் சுருங்கி சென்னி தாழ்த்தி நிற்கின்றன. ஏகன் சிரித்தான்.

மறுகணம், வெண்டிச் செடிகளின் உயரத்திற்கு புற்கள் வளர்ந்து ஒய்யாரமாக நின்றன.

ஈசன் மறைந்தான். புற்கள் மகிழ்ச்சியில் மூழ்கின. அவைகள் வெண்டிச் செடிகளைப் பார்த்துப் பழித்தன, தூற்றின. மாலை அழிந்து காலை ஜனித்தது.

இளங்காலை, பூபாளம் பாடியது. உழைப்பின் பயனை உவப்புடன் நோக்கி வந்த தோட்டக்காரனின் நேத்திரங்கள், வெண்டிச் செடிகளினூடே ஓங்கி வளர்ந்து நிற்கும் புற்களைத் தீண்டுகின்றன. கோபம் அக்கினியாகிறது. தோட்டக்காரன் யந்திரமாகிறான். பாவம்! உயர்ந்து வளர்ந்து ஒய்யாரமாக நிற்கும் புற்களைப் அவன் பிடிங்கிக்கொண்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்டிச் செடிகள், புற்களின் நிலையைக் கண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றன.

ஏகன், எல்லாவற்றையும் பார்த்து அணுப்பிச காமல், அண்டத்தை ஆண்டுகொண்டிருக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துணர்ச்சி

கால தேவனின் பவனியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஆழமற்ற கிணறு. அதனுள் சில நீர்ப்பூச்சிகள் உவப்புடன் உலாவிக் கொண்டிருக்கின்றன.

அப்பொழுது, தருணம் பார்த்துக் கிழட்டுத் தவளையொன்று இறுமாப்புடன் தண்ணீரின் மேலெழுகிறது.

தவளையின் வரவில் சிந்தை குலைந்த பூச்சிகள் சிதறி ஓடுகின்றன.

பூச்சிகளின் ஓட்டத்தில் மதிமயங்கி தவளை ஏளனப் புன்னகை உதிர்க்கிறது. கிணற்றின் பதியென்ற தலைக்கனம். தவளை எதையும் பார்க்காமல் உயிருக்குப் பயந்தோடும் பூச்சிகள் சிலவற்றைப் பிடித்து வயிற்றை நிரப்புகிறது.

தவளையின் அடாவடித்தனத்தைப் பார்த்து கிணற்றுச் சுவரிலிருக்கும் கொட்டுப் பூச்சி ஆத்திர மடைகிறது.

"தவளையாரே! உன் ஒரு உயிருக்காக, இத்தனை ஜீவனுமழியத்தான் வேண்டுமா? இது நியாயம் தானா?" கொட்டுப் பூச்சி நியாயத்தைக் கேட்டு நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இம்மண்டலத்தின் பதி நான்; இங்குள்ள அனைத்துமே என் சொந்தம். வீண் வம்பை விலைக்கு வாங்காமல் போய்விடு."

தவளையின் அர்த்தமற்ற வார்த்தையால் கொட்டுப் பூச்சி மேலும் ஆத்திரமடைகிறது.

"நீ இன்னும் உலகத்தைப் புரியாதவன்." போர்க்களம் ஜனிக்கிறது. கொட்டுப் பூச்சியின் குத்தல் வார்த்தைகளால் தவளை தடுமாறிக் தவிக்கிறது.

"இந்த உலகம் என்னுடையது. வாழையடி வாழை யாக இதை ஆட்சி செய்பவனும் நானே. இங்குள்ள உயிரினங்கள் அனைத்தும் என்னுடையதே. எனக்கா உலகத்தைப் பற்றித் தெரியாது. இந்த உலகத்தின் அணுவைக்கூட அறிந்த எனக்கா உலகம் புரியாது." தவளை தன்நிலை புரியாது கூறிவிட்டு, கத்துகிறது.

ஆணவத்திமிரால் தவளையின், அடிவயிற்றிலிருந்து வரும் அகோரமான வார்த்தைகளால் கொட்டுப் பூச்சி கொதிக்கிறது.

"சீ! நீ காணும் உலகம் உன் மூளையின் உருவத்தின் பருமனே. அதற்கு நீ அரசன், உனக்கு ஒரு இராட்சியம். வெளியில் சொல்லாதே, முட்டாளென்று ஓட்டிவிடப் போகிறார்கள்."

கொட்டுப் பூச்சி குமுறிவிட்டு குறுநகை உதிர்க்கிறது.

அறிவைப் புகட்டிவிட்ட ஆசானின் நிலையில் கொட்டுப் பூச்சி அமைதியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீ! சின்னப்பயலே, என்னைப் பார்த்தா இப்படிக் கூறுகிறாய்? இன்னுமொருதரம் சொன்னால் உன்னைக் கொன்றுவிடுவேன். பிழைத்துக் கொள்"

தவளையின் கோபம் சென்னியைத் தாண்டுகிறது.

"பாவம்! உன் மூளையின் உருவத்தை வெளியில் காட்டாதே! உன் சக்தி அனைத்துமே நீ வாழும் இந்தக் கிணற்றுத் தண்ணீரில் தான் என்பதை நினைவுறுத்திக் கொள்"

கொட்டுப் பூச்சியின் குத்தல் வார்த்தைகளால் தவளை ஆத்திரமடைந்து அங்குமிங்கும் பாய்கிறது.

"அற்ப நாயே! அவமானமா படுத்துகிறாய்? உன்னைக் கொல்லாமல் ஒரு போதும் விட மாட்டேன்."

அனல் போன்ற வார்த்தைகளை கக்கிக்கொண்டு தவளை கொட்டுப் பூச்சியை நோக்கிப் பாய்கிறது.

அதே நேரம், பெண்ணொருத்தி தண்ணீர் எடுப்பதற்காக வாளியைக் கிணற்றினுள் இறக்குகிறாள்.

வாளியின் வரவில் சிந்தை குலைந்த தவளை இருந்த இடம்விட்டு மறைகிறது.

பாவம்! சென்ற தவளை திரும்பவேயில்லை.

தவளையின் உருவத்தை மீண்டும் காண விரும்பாத கொட்டுப் பூச்சி, கிணற்றின் மேல் விளிம்பை நோக்கி வீர நடையிடுகிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் கோலங்கள்

பரம்பரைச் சொத்துக்களின் திமிரால், இளமையில் மனம் போனபடி வாழ்க்கையைச் சுவைத்து, அதன் இழுவைக்கு ஏற்றாற்போல் சுழன்றாடி, பஞ்சமா பாதகங்களைச் செய்து வாழ்ந்த மாபாவி அவன். குழிவிழுந்த நேத்திரங்களிலிருந்து, வழிந்தோடும் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக்கொண்டு தன் வெண் பஞ்சுத் தாடியை அடிக்கடி தடவி தன் வாழ்க்கைப் பாதையில் பதிந்த அழுக்குச் சுவடுகளை எண்ணி, எண்ணி பெருமூச்சு விட்டுக்கொண்டிருந் தான். நிறையப் பணமிருந்தும், நிம்மதியற்ற அவன் இதயம், சாந்தியைத் தேடித் துடித்துக் கொண்டிருந்தது.

உறங்கும் போதும், விழிக்கும் போதும் ஈசனின் திருநாமத்தையே அவன் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் செய்த பாவங்கள் அவனைச் சுட்டன. மரணத்தை நினைத்து, நினைத்து பைத்தியமானான். உலகத்தில் உறவு சொல்வதற்கு, அவன் செல்வங் களைத் தவிர வேறு யாருமே இல்லை. ஆதரவற்ற அனாதையாக, நோயால் தவிக்கும் அவனை இன்று இதய சுத்தியோடு கவனிப்பார் ஒருவருமில்லை. ஒருநாள் அந்தப் பாவியின் வீட்டுக்கு ஆண்டவன் அருள்பெற்று, அவன் வழிநடக்கும் நல்லடியார் ஒருவர் வந்தார். முகிற் கூட்டத்தைக் கண்ட மயில்களைப் போல், பாவி மனம் மகிழ்ந்தான். அடியாரின் உள்ளம் பூரிக்க உபசரித்து, தன் அகத்தை வாட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் பாவங்களைப் போக்கி, பரமன் அருள் பெறும் வழியினைக் காட்டும்படி கெஞ்சினான்.

நல்லடியார் மகிழ்ந்தார்.....

"மகனே! உன் பாவங்கள் எல்லாம் அழியட்டும்... உன்னிடமுள்ள செல்வங்களையெல்லாம் ஈசனின் பெயரால் இன்றே ஏழைகளுக்கும் அவன் ஆலயங் களுக்கும் அளித்துவிடு...! அப்படிச் செய்தால், உன் பாவங்களை யெல்லாம் இறைவன் மன்னித்து விடுவான்..." என்று அடியார் திருவாய் மலர்ந் தருளினார்.

அடியாரின் வாக்கைச் சிரமேற்று, பாவி தன்னிடமிருந்த எல்லாச் செல்வங்களையும் ஈசன் பெயரில் கரைத்தான்.

காலம் உருண்டது. கணக்கற்ற செல்வத்திற்கு அதிபதியாக இருந்த பாவி, ஒரு நேர உண்டிக்கு வழியின்றித் தவித்தான். வீதிகளில் நின்று கையேந் தினான்.

ஒருநாள், மீண்டும் நல்லடியாரை அந்தப் பாவி சந்தித்தான். ஒரே மகிழ்ச்சி!

சூரியனைக் கண்ட தாமரைப்போல் உள்ளம் பூரித்து, பாதங்களில் விழுந்து வணங்கினான்.

"சுவாமி! நீங்கள் சொன்னபடி என் செல்வங்கள் அனைத்தையும் ஈசன் பெயரில் அளித்துவிட்டேன். இன்று நான் ஒரு பிச்சைக்காரன். என் பாவங்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்து நான் நற்பேறு பெறுவேனா?'' என்று கேட்டான். அவன் கேள்வி அனாதரவாகத் தவித்தது.

பாவியை நிமிர்ந்து கூடப் பார்க்காது அடியார் நடந்து கொண்டிருக்கிறார். இன்று, அவனொரு தெருப் பிச்சைக்காரன். சொறி நாயோடு அலைந்து கொண்டிருக்கும், அவனுக்கு பாவவிமோசனம் அளிக்க, தேவன்; எப்போது வருவானோ?

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம்

வாழ்ந்து, சலித்து, களைப்படைந்து, இறுதி யாத்திரையை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கும் ஜீவனைப்போல், நாட்களை எண்ணிக்கொண்டிருந்தது அந்தப் பட்டமரம். உலக வாழ்க்கையிலிருந்து பிரிந்து, இறைவனின் உள்ளத்தோடு ஒன்றித்து, சதா அவன் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஞானியைப்போல் ஊனின்றி, உறக்கமின்றி, மோனத் தவத்தில் அது மூழ்கிக் கிடந்தது. ஒருநாள், சின்னக் குருவியொன்று தன் வண்ண அலகில் ஒட்டியிருந்த குருவிச்சை விதையொன்றை, பட்ட மரக்கிளை ஒன்றில் ஒட்டிவிட்டுப் பறந்து சென்றது.

காலதேவனின் பவனியில், குருவிச்சைவிதை கண்விழித்து உலகத்தைப் பார்த்துச் சிரித்தது. எதிர்பாராத அதிர்ச்சி, வெடிப்பு!

குருவிச்சையின் சிரிப்பில் சிந்தை குலைந்த பட்ட மரம், நெருப்பில் சிக்குண்ட புழுவைப்போல் பதறித் துடித்தது.

புது உலகத்தைக் கண்ட பூரிப்பில் குருவிச்சை எதையுமே சட்டை செய்யாது, சிந்தை குளிரச் சிரித்துக் கொண்டே இருந்தது.

"ஐயோ! இன்னுமா உன் கொலை வெறி ஓய வில்லை? என் அந்திம காலத்திலாவது, நான் அமைதியுடன் வாழ்ந்து, தொல்லையற்று மடிவதற்கு என்னைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையில் விட்டுவிடு" என்று இளங்குருவிச்சையைப் பார்த்துப் பரிதாபமாகக் கூறியது பட்டமரம்.

குருவிச்சைக்கு ஒரே திகைப்பு!

"யார் நீ? ஏன் இப்படியெல்லாம் பைத்தியம்போல் உளறுகிறாய்?" என்றது குருவிச்சை.

"என்னை யாரென்றா கேட்கிறாய்? எங்கிருந்தோ வந்த உன் இனத்தவன், ஒருவனுக்கு இருப்பதற்கு இடமளித்து, உண்டி கொடுத்து, உபசரித்து, பேணி வளர்த்து, அவனைப் பெரியவனாக்கி பின் அவனாலேயே கொலை செய்யப்பட்ட இனிய பலா மரம் நான். எவ்வளவு நன்றிகெட்டவன். என் உதிரத்தைக் குடித்துக்கொண்டே எனக்கு துரோகம் செய்துவிட்டான். பாவம்! தன் சுயநல வெறியால் என்னையும் அழித்து, பின் அவனும் அழிந்து விட்டான்." என்றது பட்ட மரம்.

"என் இனத்தவனைப்பற்றி இழிவாகப் பேசாதே. வீணாகப் பொய்சொல்லாதே. அவன் ஏன் அழிய வேண்டும்?" குருவிச்சை கேட்டது.

"அவன் ஒரு சோம்பேறி. என்னுடைய உழைப் பிலேயே அவன் சதா வாழ்ந்து வந்தான். கடைசியில், என் செழிப்பான வாழ்வைக் கண்டு மனம் புழுங்கி, என்னையே அழிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றியும் கண்டான். ஆனால், அவன் எண்ணமே அவனை அழித்துவிட்டது. ஏன் என்றால், என் உதிரத்தையே நம்பி வாழ்ந்த அவனுக்கு, நான் இறந்த பின், உணவே இல்லாமற் போய்விட்டது. அதனால் நான் இறந்து சில நாட்களின் பின், அவனும் மடிந்து விட்டான்." என்று தன் ஆத்திரத்தையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளால் கொட்டிவிட்டு அமைதியாகியது பட்ட மரம்.

கார்கால வானத்தில் மின்னல்கள் மாறி, மாறிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

"நீயொரு சுயநலவாதி, ஏமாற்றுக்காரன், உன் பொய்யான வார்த்தைகளை நான் ஒரு போதும் நம்பப் போவதில்லை. நீ எல்லோரையும் போல் என்னையும் நினைத்துவிடாதே! நான் கௌரவமானவன், கண்ணிய மானவன். உன் உதவி இன்றியே என்னால் வாழ முடியும். என் இனத்தவர்களின் மேல் உனக்கு பெரிய பொறாமை. நாங்கள் அழகான, செழிப்பான, பக்குவமான வாழ்வுடைய வர்கள். இந்த உலகில் யாரையுமே நம்பி நான் பிறக்கவில்லை. எனக்கு நானே எஜமான். இருந்து பார், இதைச் செயலில் காட்டு கிறேன்." என்று அகங்காரமாகக் கூறிவிட்டு, ஏளனத் துடன் சிரித்தது, குருவிச்சை.

"அதையும் பார்த்துவிடலாம்" என்று அமைதி யாகக் கூறிய பட்டமரம், குருவிச்சையின் பேதமையை எண்ணி எண்ணி மனவேதனைப் பட்டது.

காலம் உருண்டு கொண்டே இருந்தது. பட்டமரம் மோனத்தவத்தில் மூழ்கிக் கிடந்தது. எங்கும் ஒரே சூனியம், அமைதி. பாவம்! வீறாப்புப் பேசிய இளங்குருவிச்சை, உண்ண உணவின்றி, உடல் கருகிச் செத்துவிட்டது. பட்ட மரம் நாட்களை எண்ணி, எண்ணி ஈசனைத் துதித்துக் கொண்டே வாழ்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டங்களின் கொட்டம்!

அவன் கைதேர்ந்த ஓவியன். எண்ணற்ற ஓவியங் களைப் படைத்துப் புகழின் உச்சியில் நடமாடிக் கொண்டிருந்தான். அவன் அதியற்புத ஓவிய மொன்றைப் படைக்க விரும்பி, இரு வித்தியாச மான வட்டங்களை வெள்ளைத் தாளொன்றில் வரைந்து கொண்டு அவ்வட்டங்களையே நோக்கிக்கொண்டி ருந்தான். வினாடிகள், நிமிடங்களின் இரையாகிக் கொண்டிருக்கின்றன. வட்டங்களில் பதித்திருந்த தன் நேத்திரங்களை ஓவியன் மாற்றிக்கொண்டு, தன்னையே மறந்து சிந்திக்கிறான். ஓவியனின் சிந்தனை நீண்டு கொண்டே இருந்தது.

எங்கும் ஒரே அமைதி!

அமைதியின் சின்னமாக விளங்கிக்கொண் டிருக்கும் அவ்வறையில், ஓவியனால் வரையப்பட்ட வட்டங்களுக் கிடையில் விசித்திரப்போட்டி.

"ஏய்! சின்னப் பயலே, என்ன அப்படி யோசித்துக் கொண்டிருக்கிறாய்? இங்கு நான்தான் உன்னைப் பார்க்கிலும் பெரியவன். இனி என் சொற்படிதான் நீ கேட்டு நடக்கவேண்டும். இதை விட்டு வீணாக கத்தக் கூடாது." என்று எச்சரிக்கை செய்துவிட்டு, பெரிய வட்டம் புன்னகை செய்தது.

"நீயொரு வடிகட்டிய முட்டாள். உன்னைப் போன்றவர்களின் சுயநலப் போக்கினால்தான், நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறோம். உலகில் சிறியவன், பெரியவன், பணக் காரன், ஏழை என்ற பாகுபாட்டை உருவத்தையும், அழியும் செல்வங்களையும் மட்டும் வைத்துக்கொண்டு தீர்மானிக்க முடியாது. உன்னையும், உன் எண்ணத் தையும், அறியாமையையும் பார்க்கும்போது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. உன்னையே நீ ஏமாற்றிக் கொள்ளாமல், வாயை மூடிக்கொண்டு, மாறுகின்ற உலகின் போக்கிற்கேற்ப நீயும் உன் வாழ்க்கையை மாற்றிக்கொள்" என்று குட்டிப் பிரசங்கமொன்றையே செய்துவிட்டு சிறிய வட்டம் அமைதியாகியது.

"சீ! வாயை மூடு, மீண்டும் பேசினால், உன்னைக் கொன்றுவிடுவேன். கவனமாக இருந்துகொள்" என்று ஆத்திரமாகக் கூறிய பெரிய வட்டம் சினத்தால் சீறிக் கொண்டிருந்தது.

அமைதி பிறக்க, ஓவியனின் சிந்தனை மாறுகிறது. மறுகணம் வட்டங்கள் வரையப்பட்டிருந்த வெள்ளைத் தாளைக் கிழித்துவிட்டு, மீண்டும் வேறு ஒரு தாளில் எதையோ கீறுகின்றான்.

பாவம்! வட்டங்கள் பெயர் மாறி, காகிதத் துண்டுகளாகச் சிதறுகின்றன.

ஓவியனின் தூரிகை, யந்திரமாகிக் கொண்டிருக் கிறது. அதியற்புத சிருஷ்டியைப் படைத்துவிடத் துடிக்கும் ஓவியன், கண்ணும் கருத்துமாய்த் தன் பாதையில் முன்னேறிக்கொண்டிருக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிறைவு

வண்ணத் தோட்டம். அதன் நடுவில் கன்னி மாமரம்; ஒன்று கம்பீர்யமாக நிற்கின்றது. மாங்கிளை ஒன்றில் குருவிச்சைச் செடியொன்று, வளர்ந்து நிற்கிறது. செழித்து நிற்கும்.

குருவிச்சைக்குச் சின்னக் கனிகள் பல வண்ண மூட்டிக் கொண்டிருக்கின்றன.

கனிகளில் இச்சை கொண்டு சில சின்னக் குருவிகள், அவைகளைச் சிதைத்துக்கொண்டிருக் கின்றன.

சிதையும் கனிகள் பல குருவிகளின் அலகுகளில் ஒட்டிக் கொள்கின்றன. குருவிச்சை தன் இனத்தைக் கள்ளத்தனமாகப் பரப்புவதில் தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒட்டிய கனியுடன் சில குருவிகள் தவித்துப் பறக்கின்றன.

தான் தோன்றியாய் வந்து, தன் உதிரத்தை உறிஞ்சிக்கொண்டிருக்கும் குருவிச்சையின் செயல், மாங்கிளையின் மனத்தைக் குடைகிறது.

"தம்பி உணவைத்தான் களவாக என்னிடம் கவர்ந்துவிடுகிறாய். ஆனால் உன் இனத்தைப் பெருக்கவும் வேறொரு களவா?" என்று உண்மையை கேட்டுவிட்டு மாங்கிளை அமைதியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியளிக்கும் உரிமைக்குரல்;

"நான் தயாளன். இல்லையென்ற சொல்லுக்கே என்னிடம் என்றும் இடமில்லை. அதனால் நான் அள்ளிக் கொடுக்கிறேன். அவர்கள் என் நண்பர்கள்" குருவிச்சை துடிப்பாக விடை பகர்கிறது.

"சின்னப் பயலே நாவை அடக்கிப் பேசு" உண்டியளிக்கும் மாங்கிளையின் சினம் சென்னியைத் தாண்டுகிறது.

"சத்தம் போடாதே, நான் நினைத்தால் உன்னையே கொன்றுவிடுவேன். என் சக்தி புரியாமல் உளறாதே. செஞ்சோற்றுக் கடனுக்காக உன்னை மன்னிக்கிறேன்." என்று கூறிவிட்டு குருவிச்சை கொதிக்கிறது.

கர்ணன், செஞ்சோற்றும் கடனுக்காகக் களத்தில் குதித்து விட்டான்.

குந்தியின் தாய்மை, தோல்வியடைகிறது. கர்மம் மேலோங்கி களத்தில் இறங்கி விட்டது. ஒன்றுமறியா மாங்கிளையின் முகத்தில் ஏழ்மை படர்கிறது. பரிதாப நிலை.

சடுதியாக மாமரப்பக்கம் வந்த தோட்டக்காரனின் நேத்திரங்கள் குருவிச்சையைத் தொடுகின்றன.

தோட்டக்காரன் முகத்தில் அக்கினி ஜனிக்கிறது. குருவிச்சையை சிதைக்கும் ஆவேசத் துடிப்பில்;

கையிலிருந்த கத்தியால் அடுத்த நிமிடமே குருவிச்சையை வெட்டிச் சரித்துவிடுகிறான் போர்க் களத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியை அழித்துவிட்ட இறுமாப்பில் தோட்டக் காரன் நடந்து கொண்டிருக்கிறான். வெட்டுண்ட குருவிச்சை நிலத்தில் கிடந்து வெதும்புகிறது.

மாங்கிளைக்கு மன நிறைவு. தன்னைச் சுற்றிப் படர்ந்த கொடிய குருவிச்சையின் பிடியிலிருந்து விடுபட்ட பெருமிதம்.

மாமரம் அமைதியாக நிற்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைகுழிப் புரட்சி!

அது மயானம். வாழ்ந்து கழித்துவிட்ட ஆன்மாக் களின் உடல்களையெல்லாம் கபளீகரம் செய்து அமைதியாகக் கிடக்கிறது. பரந்து கிடக்கும் அதன் தோற்றத்தில்தான் எத்தனை கோலங்கள். சிதைந்து கிடக்கும் மண் குவியல்கள், சிதறிக் கிடக்கும் பானைகள், சட்டிகள், மலர் வளையங்கள் எங்குமே பயங்கர ஆட்சி.

நடுநிசியின், அழுக்குப் பிடியில் தவித்துக் கிடக்கும் மயானத்தில் இரு ஆந்தைகள் மூச்சுப் பிடித்துக் கத்திக் கொண்டிருக்கின்றன. தெரு நாய்களின் ஓலங்கள் நாலா பக்கமும் கேட்டுக்கொண்டிருக்கின்றன. அமைதி குலைகிறது.

மயானத்தின் ஒரு மூலையில் பயங்கரச் சிரிப் பொலிகள். காலையில் புதிதாகத் தோன்றிய புதைகுழி யொன்றுக்கும் பாழடைந்த புதைகுழியொன்றுக்கும் கடும்போர். போரின் உக்கிரத்தில் வார்த்தைகள் அம்பு களாகிப் பாய்கின்றன. போர்க்களம் ஜனிக்கிறது.

"சீ! வட்டிப்பேயே! என் பக்கத்தில் ஏன் வந்தாய்? காலமெல்லாம் வட்டிக்குக் கொடுத்து, ஒன்றுமறியாத ஏழைகளின் சொத்துக்களையெல்லாம் அபகரித்து, அவர்களின் வாழ்வைக் கெடுத்த பாதகன், நீ. உன் சுகபோகத்திற்காகவும், உன் பிள்ளைகளின் நல்வாழ் விற்காகவும், ஏழைக் குடும்பங்களைச் சீரழித்த உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் இருக்கவே எனக்கு மனம் கூசுகிறது. உன் மூச்சுப்பட்டாலே, கொடிய பாவம். உன் பாவச் சுமைகளை எல்லாம் அள்ளிக்கொண்டு இங்கிருந்து ஓடிவிடு.”

என்று, உலகில், சன்மார்க்க நெறி நின்று வாழ்ந்து மரணித்த பெரியார் ஒருவரின் பாழடைந்த புதைகுழி ஆவேசத்தால் குமுறியது.

“வாயைக் கொஞ்சம் அடக்கிப் பேசு, நான் வட்டிக்குக் கொடுத்தது, உண்மைதான், ஆனால் உன்னைப்போல் சன்மார்க்கத்தை விற்று வாழவில்லை. வேத நூல்களையும், நெறிமுறைகளையும் உன் சுகபோகத்திற்காகவும், வசதிக்காகவும் திசைதிருப்பிக் கொண்டு வாழவில்லை. சன்மார்க்கம் என்ற போர்வையில் ஏழைகளை ஏமாற்றி, அவர்களின் உழைப்பைச் சுரண்டி வாழ்ந்த நீயொரு, படுபிற் போக்குவாதி. உன்னை நினைத்தாலே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. கொடியவனே! என் பக்கத்தில், நில்லாமல் ஓடிப் போய்விடு!’

காலையில் புதிதாகத் தோன்றிய புதைகுழி தன் வாய்க்கு வந்ததையெல்லாம் கக்கிவிட்டு விம்மிக் கொண்டிருக்கிறது.

அப்பொழுது, இரண்டு புதைக்குழிகளுக்கு மிடையில் சிதைந்து உருமாறிக்கிடந்த புதைகுழி யொன்று ஆவேசத்துடன் பொங்கியெழுந்தது.

“கொலைகாரப் பாவிகளே! ஏன் வீணாக உங்கள் மண்டைகளைப் போட்டு உடைக்கிறீர்கள்? நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமே துரோகிகள், நயவஞ்சக நாய்கள். என் செல்வங்களை கொள்ளையடிக்க, உங்கள் இருவரி னாலும் திட்டமிட்டு, படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட உங்கள் மூத்த சகோதரன் தான் நான். உலகத்தை உங்களால் ஏமாற்ற முடிந்தாலும், உண்மையை உங்களால் ஒருபோதுமே ஏமாற்ற முடியாது. உண்மை என்றும் நித்தியமானது. அது சக்தியமானது."

சிதைந்து உருமாறிக் கிடந்த மூன்றாவது புதைகுழி ஆவேசத்துடன் பேசிவிட்டுச் சாந்தமானது. மயானம் அமைதியின் அமுக்குப் பிடியில் மீண்டு சிக்கிக் கொண்டது.

அங்கே, ஆவேசத்துடன் கத்திக்கொண்டிருந்த மார்க்கப் பெரியாரின் புதைகுழியும், வட்டிக்காரனின் புதைகுழியும் ஊமையாகிக் கிடந்தன. அமைதியாகக் கிடக்கும் மயானத்தில் பேய்களும், நாய்களும் புதைகுழிகளைத் தோண்டிக் கொண்டிருக்கின்றன.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்

கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடும் வெள்ளம் போல், மக்கள் நடமாடும் பிரதான வீதி, அதன் ஓரத்தில், கால தேவனின் பவனியைப் பறைசாற்றி நிற்கும் ஆலமரம், எண்ணெய் வாடையே கண்டறியாத முற்றுந் துறந்த முனியின் முறுக்கேறிய முடிமயிர்களைப் போன்று, எண்ணற்ற விழுதுகளைத் தொங்கவிட்டுக் கொண்டு கம்பீரமாக நிற்கிறது. அதனடியில் வறுமையின் கோரப் பிடியில், சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் முடவனொருவன் வீதியில் வருவோரிடமும், போவோரிடமும் கரங்களை நீட்டி, இரந்துகொண்டிருக்கிறான். முதுமையின் கோலத்தை வெளிப்படுத்தும் வெளுத்த தாடி, வேதனையில் வெந்து வெதும்பிப் பாதாளத்தில் உருளும பரிதாப நேத்திரங்கள், நாற்றமெடுத்த கந்தல் துணிகள், சொறிந்தும் பிய்த்தும் சீழ் வழிகின்ற புண்கள், கட்டுப் போடப்பட்ட காயங்கள் யாவும் முடவனை 'அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இரக்கும் முடவனின் வேண்டுகோள் அனைத்தும் அனாதையாகித் தவிக்கின்றன. முயற்சியுடன் மீண்டும், மீண்டும் தன் பல்லவியை இராகமெடுத்துப் பாடிக் கொண்டே இருக்கிறான். முடவனின் பரிதாபத்தை கண்டுகொள்ள மனமின்றி சூரியன், அந்திவானத்தில் மறைந்துவிடுகிறான் பாவம்! அவன் முயற்சியனைத்தும் தோல்வியடைகின்றன. மறுகணம், தன் செயற்கைக் கால்களைக் கக்கத்துக்குள் அமுக்கி வீதியில் இறங்கி நடக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீ! என்ன வாழ்க்கை? என்ன உலகம்? என் போன்ற ஏழைகள் இந்த இரக்கமற்ற உலகில் பிறக்கவே கூடாது: பிறக்கவே கூடாது! உலகில் ஒருவருடைய உள்ளம் படும் வேதனையை மற்றவர் புரிந்துகொள் வதுதான் கஷ்டமென்றால், இந்த ஈசனுமா கண்களை மூடிக்கொண்டிருக்க வேண்டும்? கடவுள் மிகப் பொல்லாதவன், ஈவிரக்கமற்றவன், கண்ணில் லாத கபோதி, கல்நெஞ்சம் படைத்தவன், பரிதாபங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கும் படுபாவி..." மனதில் பட்டவாறெல்லாம் கடவுளைத் திட்டிக் கொண்டு நடக்கிறான். அப்பொழுது, முடவனின் நேத்திரங்கள் வீதியின் ஓரிடத்தில் கூடுகின்றன.

அங்கே ஒரு சிறுபை.

முடவன் ஆவலுடன் சென்று பையை எடுத்துத் திறக்கிறான். பையிலிருந்து பண நோட்டுக்கள் முடவனைப் பார்த்துச்சிரிக்கின்றன. முடவன் உலகை மறக்கிறான். வானம் விரிந்து கொண்டிருக்கிறது. அடுத்த வினாடி,

"கடவுளே! நீயல்லவா கருணையுள்ளவன். நீயே புகழ்ச்சிக்குரியவன், எல்லையற்ற உன் அன்புக்குமுன் எந்த அன்பு தான் முன் நிற்கமுடியும்? உன் அன்புக்கு உன் அன்பே நிகர், உன்னையே வாழ்த்துகிறேன், போற்றுகிறேன், வணங்குகிறேன்! மனிதர்களுக் கெல்லாம், இருப்பது ஊனக் கண், உனக்கிருப்பதோ ஞானக்கண். நீ எஞ்ஞான்றும் சிதையாத பரம்பொருள். நீயே கருணா மூர்த்தி" என்று தன் மனதில் பட்டவாறெல்லாம் ஈசனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டு நடைக்கு உரங்கூட்டிக் கொண்டிருக்கிறான், முடவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது, வீதியின் ஓரத்தில் சாந்தமே உருவாகி, வழிப்போக்கர்களுக்கெல்லாம் கருணை அளித்துக்கொண்டிருக்கும் ஈசனின் திருத்தலத்தில் தரித்து நின்று, கைகூப்பி வணங்கிவிட்டு, மீண்டும் நடந்து கொண்டிருக்கிறான் முடவன்.

அப்பெருமான் முகத்தில் எவ்வித மாறுதலு மில்லை. அவர் கருணையே உருவாகி எப்போதும் போலவே அமைதியுடன் இருந்து எல்லோரையும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் விளையாட்டு

அது ஒரு பெரிய பாம்பு. பகல் முழுவதும் உணவிற்காக அலைந்து திரிந்து இறுதியில் சிறிய தவளையொன்றைக் கண்டு, அதைப் பிடித்துண்ணும் நோக்கோடு சப்தமின்றி அமைதியாக ஊர்ந்து கொண்டிருக்கிறது. பதுங்கி வரும் பாம்பின் கபட எண்ணத்தைப் புரிந்துகொண்ட தவளை, உயிருக்குப் பயந்து பாய்ந்தோடுகிறது. முன் வைத்த காலைப் பின் வைக்க மனமின்றி, பாம்பும் தவளையைப் பின் தொடர்கிறது. ஓடிய தவளை, ஓரமாக இருந்த கல்லோட்டை ஒன்றுக்குள் பக்குவமாகப் புகுந்து பதுங்கிக் கொள்கிறது. தவளையைத் தொடர்ந்து வந்த பாம்பு, அது சென்ற இடம் தெரியாது தவித்துக் கொண்டிருக்கிறது. மறுகணம்; கல்லோட்டைக்குள் கடுஞ்சண்டை.

"டேய்! பொடிப்பயலே! இங்கே ஏன் வந்தாய்? இங்கிருந்து உடனே ஓடிவிடு. இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன்." என்று கல்லோட்டையை ஏற்கனவே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பெரிய தவளையொன்று உயிருக்குப் பயந்து பதுங்கிய சிறிய தவளையைப் பார்த்துக் கத்தியது.

"சகோதரா! ஒரு சில நிமிடமாவது இங்கு தங்கிச் செல்ல எனக்கு அனுமதி அளித்தருள். என்னைப் பிடித்து விழுங்குவதற்காக ஒரு கொடியவன், தன் கோரப் பற்களை கூராக்கிக்கொண்டு, வெளியில் காத்துக்கொண்டிருக்கிறான். உன் கால்களில் விழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சிக் கேட்கிறேன். உன் இனத்தவனான, என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே!" என்று சிறிய தவளை பெரிய தவளையிடம் கெஞ்சியது. கைகூப்பி மன்றாடியது.

"சீ! உன்னைப் பார்க்கவே என் நேத்திரங்கள் கூசுகின்றன. நீயும், உன் உருவமும், ஒரே அசிங்கம்! ஒரு வினாடியும் நீ, இங்கே இருக்கமுடியாது, உடனே போய்விடு" என்று உறுமியது. பயங்கரமாகக் கத்தியது.

விரல் நொடிக்கும் நேரம்.

தவளையின் மறைவில் சிந்தை குலைந்து தவித்துக் கிடந்த பாம்பு, கல்லோட்டையில் இருந்து வந்த தவளைகளின் சப்தத்தைக் கேட்டுக் களிப்புடன் ஓட்டைக்குள் நுழைகிறது.

வெற்றிக் களிப்பில் பாம்பு சுறுசுறுப்படைகிறது. போர்க்களம் ஜனிக்கறிது. பாவம்! கல்லோட்டைக் குள் இருந்து கத்திக்கொண்டிருந்த பெரிய தவளையைத் தன் கோரப் பற்களால் பாம்பு பிடித்து விழுங்கிக் கொண்டிருக்கிறது. பாம்பின் வாய்க்குள் படிப்படி யாகச் சென்று கொண்டிருக்கும் பெரிய தவளை ஈனக் குரலெழுப்பிக் கத்திக்கொண்டிருக்கிறது. எதுவுமே செய்ய முடியாமல் பெரிய தவளையின் கடைசி முனகலைக் கேட்டு சின்னத் தவளை, அழுகிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியற்ற ஒற்றுமை !

பரந்த வயல்வெளி, அதன் பசுமைக்கு ஜீவநாடி போல், நதியொன்று வயல்வெளியை ஊடறுத்து, உயிர்த் துடிப்புடன் ஓடிக்கொண்டிருக்கிறது. நதியின் கரையொன்றில் உலகத்தையே மறந்து உவப்புடன் நிற்கிறது பூமரமொன்று. நதியின் ஓட்டத்தில் அள்ளுப் பட்டு வந்த பசுவின் பிண மொன்று, மரத்தின் அடியில் தஞ்சமடைந்து, ஊதிப் பெருத்து உருக்குலைந்து கிடக்கிறது. தஞ்சமடைந்து கிடக்கும் பிணத்தை காகங்கள் உரத்து சப்தமிட்டவாறு கொத்தித் தின்று கொண்டிருக்கின்றன. கிடைத்த உணவைத் தன் இனத்தோர் எல்லோருக்கும் அளிக்கும் விருப்பில், காகங்கள் இராகமெடுத்து, தொனியைக் கூட்டிக் கொள்கின்றன. அப்பொழுது, நாயொன்று நாவிலூறிய உமிழ்நீர் கடைவாயில் வழிந்தோட, ஓடிவந்து பிணத்தைக் கடிப்பதில் இயந்திரம்போல் சுழன்று கொண்டிருக்கிறது.

தேடியலைந்த திரவியம் காலடிக்கு வந்துவிட்ட களிப்பில், நாய் பிணத்தைக் மூச்சு விடாமல் கடித்துக் கொண்டிருக்கிறது. காகங்கள் தங்கள் இனத்தவர்களை அழைப்பதில் சற்றுத் தீவிரமடைகின்றன.

காகங்களின் ஓயாத கத்தலினால், நாயின் சினம் சென்னியைச் தாண்டுகிறது.

"சீ! மடக் காகங்களே, வீணாக ஏன் கத்தித் தொலைக்கிறீர்கள்? இப்படி மூச்சுப் பிடித்துக் கத்து வதனால், நீங்கள் என்ன பிரயோசனத்தைப் பெறப் போகிறீர்கள்? ஏதோ, கிடைத்த உணவை நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் பயன்படுத்திக் கொள்ளாமல் தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கும் உங்களையெல்லாம் பார்க்கும்போது எனக்கு ஆத்திரம்தான் வருகிறது. மீண்டும், சப்தம் போட்டால் என் கோபத்தை குணத்தை உங்களுக்கு பகிரங்கமாகக் காட்டி விடுவேன். ஜாக்கிரதை!" என்று காகங்களுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு, நாய் பிணத்தைக் கடிப்பதில் மீண்டும் உக்கிரமடைகிறது.

"நாயாரே! எங்களுக்கு கிடைக்கும் உணவு எள்ளானாலும் அதை எட்டாகப் பிரித்துண்ணும் இனம் எங்களினம். எமக்குக் கிடைக்கும் உணவை எம் இனத்தவர்களுடன் சேர்ந்து பகிர்ந்துண்பதே எங்கள் பழக்கம். அப்படிச் செய்வதில்தான் எங்கள் உள்ளம் நிறைவுறுகிறது. இதெல்லாம் உனக்கு எங்கே விளங்கப் போகிறது. நீ நினைப்பதுபோல் நாங்கள் சும்மா கத்தவில்லை. இது எங்கள் இனத்தவர்களுக்கு நாங்கள் விடுக்கும் அன்பான அழைப்பு. இப்போது எங்கள் நோக்கம் உனக்குப் புரிகிறதா?" என்று காகங்களெல்லாம் ஒருமித்துக் கூறிவிட்டு, மீண்டும் தம் இனத்தவர்களை அழைப்பதில் மும்முரமடைகின்றன.

காகங்களின் "குத்தல்" வார்த்தைகளினால் நாய் சீற்றமடைகிறது. ஒருவித வெறி, வெறுப்பு.

"அற்பக் காகங்களே! கொல்லர் தெருவிலா ஊசி விற்கப் பார்க்கிறீர்கள்? ஒற்றுமையை உலகிற்கு அறிமுகப்படுத்தி, பகிர்ந்துண்ணும் பழக்கத்தைப் பறை சாற்றிய எங்களிடமா உங்கள் எள்ளை விதைக்கப் பார்க்கிறீர்கள்? நன்றியின் சின்னமாகிய எங்களை பகுத்தறிவு படைத்த மக்களே வாரியணைத்து முத்தமளிக்கும் அழகான காட்சிகளை நீங்கள் காணவில்லையா? பெற்ற பிள்ளைகளைப் பார்க்கிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக அன்புடன் எங்களுக்கு உணவூட்டிச் சீராட்டும் பெண்களிடம் போய் எங்களைப் பற்றிக் கேளுங்கள். அவர்கள் எங்கள் மகிமையைப் பற்றி விடியவிடியக் கூறுவார்கள். இறைவனின் அதி அற்புத சிருஷ்டியாகிய மனிதர்களே மதித்து எம்மினத்தைக் கௌரவிக்கும் போது, அற்பப் பதர்களாகிய நீங்கள் எமக்கு எம்மாத்திரம்! இனியும் என்னுடைய கோபத்தைத் தூண்டாமல் இங்கிருந்து ஓடிவிடுங்கள்." என்று வெறுப்புடன் கூறிவிட்டு மீண்டும் பிணத்தைக் கடிக்கிறது நாய்.

நாயின் வார்த்தைகளைச் சட்டை செய்யாது, காகங்கள் கத்திக்கொண்டே இருக்கின்றன. அப்பொழுது தூரத்திலிருந்து வேறு நாயொன்று பதறிப் பதறி ஓடிவந்து பிணத்தைக் கடிக்கிறது. போர்க்களம் வெடிக்கிறது. ஒரே அமர்க்களம்.

மறுகணம், இருநாய்களும் ஒன்றையொன்று கடித்துக் குதறிக்கொண்டிருக்கின்றன. எதையும் சட்டை செய்யாது காகங்கள் தங்கள் இனத்தவர்களை அழைத்துக்கொண்டு, பிணத்தை ருசித்துக்கொண்டே யிருக்கின்றன.

நாய்கள் இரண்டும் கிடைத்த உணவையே அடியோடு மறந்து, ஒன்றையொன்று கடித்துக் குதறுவதில் தீவிரமடைந்து கொண்டிருக்கின்றன.

நன்றியின் சின்னங்களான நாய்களின் சண்டையைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாது காகங்கள், தங்கள் இனத்தவர்ளை கூவி அழைத்துக்கொண்டிருக்கின்றன.

நதி, அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்

உலக மேடையில், ஆத்மாக்களின் கோலங்களை, ஏகன் என்னும் மாபெரும் தலைவன், சக்தியென்னும் தன் வண்ணத் தூரிகையினால் சிருஷ்டித்து, கரைகான முடியாத பெருமையின் விளிம்பில் நின்று சிரித்துக் கொண்டிருக் கிறான். அவன் சிரிப்பில், காலங்கள் உதிர்ந்து ஜீரணிக்கப்படுகின்றன.

"குருதேவா!"

இறைவனின் எல்லையற்ற நித்திய ஒளியில் வீட்டிலாகி, சதா அதையே நினைந்து, நினைந்து சுழன்றுகொண்டிருக்கும் துறவியொருவரின் நேத்திரங் கள், தன் சீடனின் அழைப்பினால் மொட்டவிழ் கின்றன. மயக்க நிலையில், சூனிய வெளியில் நீந்திக் கொண்டிருக்கும் சீடன், குருவின் பாதங்களில் மலராகின்றான். வித்தைகள் மந்திரங்களாகின்றன. ஞானம் விழிப்படைத்து, ஒளிப்பிழம்பாகிப் பரவு கின்றது. சீடன் சென்னி தாழ்த்தி அமைதியாக நிற்கிறான்.

"குழந்தாய்! என் சூத்திரங்களின் பூரண சிருஷ்டி யான நீ, இன்று, இம்மாய உலகை வெல்லக்கூடிய எல்லாச் சக்திகளையும் பெற்று எனக்குச் சமமாகி விட்டாய். இனி, நீயும் நானும் சக்தியில் ஒன்றே. எனவே, உன்னை நான் எப்படிப் பக்குவமாகப் படைத்தேனோ, அதைப் போன்று நீயும் ஒரு சீடனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்து, குருவாகிக்கொள்! உன் வழி ஒளிபெற என் ஆசிகள்."

கமண்டலத்திலிருந்து புனித நீரைக் கரங்களிலே ஊற்றி, மந்திரங்களால் அதை நிறைத்து சென்னி தாழ்த்தி நிற்கும் சீடனின் தலையில் தெளித்து விட்டுக்குரு இறைவனின் சீடனாகிறார். சீடன் குருவின் ஆணையைச் சிரமேற்று தனக்காகச் சீடனொருவனைத் தேடி நடந்து கொண்டிருக்கிறான். உறுதியுடன் பதிந்து கொண்டிருக்கும் அவன் அடிச்சுவடுகளுக்கிடையில் காலங்கள் சிதைந்து கொண்டிருக்கின்றன. ஒருநாள் சீடன் தியான ஒளியில் முழ்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவன் காலில் எறும்பொன்று ஏறிக் கடித்துக் கொண்டிருக் கிறது. உயிர்க் கொலை செய்வது பாவமென்று கூறிய தன் குருவின் ஞானோபதேசத்தை, இரைமீட்டு, கடித்துக் கொண்டிருக்கும் எறும்புக்கு எவ்வித துன்பமும் அளிக்காது நிஷ்டையில் சங்கமமாகிறான். அங்கே, பட்டினி என்னும் கொலை காரனால் எய்யப்பட்டு வரும் சிறிய பூச்சியொன்று, சீடனின் காலில் கடித்துக் கொண்டிருக்கும் எறும்பைப் பாய்ந்து பிடித்துக் கொள்கிறது. வேதம் ஓதிக் கொண்டிருந்த பூசாரியின் சென்னியில் வேல், நேராகப் பாய்கிறது.

"ஐயோ! என்னைக் கொல்லாதே, உயிர்க் கொலை செய்வது பெரும் பாவம். கொலைஞர்களுக்கு மோட்சமே இல்லை. இதனால் என்னை விட்டுவிடு. ஈசா! எனக்கு நீதான் துணை புரியவேண்டும். இந்தப் பொல்லாத பூச்சியிடமிருந்து என்னைக் காப்பாற்று. எனக்கு உயிர்ப்பிச்சை தந்தருள்!" என்று எறும்பு பிரார்த்தித்தது. வேதம் சிரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எறும்பே! தர்மத்தைக் பற்றி என்னிடம் பேசாதே. உன்னை நான் கொல்வது பாவமென்றால், நான் பசியால் மடிவது பாவமில்லையா? என்னைப் பசியால் இறைவன் அணுஅணுவாகச் சாகடித்துக் கொண்டிருக்கிறான். உயிர்க் கொலை செய்வது பாவ மென்றால் என்னை ஈசன் கொல்வதும் பாவம்தானே? கொலைஞர்களுக்கு மோட்சமில்லை என்றால் பசியால் என்னைக் கொன்றுகொண்டிருக்கும் கடவுளுக்கு கிடைப்பது நரகமா? நான் உன்னைக் கொல்லாமல் விட்டால், ஈசன் என்னைக் கொன்று விடுவானே! எனக்கு மோட்சம் பெரிதல்ல; என் உயிர்தான் பெரிது. ஏகனே என்னைக் காத்தருள்." என்று பூச்சி கூறிவிட்டு, எறும்பை ருசித்துச் கொண்டிருக்கிறது.

தத்துவம் பிம்பமாகிப் பரவுகிறது. பூச்சி, எதையும் பாராது நகர்ந்து கொண்டிருக்கிறது. கர்மத்தைச் சுற்றிச் சக்கரங்கள் சுழலுகின்றன. கிருஷ்ணனின் உபதேசம் தொடர்கிறது. காண்டீபன் செயலிழந்து நிற்கிறான். ஞானம் சிரிக்கிறது. சீடனின் நிஷ்டை கலைகிறது. எறும்பை பூச்சி கொன்று சாப்பிட்டது சரியா அல்லது சீடன் எறும்பை கொல்லாதிருந்தது சரியா? விடைக் காக சீடன் குருவை நாடி ஓடிக்கொண்டிருக்கிறான். ஒரு ஆத்மாவைக் கைப்பற்றி விட்ட களிப்பில் எமன் நிம்மதியடைகிறான்.

ஏகனென்னும் நெறியாளன் குறுநகை பூக்கிறான்.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரங்கள் சிரிக்கின்றன!

மாபெரும் ஓவியப்போட்டி. கைதேர்ந்த ஓவியர்கள் தங்கள் திறமைகள் எல்லாவற்றையும் தூரிகையில் சேர்த்து, அழகிகளின் உருவங்களை வண்ணமுடன் வரைந்து, காட்சிக்கு வைத்திருந்தனர். காலத்தால் அழியாத காதற் சிறப்போடு மிளிர்ந்து கொண்டிருந்த அச்சித்திரங்களில், எந்தச் சித்திரம் அழகானது என்ற முடிவுக்கு வர முடியாமல் நீதிபதிகள் பரிதவித்தனர். எல்லாச் சித்திரங்களும் ஒன்றை ஒன்று வெல்ல முடியாமல், எல்லாமே ஒரே அச்சில் வார்த்ததை போல் இருந்தன. அவ்வளவு அழகு.

போட்டியில், ஓவியர்கள் எல்லோரும், முதற் பரிசு தமக்கே கிடைக்கும் என்ற அசையாத துணிவில், அகம் பூரிக்க அமைதியுடன் இருந்தனர்.

ஓவியப் போட்டியின் நடுவர்கள், தங்கள் திறமையனைத்தையும் ஒருங்கிணைத்து, முதற் பரிசுக்குரிய ஓவியத்தைத் தெரிவதில் இரவும் பகலும் கஷ்டப் பட்டனர்.

பாவம்! நடுவர்களால் எந்தப் படத்தையுமே முதற் பரிசுக்குத் தெரிவு செய்ய முடியாமல் போய்விட்டது. ஒரே சிக்கல், மயக்கம்!

ஓவியர்கள் விம்மி, விம்மி அழுதனர்.

ஊணின்றி, உறக்கமின்றி இரவும் பகலும் கஷ்டப் பட்டு அழகிகளின் உருவங்களை வரைந்த ஓவியர்கள், மனமுடைந்து பைத்தியமாகினர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவர்கள் செய்வதறியாது இறுதி முடிவு செய்வதற் காகப் போட்டியை அடுத்த நாளுக்கு ஒத்திவைத்தனர்.

நடுவர்களின் முடிவை எதிர்பார்த்துக் காத்திருந்த ஓவியர்களும் பொதுமக்களும் மனமுடைந்து போட்டி மண்டபத்தை விட்டு வெளியேறிச் சென்றனர். எங்கும் ஒரே அமைதி!

அப்பொழுது, பாவம்! மண்டபத்தின் மத்தியில் ஓவியன் ஒருவன் பிரமை பிடித்து அழுது கொண்டிருந்தான். தனிமையில் நின்று புலம்பி அழும் அவ்வோவியனைப் பார்த்து, போட்டிக்கு அவனால் வரைந்து வைக்கப்பட்ட அவன் அழகி நகைத்தாள்:

மறுகணம், ஓவியனின் கோபம் சென்னியைத் தாண்டியது.

ஒரு இலட்சம் ரூபாய் கிடைக்குமென்ற நப்பாசை யினால், எண்ணற்ற கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்த அவ்வோவியன், தன் ஆத்திரங் களையெல்லாம் ஒருங்கே கூட்டி எத்தனையோ அல்லல்களுக்கிடையில் இரவு பகலாக வரைந்த தன் அழகியின் முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டு, நடந்து கொண்டிருந்தான்.

மறுநாட்காலை, மீண்டும் போட்டி ஆரம்பமானது. மக்கள் மண்டபத்தில் வழிந்தனர். நடுவர்கள் மத்தியில் என்றுமில்லாத குதூகலம்! புதையலைக் கண்டு விட்ட மந்திரவாதியைப் போல், நடுவர்கள் துள்ளிக் குதித்தனர்.

மக்கள் திகைத்து நின்றனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவர்களின் நேத்திரங்களோடு, பார்வையாளர் களின் நேத்திரங்களும் சேர்ந்து உமிழ்நீரால் களங்கப் படுத்தப்பட்ட அழகியை இமை வெட்டாது இரசித்துக் கொண்டிருந்தன. ஒரே ஆச்சரியம்!

இறுதியில், உமிழ்நீரால் களங்கப்படுத்தப்பட்ட அழகியின் ஓவியம் நடுவர்களின் ஏகோபித்த முடிவிற் கிணங்க ஒரு இலட்சம் ரூபா முதற்பரிசுக்கு தேர்ந் தெடுக்கப்பட்டது.

பாவம்! மற்ற ஓவியர்கள், பிரமை பிடித்து தங்கள் ஓவியங்களை கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருக் கின்றனர். பாவம் ஓவியர்களைப் பார்த்து அவர்கள் வரைந்த அழகிய ஓவியங்கள் சிரிக்கின்றன! அப்பொழுது ஒரு இலட்சம் ரூபா பரிசுக்காக ஓவியன் மேடையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான். அவனால் வரையப்பட்ட அழகி, அழுது கொண்டிருக் கிறாள். மண்டபம், மகிழ்ச்சியால் நிரம்பி வெடித்துக் கொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலும் சிப்பிகளும்

கைப்பிடித்த கணவனைக் காலனுக்குப் பறி கொடுத்து, இரவும் பகலும் தலையிலடித்துப் புலம்பிக் கொண்டிருக்கும் அபலையைப் போன்று, கடல், மலை போன்ற அலைகளை உமிழ்ந்து, அவைகளால் கரையிலடித்துக் கதறிக்கொண்டிருக்கிறது. உருண்டு திரண்டு உயர்ந்து வரும் அலைகள், கடலில் கிடக்கும் கிளிஞ்சல்களையெல்லாம் அள்ளி வந்து, கரையில் வீசிக் கொண்டிருக்கின்றன. சதா கரையிலடித்து, தன் தூய்மையைச் சத்தியம் செய்துகொண்டிருக்கும் கடலின் செயலைச் சட்டைசெய்யாது, நிலமகள்; சாந்தமே உருவாகி அமைதியாகக் கிடக்கிறாள். பூரணமென்னும் காந்த விசைக்கோட்டில், ஞானம் இழுபட்டுக் கொண்டிருக்கிறது.

ஏகன் சிரிக்கிறான். அப்பொழுது, மலைபோன்று.

உயர்ந்து வந்த அலையொன்றினால் கரையில் வீசியெறிப்பட்ட சிப்பி, கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது.

களைப்பால் அவதியுற்றுக் கொண்டிருக்கும் சிப்பியின் பக்கத்தில், வேறு ஒரு சிப்பியும் அலை யொன்றினால் வீசி எறியப்படுகிறது. எறியப்பட்ட இரண்டாவது சிப்பியும், அலையின் தாக்கத்துக்கு ஈடு கொடுத்த களைப்பில், கஷ்டப்பட்டுக் கொண்டி ருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமகள், அமைதியின் சின்னமாகிக் கிடப்பதைப் பார்த்து கடல் குமுறிக் கொண்டிருக்கிறது. நாடகம், சீர்மையாக நகர்ந்து கொண்டிருப்பதில், ஏகன் மன நிறைவுற்று மகிழ்கிறான். களைத்துக் கிடக்கும் சிப்பிகள், ஒன்றையொன்று பார்த்து முறுவலிக்கின்றன.

பாசம், மொட்டவிழ்கிறது.

"சகோதரா! மூச்சு விடுவதற்கே இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு என்ன நடந்தது?"

இரண்டாவதாகக் கரையில், அலையால் வீசி யெறிப்பட்ட சிப்பி, முதலாவதாக வீசியெறியப்பட்ட சிப்பியைப் பார்த்து அனுதாபத்துடன் கேட்டது.

"பல வருடங்களாக இந்தப் பெருங்கடலோடு போராடி வாழ்ந்தவன் நான். எத்தனையோ திமிங் கிலங்களையும், சுறாக்களையும் வென்று பல கப்பல் களையும், பாறைகளையும் உடைத்தவன் நான். இந்த உலகைப் பார்க்கும் ஆசையில் இன்றுதான் இக்கரைக்கு வந்தேன். அதுதான் சற்றுக் களைப்பாக இருக்கிறது!"

என்று, களைப்புற்றுக் கிடந்த முதலாவது சிப்பி, தன் பெருமையையும், வீரத்தையும் படம்பிடித்துக் காட்டிவிட்டு, மீண்டும் கீழ்மூச்சு மேல்மூச்சு வாங்கிக்கொண்டிருக்கிறது.

"தம்பி, இவ்வளவுதானா உன் வீரம்? என், சரித்திரத்தைக் கேட்டால் நீ மயங்கிவிடுவாய். நான் பல வருடங்களாக, சமுத்திரங்களோடு போரிட்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு என் உடலிலுள்ள தழும்புகளே சான்று. என் வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான திமிங்கிலங்களையும், பல்லாயிரக் கணக்கான சுறாக்களையும் கொன்று குவித்திருக்கிறேன். என்னால் உடைக்கப் பட்ட பாறைகளுக்கும் கப்பல்களுக்கும் எண்ணிக்கையே இல்லை. பாவம்! இந்த சின்னக் கடலில் கிடந்து வந்த உனக்கு இவ்வளவு, களைப்பா? உன்னைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது." என்று கடல் அலையினால், ஆத்திரத்துடன் வீசப்பட்ட இரண்டாவது சிப்பி, தன் வீரத்தையும், உறுதியையும் கோடு கிழித்துக் காட்டிவிட்டு, உடலை ஆட்டிக் கொண்டது.

சிப்பிகளின் வீரத்தையும், பெருமைகளையும் கேட்டுக்கொண்டு, நிலமகள் அமைதியின் சின்னமாகிக் கிடக்கிறாள்.

அப்பொழுது, உயர்ந்து வந்த அலையொன்றினால், வீரம் பேசிய சிப்பிகள், இரண்டும், கிடந்த இடம் தெரியாமல் அள்ளி எறியப்படுகின்றன. மறுகணம், சிற்பிகள் இரண்டும், அலையினால் உடைத்து தூளாக்கப்பட்டு, உருத்தெரியாமல் கிடந்து ஒன்றையொன்று தேடி அழுகின்றன. குமுறிக்கொண்டிருக்கும் கடல், அலைகள் மீண்டும் மீண்டும் கரையில் அடித்து, நித்தியத்தை சத்தியம் செய்துகொண்டிருக்கின்றன.

மெய்யென்னும் சக்தி பூரணமாகி முறுவலிக்க, நிலைமகள் சிரிக்கிறாள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

விடியற்காலை, இரவெல்லாம் தூங்கிக் களைத்த சலிப்பில் வெட்டுக்கிளியொன்று, ஒடுங்கிக் கிடந்த தன் செட்டைகளை அகல விரித்துக்கொண்டு மேலே பறக்கிறது. அழிந்துபோன நேற்று என்ற உலகை அடியோடு மறந்து, இன்று என்ற புது உலகைப் பார்த்துச் சோபனம் கூறிக்கொண்டு பறந்து கொண்டே இருக்கிறது. எல்லியரக்கன் இரவுப் பெண்ணோடு சங்கமமாகி, அவளூட்டிய காதல் மதுவில் மயங்கிக் கிடந்து, கடைசியில் கடமைக்குத் தவறிவிட்ட அச்சத்தால், தட்டுத் தடுமாறித் தன் தொழிலுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான். எல்லி யின் வரவில் இன்பமுற்று இயற்கைப் பெண் எக்காள மிட்டுச் சிரிக்கிறாள்.

கோவலன், மாதவியை மறந்துவிட்டான். எங்குமே ஆனந்தக் களிப்பு. மதுவின் வெறி. பறந்துகொண்டி ருந்த வெட்டுக்கிளி அமைதியை நாடிக் கீழே வந்து, எல்லியின் வரவினால் பூரித்து நிற்கும் புல்லொன்றில், அமர்ந்திருக்கிறது.

விரல் நொடிக்கும் நேரம், வெட்டுக்கிளியைச் சுற்றி ஒருவித முனகல் சப்தம். ஏகன் சுருக்கை அவிழ்க் கிறான். தத்துவம் பிறக்கிறது.

"அம்மா !...ஐயோ !... மூச்சையடைக்கிறதே." என்று புல் அழுதது. வெட்டுக்கிளி எதையுமே சட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாது, எல்லியின் ஒளியில் மூழ்கிக்கொண்டே இருக்கிறது.

"ஐயோ!... என் உடம்பெல்லாம் வலிக்கிறதே, என் உயிரே போய்விடும் போல் தெரிகிறதே, ஆண்டவா! உன் அடியானைக் காப்பாற்றியருள்" என்று மீண்டும், மீண்டும் புல் அழுதுகொண்டே இருந்தது.

எங்குமே எமனின் சிரிப்பு. முனகல் சப்தமும் அவல ஓசையும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

"ஐயோ! இந்தப் பாரத்தை என்னால் தாங்கமுடிய வில்லையே. ஈசா, என்னைக் காப்பாற்று" என்று சப்தமிட்டுக் கத்தியது புல். பெருஞ்சப்தத்தால், வெட்டுக்கிளியின் சிந்தனையில் வெடிப்பு விழுகிறது. நேத்திரங்கள் நாலாபக்கமும் சுழல்கின்றன. இறுதியில், புல்லின் பாதங்களில் சரணடைகின்றன.

அங்கே வெட்டுக்கிளி அமர்ந்திருந்த புல் சென்னி தாழ்த்திக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறது. தர்மத்தின் நடுவில், போர்க்களம் ஜனிக்கிறது. போர்க் களத்தில், ஆத்மாவின் துடிப்பு. துடிப்பின் எல்லையில் கீதையின் சத்தியம் பிம்பமாகிறது.

வெட்டுக்கிளிக்கு ஒரே வியப்பு! வியப்பின் மத்தியில் கேள்வி, கணையாகிறது.

"புல்லே! நீயேன் இப்படி அழுதுகொண்டிருக் கிறாய்? உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? எதுவாயிருந் தாலும், தயங்காமல் கூறு."

வெட்டுக்கிளி, புல்லைப் பார்த்து அமைதியாகக் கேட்டுவிட்டுத் தன் வண்ணச் செட்டைகளை அசைத்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா! சிறிய பனித்துளியொன்றின் சுமையைக் கூட என்னால் தாங்க முடியாது. என் உடல் அவ்வளவு பலவீனமானது. இந்நிலையில், பார்க்கவே பயங்கரமாக விருக்கும் உங்களின் சுமையை என்னால் எப்படித் தாங்க முடியும்? இன்னும், சில வினாடிகள் என் மீது தாங்கள் குந்திக்கொண்டிருந்தால், என் மூச்சு தானாகவே நின்றுவிடும். உங்களின் சுமை படிப் படியாக என்னை நசுக்கிக்கொண்டே இருக்கிறது. ஆகையினால் என்மேல் கருணை கூர்ந்து, எழும்பிப் போய்விடுங்கள். தயவு செய்து, என்னையும் வாழ விடுங்கள்!"

என்று, புல் அமைதியாகப் பதிலை உமிழ்ந்து விட்டு, மூச்சுவிட முடியாமல் தவித்துக்கொண்டி ருந்தது. வெட்டுக்கிளி தன்னையே மறந்து சிரித்தது.

"என்னருமைப் புல்லே! இன்றுதான் என் சக்தியை உணர்ந்தேன். நான் இவ்வளவு சக்தியுள்ளவனாக இருப்பேன் என்று கனவிலும் எண்ணவில்லை. நானே இதுதுவரை அறியாத பேருண்மையை, நீயெனக்கு உபதேசித்தாய். உன் வார்த்தைகளைக் கேட்டு என் இதயமே மகிழ்ச்சியால் பொங்கி வழிகிறது. தயங்காமல் சத்தியம் செய்த உனக்கு என் நன்றிகள்." என்று கூறிக்கொண்டே, வெட்டுக்கிளி உடனே தன் சின்னச் செட்டைகளை வண்ணமுடன் ஆட்டிப் பறந்துகொண்டிருந்தது.

பறந்து கொண்டிருந்த வெட்டுக்கிளி மீண்டும் கீழே வந்து, கல்லொன்றில் அமர்ந்து, தன் சக்தியில் பெருமையுற்று, உடம்பைப் பலமாக ஆட்டிக் கொண்டது. உண்மையென்ற, பரிசோதனைக் களத்திலே வெட்டுக்கிளி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. மீண்டும், மீண்டும் தன் சுமையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லில் பதிப்பதில் வெட்டுக்கிளி பூரிப்படைந்தது. வினாடிகள், நிமிடங்களால் ஜீரணிக்கப்பட்டன. கல் அமைதியாகவே கிடந்தது.

குளம் உடைகிறது. வெகுளியின் சிசுவாகக் கேள்வி பிரமாவினால் சிருஷ்டிக்கப்படுகிறது.

"கல்லே! நீயேன் அழவில்லை? நான் பெரும் சக்தியும், பாரமும் உள்ளவன். என் பாரத்தைத் தாங்க முடியாமல் அந்தப் புல் பட்டபாடு, என் கண்களைக் கலக்கிவிட்டன. உனக்கு என் பாரம் தெரிய வில்லையா? அல்லது என் பயங்கரமான உருவத்தைக் கண்டு என்னிடம் பேசுவதற்கு நீ அஞ்சி, வேதனையை விழுங்கிக்கொண்டிருக்கிறாயா? என் பாரம் உனக்கு எப்படி இருக்கிறது"

என்று, ஆணவத்துடன் கேட்டுவிட்டு, மீண்டும் தன் உடலைப் பலமாக ஆட்டிக்கொண்டது, வெட்டுக்கிளி.

"அற்பக் கல்லே! ஏன் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கிறாய்? உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. எதுவாயிருந்தாலும் வாய் திறந்து பேசு"

என்று, வெட்டுக்கிளியின் ஆணை பிறந்தது. போர்வீரர்கள் களத்திலே குதித்துவிட்டார்கள். நாலா பக்கமும் தேர்கள் சுழன்றுகொண்டிருக்கின்றன. அங்கே விசித்திர மொட்டவிழ்கிறது.

"தம்பி! உன்னையும், உன் எண்ணங்களையும் பார்க்கும்போது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது. உன்னைப் பார்க்கிலும் பல்லாயிரம் மடங்கு பெரிய மனிதர்களே என்மேல் இருந்துவிட்டுப் போகிறார்கள். ஆனால், அவர்கள் என்மேல் அமர்ந்திருப்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரிவதில்லை. அவர்கள் இருப்பதைப் பற்றி நான் சிந்திப்பதேயில்லை. பாவம்! நீ யார், எங்கே இருக்கின்றாய்?" வெகுண்டு கொண்டிருந்த வெட்டுக் கிளியைப் பார்த்துக் கல் கூறிவிட்டுச் சிரித்தது.

மறுகணம், வெட்டுக்கிளி மேலே பறப்பதை அறியாது கல் அமைதியாகக் கிடக்கிறது.

எல்லாவற்றையும் பார்த்து இயற்கை, எக்காள மிட்டுச் சிரித்துக் கொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் கோலம்

விம்மிப் புடைத்து வீறு கொண்டெழுந்து, மலை போன்ற அலைகளைப் பிரசவித்துக் கொண்டிருக்கிறது சமுத்திரம்.

மெய்ப்பொருளான தேவன், தன்னுடைய சித்து விளையாட்டில் பாத்திரமாகிறான். சமுத்திரத்தின் ஒரு பகுதியில், ஒரே அமர்க்களம். பெரிய சுறா மீனொன்று சிறிய மீன்களையெல்லாம் கடித்துக் குதறிக்கொண்டிருக்கிறது. சுறாவின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிறிய மீன்களெல்லாம் உயிருக்கு பயந்து நாலா பக்கமும் சிதறி ஓடிக் கொண்டிருக்கின்றன. படைப்பின் தத்துவம் மொட்டவிழ்கிறது. தத்துவத்தின் சூத்திரதாரியாகிய தேவன் புன்னகை செய்கிறான்.

களத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் சுறா தன் வீரத்தில் செருக்குற்று மதிமயங்கி உளறிக்கொண்டிருக்கிறது.

“என் சக்திக்கு நிகர் என் சக்தியே. என் வீரத்தின் முன்னே, இந்த உலகமே தூசி. நானே அரசன், நானே பலவான். இந்தச் சமுத்திரம் என்னுடையது. இதில் வாழும் எல்லா உயிரினங்களும் என் அடிமைகள். என் இன்பத்திற்காகவும் என் சுகத்திற்காகவும் நீங்கள் இறப்பதே தத்துவம். காந்த விசைக்கோட்டில் இரும்புத் துகள்கள் இழுபட்டுச் செல்வதுபோல், என் சக்தியினால் உங்கள் சக்திகள் இழுபடுவது இயற்கையே. இதுவே படைப்பின் தத்துவம்!” என்று எக்காளமிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிக்கொண்டு சமுத்திரத்தை கலக்கிக்கொண்டிருக்கிறது, சுறாமீன்.

தேவனின் படைப்பின் தத்துவத்தை கோடு கிழித்துக் காட்டி, சுறா மீண்டும் தன் சக்தியைப் பரீட்சித்துக் கொண்டிருக்கிறது. ஒரே பயங்கரம்.

பரந்து விரிந்து கிடக்கும் சமுத்திரம் எதையுமே சட்டை செய்யாது, குமுறிக்கொண்டிருக்கிறது.

மெய்ப்பொருளான தேவன், மேடையேறிக் கொண்டிருக்கும் நாடக நெறியாள்கையில் மூழ்கிக் கிடக்கிறான்.

அப்பொழுது, விம்மிப் புடைத்து நெளிந்து கொண்டிருக்கும் அலைகளினூடே போட்டியிட்டு, இயந்திரப்பட கொன்று துள்ளிக்கொண்டிருக்கும் சுறாவை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. மறுகணம், படகில் வந்த மீனவன் தன் கையிலிருந்த ஈட்டியினால், சுறாவை குறிபார்த்து வீசுகிறான். களம் உக்கிரமடைகிறது. சக்தியைச் சக்தி இனங்காண்பதில் போர் உக்கிர மடைகிறது.

விரல் நொடிக்கும் நேரம்; மீனவனின் இயந்திரப் படகை இழுத்துக்கொண்டு சுறா மதி மயங்கி ஓடிக்கொண்டிருக்கிறது. சுறாவின் இழுவைக்கு ஈடு கொடுத்து, மீனவன் தன் படகைச் செலுத்திக் கொண்டிருக்கிறான்.

வினாடிகள், நிமிடங்களால் ஜீரணிக்கப்பட்டு, மணித்தியாலங்கள் ஜனித்துக் கொண்டிருக்கின்றன.

நாடகத்தின் நெறியாளன் மெய்யாகிச் சிரிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம்! வீரகர்ஜனை புரிந்த சுறா, தன் எல்லாச் சக்திகளையும் இழந்து, குற்றுயிராக மீனவனின் சக்திக்கு அடிமையாகி, இழுபட்டுக் கொண்டிருக்கிறது. பல சக்திகளை இழுத்துக்கொண்டிருந்த சக்தியொன்றை, இன்னொரு சக்தி மிக எளிதாக இழுத்துக் கொண்டிருப்பதைச் சமுத்திரம் பார்த்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது.

மெய்ப்பொருளான தேவன் தன் பூரண சக்தியில் தத்துவமாகிப் புன்னகைக்கிறான்!

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி

பாலர் வகுப்பு. உருவங்கள் வரையப்பட்ட சில சுலோக அட்டைகளை, ஆசிரியர் மாணவர்களுக்கு காட்டி விளக்கிக்கொண்டிருக்கிறார். அழகான நிறங் களால் வரையப்பட்ட அட்டைகளைப் பார்த்துப் பார்த்து மாணவர்கள் பூரிக்கின்றார்கள்.

வகுப்பில் என்றுமில்லாத உற்சாகம்.

"இந்தப் படத்தில் இருப்பது என்ன?" என்று ஆசிரியர் யானையின் உருவம் வரையப்பட்ட அட்டையைக் காட்டி, விடையை எதிர்பார்த்து ஒரு மாணவனைச் சுட்டுகின்றார்.

"யானை" என்று அவன் உடனே எழுந்து பதிலைக் கூறிவிட்டு வெற்றிப் புன்னகையோடு தன் இருப்பிடத் தில் அமர்கிறான்.

"கெட்டிக்காரன். இப்போது யானை என்ன நிறம் எனக் கூறு பார்ப்போம்" என்று அதே அட்டையைக் காட்டி இன்னொரு மாணவனிடம் கேட்கின்றார்.

அந்தக் கேள்வியை எதிர்பார்த்துக்கொண்டிருந் தவன் போல், அந்த மாணவன் எழுந்து "பச்சை நிறம்" என்று கூறிவிட்டு பெருமிதத்துடன் தன் இருப் பிடத்தில் அமர்கிறான். மாணவனின் விடையைக் கேட்ட ஆசிரியர் தீயை மிதித்தவர் போலாகின்றார். பற்களைக் கடித்துக்கொண்டு, மாணவனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங்களை தன்னுடைய இரும்புக்கையால் பதம் பார்க்கிறார். மாணவன் அடிமையாகி நிற்கிறான்.

எங்கும் ஒரே அமைதி, அச்சம்.

பாடசாலையின் மணி கணகணக்கின்றது. பாடத்தை முடித்துக்கொண்டு அறிவின் சின்னமாகிய ஆசிரியர் பச்சை மையினால் நிறம் தீட்டப்பட்ட தன் யானைச் சுலோக அட்டையோடு, மற்றச் சுலோக அட்டைகளையும் சேர்த்துக்கொண்டு அறிவின் சின்னமாகிய ஆசிரியர் இன்னொரு வகுப்பறையை நோக்கி நடந்துகொண்டிருக்கின்றார். ஆசிரியரின் பச்சை யானை, வகுப்பைப் பார்த்துச் சிரிக்கிறது. மாணவர்கள் காட்டில் வாழும் யானைகளைத் தேடிக் கொண்டிருக் கின்றனர்.

காட்டில் வாழும் யானைகள் எப்பொழுது வகுப்பறைக்கு வரப்போகிறதோ?

ஈசா, நீதான் துணை புரிய வேண்டும்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிசகு

விவசாய விருத்திக்கு அருகதையற்ற சிறுகுளம். பல வருடங்களாக அப்பிராந்தியத்தில், தன் சக்திக்கு ஏற்றவாறு நீரைத் தன்னகத்தே தேக்கி வைத்துக் கொண்டு தவித்து வரும் பிராணிகளுக்கும், பட்சிகளுக்கும் தாகம் தீர்த்து, தலை நிமிர்ந்து உள்ளப் பொலிவுடன் இருக்கிறது. அந்தக் குளத்தில் சிறிய மீன்களும், நீர்ப் பூச்சிகளும் நெடுங்காலந்தொட்டு நிம்மதியுடன் வாழ்ந்துகொண்டு வருகின்றன. அவற்றின் வாழ்க்கையில் போட்டியும், பொறாமையும் தலை தூக்கியதேயில்லை. குளம் தாய்மை உணர்ச்சியோடு அவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்தது. அமைதியின் கைப் பொம்மையாக காலமெல்லாம் இருந்துவரும், அக்குளத்தைச் செம்படவர்களும் கவனிப்பதில்லை. காலையும் மாலையும் அல்லியும், ஆம்பலும் சோபனம் கூற, தும்பிகள் துதிபாட, அப்பகுதியை அமைதியுடன் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறது குளம்.

ஒருநாள், வானமிருண்டு, வையம் கறுத்து அடைமழை விடாது பெய்தது. மழையின் அகோரத்தால் அப்பகுதியே வெள்ளக் காடாகியது. நீண்டு வளர்ந்த நெடுமரங்களும், மண்குடிசைகளும் வெள்ளத்தைத் தாங்கமுடியாமல் தவித்து விழுந்துகொண்டிருந்தன. எங்கும் ஒரே அமர்க்களம்; ஆர்பாட்டம். மழை ஓய்ந்தது. மறைந்திருந்த ஞாயிறும் முகம் மலர்ந்து சிரிக்க, மக்களும் சிரித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதேவனின் காலடிச் சுவடுகளுக்கிடையில் வெள்ளம், அடக்கப்பட்டு, இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. வெள்ளம் மறைய, குளமும், புதுப் பொலிவுடன் ஞாலத்தை பார்த்துப் புன்முறுவல் பூத்தது.

குளத்தில் என்றுமில்லாத குதூகலம், குமுறல், கூத்து. எங்கோ ஒரு குளத்தில் வாழ்ந்துகொண்டிருந்த பெரிய மீன்கள் சில, வெள்ளோட்டத்தில் சிக்கி வந்து, இச்சிறிய குளத்தைப் புகலிடமாக்கிக்கொண்டன. பெரிய மீன்களின் எதிர்பாராத வரவினால், சிறிய மீன்களெல்லாம் சிந்தை கலங்கி கண்ணீர் வடித்தன. பெரிய மீன்கள் தங்கள் தங்கள் விருப்பம்போல் சிறிய மீன்களையெல்லாம் பிடித்து விழுங்கி கும்மாளமிட்டுக் கொண்டு திரிந்தன. அவற்றிற்கு ஒருவித வெறி.

அமைதியின் சின்னமாக விளங்கிக் கொண்டிருந்த குளம், இவையெல்லாவற்றையும் பார்த்து வேதனை தாங்காமல் விம்மிக் கொண்டிருந்தது. பெரிய மீன் களின் போக்கினை அடியோடு வெறுத்தது.

"என்னருமை மீன்களே! நீங்களே, உங்கள் இனத் தவர்களுக்கும், உங்களுக்கும் படுகுழிகளைத் தோண்டிக்கொள்வது எவ்வளவு அறிவீனம்? உங்களை யெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டு திரியும் மனிதர்கள் மிகக் கொடூரமானவர்கள். நீங்கள் என் தயவில் வாழ்ந்துகொண்டு இருப்பதை அவர்கள் அறிந்தால், மறுகணமே ஈவிரக்கமின்றி உங்களை எல்லாம் அழித்து விடுவார்கள். உலகத்தைத் நல்லமுறையில் நீங்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. நீங்கள் நினைத்துக் கொண்டு இங்கே, கூத்தாடும் உலகம் மிகவும் சிறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம்! இது உங்கள் தலைவிதி போலும். நான் வாழ்க்கையில் யாரையும் காட்டிக் கொடுக்க மாட்டேன். இதுதான் என் வாழ்க்கை. உங்கள் மத்தியில் ஒற்றுமை மிக மிக அவசியம். ஒற்றுமை உங்களிடம் இல்லாவிட்டால், நீங்கள் இந்த இடத்தில் இனி வாழ்வது மிகக் கஷ்டம். உங்கள் மத்தியில் ஒற்றுமை குலைந்து ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுத்து துரோகம் செய்யும் எண்ணம் தலைதூக்கு மேயானால், நானும் உருக்குலைந்து நீங்களும் கூண்டோடு அழிவது திண்ணம். ஆகையினால், நீங்கள் ஒற்றுமையாக இருங்கள். தயவுசெய்து யாரும் யாரை யும் யாருக்கும் காட்டிக்கொடுத்து விடாதீர்கள்" என்று எதிர்பாராமல் வந்த பெரிய மீன்களைப் பார்த்து குளம் கூறிவிட்டு, மௌனமாகியது.

சிறிய மீன்கள் குளத்தின் அறிவுரையை ஏற்று அமைதியாயின. பெரிய மீன்கள் குளத்தின் அறிவுரை களை அவமதித்தன; ஆர்ப்பாட்டம் செய்தன.

"சீ! நீயொரு பயந்தாங்கொள்ளி. நாங்கள் வாழ்ந்த குளத்தின் கால்தூசிக்கும் நீ தகுதியில்லை. உன்னு டைய அறிவுரைகளைக் கேட்கும் போது, எங்களுக் கெல்லாம் சிரிப்புத்தான் வருகிறது. உனக்கு சீரழிவு வந்துவிடுமேயென்று, எம் இன்பத்தைக் கெடுக்கப் பார்க்கிறாய். நீயொரு சுயநலவாதி; பெரும் வஞ்சகன். உன் நன்மைக்காக, நீ செய்யும் பெரும் தந்திரம் இது. குளமே! உன்னுடைய எள்ளை எங்களிடம் விதைக் காமல், அதை நீயே பத்திரமாக வைத்துக்கொள். எங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, எங்களுக்கு நன்றாகத் தெரியும்." என்று கூறிவிட்டு எல்லாப் பெரிய மீன்களும் துள்ளிக்குதித்துக் கூத்தாடின. குளம் எதுவும் பேச முடியாமல் வாயடைத்துப்போய், மீன்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடமையை எண்ணிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தது.

காலம் உருண்டது. பெரிய மீன்களின் ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்துக்கொண்டேயிருந்தன. மீன்களின் ஆர்ப்பாட்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க, கவனிப்பாரற்றுக் கிடந்த குளத்தை மீனவர்கள் உன்னிப்புடன் கண்காணிக்கத் தொடங்கினர். வெற்றி, தலை நிமிர்ந்தது. கவனிப்பாரற்றுக் கிடந்த குளத்தில் மீனவர்கள் அடிக்கடி வரத் தொடங்கினர்.

இளங்காலை, பட்சிகளும், புள்ளினமும் பண்ணிசைக்க, மீனவனொருவன் தன் இஷ்டம்போல் குளத்தைக் கலக்கி மீன்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். நீண்டகாலமாக, தன்னில் வாழ்ந்துகொண்டிருந்த மீன்கள் பிடிக்கப்பட்டு மீனவனின் கூடையில் கிடந்து துடிப்பதைப் பார்த்து, குளம் அழுதது.

வீராப்புப் பேசிய பெரிய மீன்களெல்லாம் மீனவனின் கூட்டுக்குள் கிடந்து துடித்துக்கொள்டிருப் பதைப் பார்த்து சிறிய மீன்கள் எதுவுமே செய்ய முடியாமல் மௌனமாகி கிடந்தன.

குளம், சேயைப் பறிகொடுத்த தாயைப்போல், கலங்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறது.

மீனவன் தன் முயற்சியில் இடைவிடாது முன்னேறிக் கொண்டிருக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதி பூரணத்துவமாகிறது

பரந்த வயல்வெளி. வயலின் மத்தியில் கால தேவனின் நித்திய தாலாட்டில் பூரிப்படைந்து, சென்னி நிமிர்த்தி மன்னனைப்போல் நிற்கிறது, புளியமரமொன்று. உருண்டு திரண்ட வேர்கள், மரத்தின் உறுதியைக் கோடுகிழித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன, புளிய மரத்திற்குத் தன்னில் எப்போதுமே பெருமை. வயல்வெளியில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு பகலில் குளிர்ச்சியான நிழலை ஈந்து இரவில் பட்சிகளுக்குப் புகலிடமளித்து தாய்மைப்பொலி வுடன் நிற்கும் புளிய மரத்தினால், வயலின் சொந்தக் காரனுக்கு அளவிடமுடியாத மதிப்பு. வருவோரும், போவோரும் நிழலுக்காகப் புளிய மரத்தைத் தஞ்சமடையும் போது, வாயற்காரன் பெருமைப் பட்டான்.

கால ஓட்டத்தில், மரத்தின் உருண்டு திரண்ட வேர்களினாலும், பரந்த கிளைகளினாலும் வயலில் விளையும் வேளாண்மைகள் அழியத் தொடங்கின. போதிய ஒளியின்றி வேளாண்மை கூடிய விளைவைக் கொடுக்க முடியவில்லை. இதனால் வயற்காரன் கடனாளியாகிக் கஷ்டப்பட்டான்.

ஒருநாள், புளியமரத்தின் பெரிய கிளையொன்று, காற்றின் வெறித்தாக்குதலால் உடைந்து, விழுந்து வேளாண்மைகளை அழித்தது. வயலில் அழிந்த வேளாண்மைகளைப் பார்த்து, புளியமரம் வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச் சிரித்தது. பொறுமையின் வட்டத்தில் வெடிப்பு விட்டமாகிறது.

"திமிர் பிடித்தவனே! உனக்காகவும், உன் அறியாமைக்காகவும் நாங்கள் இத்தனை பேரும் வீணாக மடிய வேண்டுமா? நாங்கள் உருவத்தில் சின்னவர்களாக இருந்தாலும் உள்ளத்தால் உயர்ந்த வர்கள். உலகின் வளர்ச்சிக்காகவும், உலக மக்களின் நல்வாழ்விற்காகவும் எங்களையே நாங்கள் தியாகம் செய்வதை நீ அறிந்துமா சிரிக்கிறாய்? எங்கள் இனமே தியாகத்தின் பிறப்பிடம். எங்கள் தியாகத்திற்கு உலகில் ஈடே கிடையாது. நீ உனக்காக மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கும் படுபிற்போக்குவாதி. நீ அழிவதனால் இந்த உலகம் உனக்காக ஒருபோதும் கலலைப்படப் போவதில்லை. ஆனால், எங்களைப் போன்ற ஒரு ஜீவனின் அழிவு அது உலக அழிவு. நாங்கள் மக்களுக்காகவே வாழ்கிறோம். அவர்களுக்காகவே மடிகிறோம். இதுவே எங்கள் வாழ்வின் தத்துவம். எங்களின் பெருமை உன்னைப் போன்றவர்களுக்கு எப்படிப் புரியப் போகிறது? வெறியேறிச் சிரிக்காமல் வாயை மூடிக்கொள்."

புளியமரக் கிளையின் கீழ், நசுக்குண்டு குற்றுயி ராகக் கிடக்கும் தானியக் கதிர் ஒன்று வீரமுடன் பேசிவிட்டு அமைதியானது.

"சீ! பொடிப்பயலே, எனக்கு உபதேசம் செய்ய நீ யார்? நான் இந்த வயல்வெளிக்கே மன்னன். நான் இல்லாவிட்டால் இந்த வயல்வெளிக்கே மதிப்பில்லை. என் இன்பத்திற்காகவும், சுகத்திற்காகவும் நீங்கள் அழிவதில் தவறே இல்லை. அதுதான் நியதி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடை விழுந்து, நிஷ்டையில் தரித்திருக்கும் ஞானியைப்போல் இருந்த புளியமரம், ஆவேசமாகக் கூறிவிட்டு, மீண்டும் எக்காளமிட்டுச் சிரித்தது.

ஞானம் பூரணத்துவமடைகிறது. சீடனும் குருவும் தத்துவமாகின்றனர். கர்மத்தின் செட்டை உரிக்கப் படுகிறது.

அப்பொழுது, கூடிய கஷ்டப்பட்டும் நிறைந்த பயனைப் பெற முடியாமல் தவிக்கும் வயற்காரன், கோடரியுடன் புளியமரத்தை நாடிவந்து கொண்டிருக் கிறான். அவன் நேத்திரங்கள், முறிந்து கிடக்கும் மரக் கிளையின் கோலத்தையும், அதன் கீழே நசுங்குண்டு கிடக்கும், வேளாண்மைப் பயிர்களையும் தீண்டு கின்றன. மறுகணம், பரந்து, விரிந்து, செழுங்கிளைகள் பரப்பி, மன்னனைப் போல் தலைநிமிர்ந்து நிற்கும் புளியமரத்தை, வயற்காரன் ஆவேசத்துடன் தறித்துக் கொண்டிருக்கிறான்.

அவன், யந்திரமாகிவிட்டான்.

"ஒரு பெரிய ஜீவனின் மகிழ்ச்சிக்காகவும், அதன் இனிய சுகத்திற்காகவும் பல சிறிய ஜீவன்கள் அழிவது இறைவனின் நியதியானால், பல சிறிய ஜீவன்களின் மகிழ்ச்சிக்காகவும், அவைகளின் இனிய சுகத்திற் காகவும் ஒரேயொரு பெரிய ஜீவன் அழிவதும் இறைவனின் நியதியே!".

குற்றுயிராகக் கிடந்த தானியப் பயிரொன்று, அமைதியாகக் கூறிவிட்டு, மடிகின்றது. அங்கே, பல சிறிய ஜீவன்களுக்காக ஒரு பெரிய ஜீவன் அணு அணுவாகச் சிதைந்து கொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்ப ஞானம்

இருளோடு போராடி, இரவை அழித்து, ஆழியில் மூழ்கி ஆண்மைப் பொலிவுடன், ஆதவன் தன் அகம் கவர்ந்த அழகி, காலைச் செல்வியைக் கரம் பற்றித் தழுவத் துடித்துக்கொண்டு எழுகிறான். போரிலே வென்று பூரிப்புடன் வரும் தன் காதலனைக் கண்டு இளங்கன்னி களிப்புற்று ஏகாந்தமாக வரவேற்றுக் கொண்டிருக்கிறாள். மாய இருளின் கொடுமையில் மனம் நொந்து, கிடந்த வண்ண மொட்டுக்கள், விண்ணை நோக்கி சூரியனுக்கு சோபனம் கூற, சின்னத் தும்பிகளும் பட்சிகளும் கண் விழித்துக் களிநடம் புரிகின்றன. இருளின் அழிவைக் கண்டு, உறங்கிக் கொண்டிருந்த உலகம் விழித்துவிட்டது. எங்கும் ஒரே அமர்க்களம் ஆர்ப்பாட்டம்.

இரவெல்லாம் எவ்வித சிந்தனையுமின்றி, குப்பை மேடே உலகம் என்ற ஒரே எண்ணத்தில் உறங்கிக் கிடந்த மூன்று நாய்க்குட்டிகள், உலகத்தின் ஆர்ப்பாட்டத்தில் உள்ளம் குலைந்து, எதையோ இழந்துவிட்ட நிலையில் வாரிச்சுருட்டி எழுந்து குந்திக்கொண்டிருக்கின்றன. ஒரே தாயின் வயிற்றில் பிறந்த இம்மூன்று நாய்க்குட்டிகளும், இளமையிலேயே தாயைப் பிரிந்து, தந்தையின் அன்பையும் ஆதரவையும் சிறிதும் அறியாமல், தஞ்சமடைந்த அந்த குப்பை மேட்டையே சதா சுற்றிக்கொண்டிருக்கின்றன. எல்லாம் அழகான ஆண் குட்டிகள். அவற்றைப் பொறுப்பேற்று பேணிவளர்க்க இப்பரந்த உலகத்தில் யாருமே முன்வரவில்லை. அது அவை கேட்டு வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் போலும். எக்கல்விழுந்த வயிறுகளை நிமிர்த்தக் குப்பைமேட்டினை மூன்று நாய்க்குட்டிகளும் துருவித் துருவிப் பார்க்கின்றன. பாவம்; குப்பைமேடு காய்ந்து கிடக்கிறது. அதனைக் கண்ணிமை வெட்டாது பார்த்துக் கொண்டிருந்த நாய்க்குட்டியொன்று தன் சகோதரர்களைப் பார்த்து மிகவும் அமைதியாகப் பேசத் தொடங்கியது.

"சகோதரர்கள் என்றால் எங்களைப் போல்தான் இருக்க வேண்டும். எங்களுக்குள் எவ்வளவு ஒற்றுமை, கண்ணியம். எங்கள் சகோதர பாசத்திற்கு இந்த உலகத்தில் ஈடே இல்லை. வாழ்க்கையில், இந்த மனிதர்களும் எங்களைப் போல் ஒற்றுமையாகவும் பாசமாகவும் இருந்தால், இந்த உலகம் எவ்வளவு சிறப்பாகவும், அமைதியாகவும் இருக்கும். வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் அன்பாகவும், ஆதரவாகவும் என்றும் இருக்க வேண்டும். அன்பு இல்லாத வாழ்வு இலையில்லாத பட்ட மரத்திற்குத்தான் சமம். வாழ்க்கையை நாங்கள் நல்ல முறையில் அனுபவிக்க வேண்டுமானால் இன்றுபோல் என்றுமிருக்க வேண்டியது மிகமிக அவசியம். ஒற்றுமை இல்லாவிட்டால் எங்கள் வாழ்க்கையே பசுமையற்ற பாலைவனமாகிவிடும். ஆகையினால், நாங்கள் எல்லோரும் இராம, இலக்குவன், பரதனைப்போல் ஒன்றுமையாகவும், அன்பாகவும் வாழ்வோம்'' என்று கூறிவிட்டுத் தன் பேச்சை நிறுத்தியது.

நாய்க்குட்டிகள் மத்தியில் என்றுமில்லாத உற்சாகம், ஒரே மகிழ்ச்சி, மரியாதை.

"சகோதரா! அழகான உபதேசம் செய்தாய், உன் அன்பான அறிவுரைகள் எங்களைப் பாசத்தின் விளிம்பிற்கே இழுத்துச் சென்றுவிட்டன. உன் வாக்கினை என்றும் நாங்கள் சிரமேற்கொள்வோம். நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைச் சொன்னாலும் உடனே நிறைவேற்றி வைக்கச் சித்தமாக உள்ளோம். எள்ளாக இருந்தாலும் கிடைப் பதைப் பகிர்ந்துண்டு வாழ்வோம். ஒற்றுமையை, எங்கள் வாழ்வின் இலட்சியமாக எண்ணி வாழ்வோம். நம் சகோதர பாசம், இந்த உலகத்து மக்களுக்கு ஒரு பெரும் படிப்பினையாக இருக்கட்டும். இதை நல்ல முறையில் கட்டிக்காத்து வருவது எங்கள் தலையாய கடனாகும்." என்று மற்ற இரு நாய்க்குட்டிகளும், தம் சகோதரனின் வார்த்தைகளுக்கு ஒப்புதல் அளித்து, அவ்வார்த்தைகளை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டன.

ஒற்றுமையின் சின்னங்களாகி, உயர்ந்த இலட்சிய வாதி களாகிவிட்ட நாய்க்குட்டிகள் போட்டியையும், பொறமையையும் தங்கள் உள்ளங்களிலிருந்து களைந் தெறிந்து பக்குவமாகிவிட்ட மகிழ்ச்சியில், அமைதியாக எதையோ ஆவலோடு எதிர்நோக்கிக் கொண்டிருக் கின்றன. அப்பொழுது, பெண்ணொருத்தி எதையோ கூடையில் கொண்டுவந்து குப்பைமேட்டில் வீசு கின்றாள். விரல் நொடிக்கும் நேரம்; குப்பைமேட்டில் வீசப்பட்ட பொருள், யாருக்குச் சொந்தமென்ற போட்டியில், ஒரே தாயின் வயிற்றில் பிறந்த ஒற்றுமையின் மறுபிறவிகளான மூன்று நாய்க்குட்டி களும் ஒன்றையொன்று கடித்துக் குதறிக் கொண்டிருக் கின்றன.

குப்பைமேடு, தன்னில் படியும் எல்லாப் பாரங்களையும் தாங்கி, அமைதியாகக் கிடக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசைக்காரன்

அவன் ஒரு பேராசைக்காரன். உலகத்துச் செல்வங்கள் அனைத்தையும் தன் உடமையாக்கிவிட வேண்டுமென்ற அவாவில், ஊண் உறக்கமின்றி இரவு பகலாக உழைத்து வந்தான். வாழ்க்கையில் அவன் எதை நாடி உழைத்து வந்தானோ அதன் பயனை மிகக் குறுகிய காலத்துக்குள் அடைந்துவிட்டான். பணத்தால் அவன் கைகள் நாலாபக்கமும் ஓங்கிநின்றன. சென்ற இடமெல்லாம் மக்கள் அவனை வாழ்த்தினர், போற்றினர். இன்று அவன் பெரும் பணக்காரன்.

எப்படியிருந்தாலும், அவன் மனம் திருப்தியுறவில்லை. மேலும், மேலும் பணத்தைத் தேடிக் குவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகின. காலதேவனின் பவனியில் பேராசைக்காரன் பெரும் வியாதியால் பீடிக்கப்பட்டான். அந்த நிலையிலும் அவன் பண ஆசை தீரவில்லை.

சதா தன் பணத்தைப் பற்றியே சிந்தித்தான். இறுதியில் அவன் தன் எல்லாச் செல்வங்களையும் ஒன்றுதிரட்டி, ஒரு பெட்டிக்குள் மறைத்து வைப்பதற்குரிய நடவடிக்கையில் இறங்கினான். முடிவில், விலை மதிக்க முடியாத முத்துக்களை வாங்கிப் பெட்டியில் வைத்துப் பூட்டி யாருக்கும் தெரியாமல் தன் வீட்டின் ஒரு இடத்தில் புதைத்து வைத்தான். தன் செல்வங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாக இருப்பதில் அவனுக்கு பரம திருப்தி. பெரும் மகிழ்ச்சி. ஒருநாள் நோய்க்கு இரையாகி, படுக்கையே தஞ்சமெனக் கிடந்த அப்பேராசைக் காரன் இறந்துவிட்டான். அவனை அடக்கம் செய்வதற்கு பணம் இல்லாமல் அவன் உறவினர்கள் தவித்தனர். இறந்தவன் கவனிப்பாரற்றுக் கிடந்தான். எல்லோரும் அனுதாபப்பட்டு அழுதனர். பத்திரமாக புதைக்கப்பட்ட அவன் பணம் பெட்டியிலிருந்து வெளிவர மறுத்துவிட்டது. பாவம்! உண்ணாமல், உடுக்காமல், உதவாமல் சேர்த்த அவன் செல்வங்கள் அவனுடைய பிணத்தைக்கூட பார்க்காமல், எங்கோ ஒரு மூலையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக் கின்றன.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் தோற்றம்

உலகமே போற்றிப்புகழும் மாபெரும் சிற்பி அவன். அவனுடைய சிற்பங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசாத மனிதர் களே உலகில் இல்லை. புகழின் உச்சியில் தவழ்ந்துகொண்டிருந்த சிற்பி, தன்னையே மறந்தான். படைப்பின் தந்தை நானே என்று பறைசாற்றத் தொடங்கினான். படைத்த இறைவனையும், அவன் சக்தியையும் இகழ்ந்தான். ஈற்றில், நானே இறைவன், நானே படைப்பவன் என்று மக்கள் மத்தியில் கூறிப்பெருமையுற்றான். சிற்பியின் சிற்ப எழிலில் சிந்தையிழந்து கிடந்த மக்கள் கூட்டமொன்று, அவனையே இறைவன் என்று போற்றி வணங்கித் துதி பாடவும் துவங்கிவிட்டது!

சிற்பியின் அறியாமையைக் கண்டு மத குருமார் களும், மார்க்க அறிஞர்களும், இறை பக்தர் களும் கண்ணீர் விட்டுக்கலங்கினர். இவர்கள் சிற்பியின் கர்வத்தை நீக்கி, அவன் சிந்தையைத் தெளிவுபடுத்த இறைவனிடம் இரவும் பகலும் மண்டியிட்டு மன்றாடினர். அடியார்களின் வேண்டுதலை இறைவன் சிரமேற்றுச் சிந்தித்தான். சிந்தனையின் முடிவு, சிற்பியின் சிற்பக்கூடத்திலிருந்த அழகிய சிலைகள் யாவும் உயிர்பெற்றன.

உயிர்பெற்ற சிலைகள் எல்லாம், உணவுக்காகச் சிற்பியிடம் நச்சரித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பி, சிந்தை கலங்கித் தவித்தான்.

முடிவில், உயிர்பெற்ற அவன் அழகிய சிலைகள் எல்லாம், அவனையே கொன்று உணவாக்கிக் கொண்டிருந்தன.

நித்திய சிற்பியின் சிரிப்பில், இறையடியார்கள் எல்லோரும் லயித்தனர்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவி

புலித்தோலை மெத்தையாக்கி நியமங்களோடு கண்களை மூடி, கரை காணமுடியாத சிந்தனையில் மூழ்கியிருக்கிறார் முனிவர் ஒருவர். அவர் பக்கத்தில் முனிவரின் ஏவலை எதிர்பார்த்து இரண்டு சீடர்கள், திறந்த கண்மூடாமல் மௌனமாக இருக்கின்றனர்.

முனிவரின் முகம் மலர்ந்து இதழ்கள் விரிகின்றன.

"என்னருமைச் சீடர்காள்! இதுகாலம் வரை என்னையே நம்பி வாழ்ந்து வந்த உங்கள் இருவரையும், இன்று விட்டுப் பிரியும் நிலை எனக்கு வந்துவிட்டது. நான் உங்களைவிட்டுப் பிரிவதற்கு முன்னால், இதுவரை நீங்கள் அறியாதவொரு அரும் வித்தையை, உங்களுக்குக் கற்பிக்கப் போகிறேன். இதுவே எல்லா வற்றிலும் மேலான வித்தையாகும். இதைக் கொண்டு உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை அறிவுப் பாதையிலும் ஓட்டமுடியும். அதே போன்று அழிவுப் பாதையிலும் செலுத்த முடியும். பாதையைத் தெரிந்து கொள்வது இனி உங்கள் கடன். ஆனால், இவ்வரிய வித்தையை உங்களுக்கு அளிப்பதற்குமுன், உங்கள் அறிவின் வளர்ச்சியைப் பார்க்கவொரு சிறுபரீட்சை. இப் பரீட்சையின் பின்பே, என் கடைசிப் பொக்கிஷம் உங்களுக்கு" என்று கூறிவிட்டுக் கிளிப்பிள்ளைகளாகி நிற்கும் சிடர்களை நோக்குகின்றார் முனிவர்.

முனிவரின் முகத்தில் என்றுமில்லாத இளஞ் சிரிப்பு. "தங்கள் சித்தம் குருதேவா" என்று இரு சீடர்களும் கூறிவிட்டு மௌனமாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியே குறிக்கோளாகக் கொண்டு பந்தியில் முந்திச் செல்லும் படைவீரர்களின் உச்சநிலை.

"முயற்சியே வெற்றியின் வித்து. வாழ்க்கையென்பது ஒரு ஆழி. அதில் மனிதன் அமிழ்ந்து விடுவது சகஜம். அதற்காக மனம் வருந்துவது மடமை. வெற்றியும் தோல்வியும் எங்களுக்குள்ளேயே ஜனிக்கிறது. இவ் விரண்டும் ஒரே நேரத்தில் ஒருவருக்கும் கிடைப்ப தில்லை. இன்று வெற்றி கிடைத்தால் நாளை தோல்வியும் கிடைக்கலாம். பாவத்திலிருந்துதான் புண்ணியம் பட்டை தீட்டப்படுகிறது. இதுவே தத்துவம். இதுவே உலக நியதியும் கூட. அதோ! தெரிகிறது நம் ஆச்சிரமம். அது உங்கள் இருவருக்கும் நன்கு பழக்கப்பட்ட இடம். அதுவே நம் மூவரின் உறைவிடமுமாகும். அங்குதான் பரீட்சை. இப்பொழுது நீங்கள், இருவரும் அங்கு சென்று உடன் திரும்பி விடவேண்டும். இதுதான் பரீட்சை. இனி, வெற்றியும் தோல்வியும் உங்கள் கையில்", என்று மொழிந்துவிட்டு முனிவர், தன் நேத்திரங்களை இமைக்க பாடத்திற்குள் பூட்டி, நிஷ்டையில் ஆழ்கின்றார்.

சீடர்கள் இருவரும் முனிவரை சிரம் தாழ்த்தி வணங்கிவிட்டு, பரீட்சைக் களத்தை நோக்கி விரைகின்றனர்.

முனிவர் நிஷ்டையிலிருந்து விடுபட்டு, இமைக்க பாடங்களைத் திறந்து பார்க்கின்றார். ஆசிரமதிற்குச் சென்ற சீடர்களில் ஒருவன் மட்டும் கைகளைக்கட்டிக் கொண்டு மௌனமாகி நிற்கிறான். வியப்பின் வேகத்தில் முனிவரின் நெற்றி சுருங்கி இமைகள் வில்லாகின்றன.

"மற்றவன் எங்கே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆச்சிரமத்தில் என்றுமில்லாதவாறு இன்று, தங்கமும் முத்துக்களும் நிறைந்து இருந்தன. அவைகளைக் கண்ட மாத்திரத்தில், அவன், நான் கூட இருப்பதையும் மறந்து, அவைகளை எடுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக ஆசிரமத்தை விட்டுப் போய்க்கொண்டிருக்கிறான். அவன் கண்கள் அவனையே ஏமாற்றிவிட்டன. அவன் மூடன்" என்று பயபக்தியோடு பதிலை உமிழ்ந்துவிட்டு, சீடன் தலைகுனிந்து நிற்கிறான். முனிவர் புன்சிரிப்பு ஒன்றினை உகுக்கின்றார்.

ஞானம், ஒளி வீசிக்கொண்டிருக்கிறது.

"உண்மை, அவன் மூடன்! நீயே துறவி. வாழ்க்கையில் வெற்றியும், தோல்வியும் ஒரே நேரத்தில் எவருக்கும் கிடைப்பதில்லை." என்று கூறி, மண்ணிலே சிரகூன்றித் தன் பாதங்களில் அடைக்கலமாகியிருக்கும் சீடனை, அன்பொழுக வாழ்த்திவிட்டு, முனிவர் எழுந்து நடந்து கொண்டிருக்கிறார்.

அங்கே, முனிவரின் புலித்தோலாசனம் சீடனை வரவேற்றுச் சிரிக்கிறது. ஆசையைக் கொன்றுவிட்ட அவனுக்கு, இந்த அகிலம் இனி ஒரு தூசி.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையின் விளைவு

அது ஒரு அழகான தேசம். வற்றா நதிகளும், வானுயர்ந்த மலைகளும், அடர்ந்த காடுகளும் நிறைந்து செழிப்புடன் இருந்த அத்தேசத்தைப் புகழ்பெற்ற மன்னன் ஒருவன் கொடிகட்டி ஆண்டு வந்தான். செல்வத்தின் சுகந்தமான ஆலிங்கனத்தில் இரவும் பகலும் இன்பம் கண்டுகொண்டிருந்த அம்மன்னனை, மக்கள் எல்லோரும் கடவுளாகக் கருதி அவனிட்ட ஆணையை தேவ வாக்காக மதித்து ஒழுகினர்.

கால ஓட்டத்தின் அசைவில், எரிமலை குமுறத் தொடங்கியது. அக்கினிச் ஜுவாலைகள் நாலா பக்கமும் சிதறிப் பறந்தன. மக்கள் விழித்தனர். மன்னன் திகைத்தான்.

பிரமனின் புதிய உத்திகளில், நவீன ஆத்மாக்கள் நாலா பக்கமும் ஜனித்தன. புதுமையைத் தேடும் உத்வேகத்தில், அவை சுறுசுறுப்படைந்தன. புதுச் சிந்தனை வெள்ளம் கரைபுரண்டோடிக் கொண்டிருந்தது. ஆண்டவனாக மதிக்கப்பட்ட அரசன், அரை வினாடியில் ஆன்மாக்களைக் கொன்று, உதிரத்தை உறிஞ்சும் கொடிய பேயாக கணிக்கப்பட்டான். எங்கும் புதுப் புனல். முறுக்கேறிய உத்வேகம். அடிமை விலங்கை உடைத்து, விடுதலை தேடும் புரட்சிப் புயல் வீசுகிறது. மக்கள் மத்தியில் தூவப்பட்ட முற்போக்கு விதைகள் செழித்து வளர்ந்து சிரித்து நிற்கின்றன.

தேசமெங்கும் விடுதலைக் கோசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்த விசைக்கோட்டில் இழுபட்டுச் சென்ற இரும்புத் தூள்கள் தங்களுக்குள் ஒற்றுமையை ஜீரணித்து, காந்தத்தை இழுக்கத் தொடங்கின. காந்தம் சக்தி இழந்து இழுபட்டது.

மக்கள் சக்தியின் பிரசவ நோக்காட்டில், தேசம் சமதர்மத்தைப் பிறப்பித்தது. கர்மம் மேலோங்கி நின்றது. தேசம் கீதையின் பிம்பமானது. எங்குமே "மன்னன் ஒழிக, மக்கள் வாழ்க!" என்ற மந்திரம் வானைப் பிழந்தது.

மக்களின் சக்தியின் முன்னே, மன்னன் விலங்கிட்ட அடிமையானான்.

மன்னன் சிந்தித்தான். சிந்தனையோட்டத்தில் நாட்டை மக்களிடம் ஒப்படைக்க முடிவு செய்தான். மறுகணமே முடியைத் துறந்து, தேசத்தின் பிரசைகளில் ஒருவனானான்.

கோடையின் அழிவில், இளவேனிற் காலம் மொட்டவிழ்ந்து மோகனப் புன்னகை புரிந்தது. எங்கும் இன்பத்தின் தாலாட்டு, மதுவின் மயக்கம். தென்றலின் ஊடல். மன்னனின் முடிவை முரசொலி பகர்ந்தது. மக்கள் குதூகலித்தனர். வாழ்த்துப் பாடினர்.

மக்கள் "மன்னர் பெருமான் வாழ்க, வாழ்க" என்று ஆர்ப்பரித்தனர்.

காலை மலர்ந்தது. பனியின் குளிரில் கூம்பிக் கிடந்த மலர்கள், பகலவனின் சிரிப்பில் மயங்கி மலர்ந்தன. எங்கும் இயற்கையின் சுகந்தம். மன்னனின் ஆணைப்படி, மக்கள் எல்லோரும் அரண்மனை முற்ற வெளியில், ஒன்று கூடி நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் தோன்றினான். திரை கிழிந்தது. "என்னருமை மக்களே! இந்த நிமிடம் முதல் இத்தேசத்தை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் விரும்பியபடி, தேசத்தைப் பிரித்தெடுத்து, அந்தந்த பகுதிகளை நீங்களே ஆண்டு கொள்ளுங்கள். நீங்கள் பிடித்த பகுதிக்கு, நீங்களே மன்னனாக இருந்து உழையுங்கள்." என்று மன்னன் பேசி முடித்தான்.

மறுகணம், கூடி நின்ற குடிகளெல்லாம், தேசத்தைப் பிடித்து தன்னுடையதாக்கிக் கொள்ள, நாலா பக்கமும் சிதறியோடினர்.

விநாடிகள், நிமிடங்களாகி, நிமிடங்கள் மணித்தியாலங்களாகி, மணித்தியாலங்கள் நாட்களாயின. ஓடிய குடிகளில் ஒருவருமே திரும்பவில்லை.

மன்னன் திகைத்தான், எங்குமே அவல ஓலம். நாடு பிணக்காடாகி, நாற்றமெடுத்தது. குடிகள் யாருமே திரும்பவில்லை.

பாவம்! மன்னன் மக்களைத் தேடி ஓடிக் கொண்டிருக்கிறான்.

தேசம், எல்லாவற்றையும் இழந்து, இளம் விதவையைப் போல் அழுதுகொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்

சிறிய மேசை. அதன்மேல் நீண்ட காகிதத்துண்டும், பென்சிலொன்றும், அழிப்பான் (இரேசர்) துண்டும் கிடக்கின்றன.

இவைகளுக்குள் பெரும் போட்டி.

"எங்களில் நானே மிகுந்த பிரயோஜனமுள்ளவன். நான் இல்லாவிட்டால் உங்கள் இருவருக்கும் இங்கு தேவையே இல்லை. என்னால்தான் நீங்கள் இருவரும் மதிப்போடு வாழ்கின்றீர்கள்" என்று காகிதத்துண்டு கூறி களிக்கிறது.

"இல்லவே இல்லை. நான்தான் உங்கள் இருவரையும் விட மிகுந்த பிரயோஜனமுள்ளவன். நான் மட்டும் இல்லாவிட்டால், நீங்கள் இங்கு இருப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை." பென்சில் பெருமையுடன் பேசிவிட்டு புன்னகை உதிர்க்கிறது.

"தம்பிகாள்! உங்களுக்குள் ஏன் வீண் தர்க்கம்? சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். இதை நாங்கள் அறிந்திருந்தும் இப்படியெல்லாம் பேசலாமா? ஒருவர் உதவியின்றி உலகில் இன்னொருவர் வாழ்வது மிகக்கஷ்டம் தம்பி. உலகில் எல்லாமே பிரயோஜன முள்ளவைகளே. இதை விட்டு எங்களுக்குள் ஏன், வீண் சண்டை? எங்களுக்குள் எதற்கு போட்டி?" என்று அழிப்பான் துண்டு, அறிவைப் புகட்டிவிட்டு மௌன மாகிறது.

அப்போது, மேசையை நோக்கி வந்தவன் கதிரையி லிருந்து அதில் கிடந்த காகிதத்தை எடுத்து பென்சிலால் எதையோ எழுதுகிறான். எழுதியவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடுதியாக நிறுத்திவிட்டு, அழிப்பானை எடுத்து தான் எழுதிய எழுத்துக்களில் சிலவற்றை அழிக்கிறான். அழித்துவிட்டு, மீண்டும் தன் வேலையில் முன்னேறிச் செல்கிறான்.

மெய், நிஜமாகிநிற்க, மனிதன் நிழலாகி நிற்பதை ஏகன் பார்த்துச் சிரிக்கிறான்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் பொல்லாதது

சிறிய தோட்டம். அதன் மத்தியில் மாமரமொன்று பெற்றெடுத்த பிள்ளைகளால் பெருமையுற்று, மனநிறைவுடன் வாழ்ந்துவரும் தாயைப் போல், எண்ணற்ற பழங்களை நாலா பக்கமும் சிதறிச் சிறப்புடன் நிற்கிறது, மாமரமொன்று, மரத்தின் நிறைவான வாழ்வில் அவாவுற்று அழகிய பட்சிகளும், பிராணிகளும் கூடாரமடித்துக் குடிகொண்டு வாழ, முண்டியடித்துக்கொண்டிருக்கின்றன. மாமரம், தன் வாழ்வையும், அதன் இன்பத்தையும் சதா எண்ணி எண்ணிக் கற்பனையுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. பழங்கள் முதிர்ச்சியுற, பறவைகளின் அட்டகாசம் கூடியது. இதை நோட்டமிட்ட தோட்டக்காரன், மாமரத்தின் மேல் அக்கறை கொண்டு, நாலா பக்கமும் மணிகளைக் கட்டி, இரவும் பகலும் ஓயாது பட்சிகளையும், பிராணிகளையும் விரட்டியடிப்பதில் மும்முரமாகினான். வண்ணப் பழங்களை இரசித்துச் சுவைக்க, எண்ணற்ற கற்பனைகளைச் சுமந்து பூரிப்புடன் வரும் பட்சிகளும், பிராணிகளும் மணிகளின் ஓசையில் மருண்டு, மந்திரவாதியைக் கண்டு குடல் தெறிக்க ஓடும் பூதங்களைப்போல், பதறிப் பறக்கும் காட்சியினைப் பார்த்து மாமரம் கைகொட்டிக் களித்தது. கர்வத்தால், தன் நிலையையே மறந்து ஆடியது. வெற்றியில் தோட்டக்காரன் எல்லாவற்றையும் பார்த்து ரசித்தான்.

பட்சிகளும் பிராணிகளும் மாமரத்தின் பக்கத்தில் கூடச் செல்ல முடியாமல், கடவாயிடுக்குகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமிழ்நீர் வழிந்தோட, மரத்தையே பார்த்து, பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தன.

காலம் உருண்டது. தோட்டக்காரன் மாம்பழங்கள் யாவையும் பறித்துக்கொண்டு மரத்தை வெறுமையாக்கினான். இரவும் பகலும் மரத்தையே சுற்றி வட்டமிட்டுத் திரிந்த பட்சிகளும், பிராணிகளும் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்து விட்டன. இப்பொழுது, கூவி அழைத்தாலும் குரல் கொடுக்க யாருமில்லை. எங்கும் மயான நிலை.

மாமரம் தன் பரிதாப நிலையை எண்ணி எண்ணிக் கதறி அழுதுகொண்டிருக்கிறது.

பாவம்! அதன் கதறலைக் கேட்க அங்கு யாருமே இல்லை! இன்று, பட்சிகளையும், பிராணிகளையும் தன் சுயநலத்திற்காக விரட்டிய தோட்டக்காரன், மாமரத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலம்

எங்கும் ஒரே அமர்க்களம்.

வேகமாக வீசிக்கொண்டிருக்கும் காற்றினால், கடல் கொந்தளித்தது. மலை போன்ற அலைகளை அது இடை விடாமல் கக்கிக்கொண்டிருக்கிறது.

சீறிவரும் அலைகள், ஒன்றையொன்று பிடிக்க முடியாமல் தோல்விகண்டு கரையோடு சங்கமமாகிக் கொண்டிருக்கின்றன.

பேயாட்டமிடும் காற்றுக்கு அஞ்சி கடலிலுள்ள உயிரினங்களெல்லாம் பேதலித்து ஓடிக்கொண்டிருக் கின்றன.

கடலும், அதனுள் வாழும் உயிரினங்களும் படும் அவதியினைப் பார்த்து காற்று, எக்காளமிட்டுச் சிரித்த வண்ணம், தன் விசையைக் கூட்டிக் கடலைப் புரட்டிக் கொண்டிருக்கிறது. காற்றின் அட்டகாசம் எல்லை மீறிப் பாய்ந்துகொண்டிருக்கிறது.

இதனால், வேதனையின் விளிம்பில் நின்று கடல் கூக்குரலிட்டது.

கரை, எதையுமே சட்டை செய்யாது, தன்னிடம் மண்டியிடும் அலைகளை அமைதியாக கபளீகரம் செய்துகொண்டே இருக்கிறது.

காற்று, தன்னையே மறந்து சிரிக்கிறது.

"இந்த அண்டமே எனக்கு, அடிமை. என் பலத்தின் முன்னே இந்தக் கடலும் அதன் பலமும் ஒரு தூசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சிறு தும்மலுக்கே ஈடுகொடுக்க முடியாமல் இந்தக் கடல் படும்பாட்டைப் பார்க்கும்போது எனக்குப் பாவம்போல் இருக்கிறது."

கர்வத்தின் உச்சியில் நின்றுகூத்தாடும் காற்று, கடலைப் பார்த்து ஏளனமாகக் கூறி எக்காளமிட்டுச் சிரிக்கிறது. பொறுக்க முடியாமல், கடல் எல்லை மீறிச் சீறுகிறது.

"அறிவு கெட்ட காற்றே! வார்த்தைகளை அளந்து பேசு, என் சூட்சுமத்தின் விசையாக ஜனித்து, பேயாட்டமிடும் உனக்கு இவ்வளவு திமிரா? நீ யார் என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்! நானே உனக்கு மூலம் என்பதை மறந்து விடாதே. நான் இல்லா விட்டால் நீ என்பதே இல்லை. எல்லை மீறாமல், அமைதியாகிவிடு."

சென்னி வீங்கி செருக்குடன் பேசிய காற்றைப் பார்த்துக் கூறிவிட்டு, கடல் பொங்கிக்கொண்டிருக் கிறது. ஞானம் மெய்ப்பொருளாகி, ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

"என் விசைக்கோட்டில் அணுப் பிசகாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் நீ, என் மூலமாவது எப்படி? என் சக்திக்கு ஈடுகொடுக்க முடியாமல், தடுமாறிக்கொண்டிருக்கும் உன் சக்தி, எப்படி என் மூலமாக முடியும்? நானே எனக்கு மூலம். என் மூலத்தின் முடிச்சே நான்தான். தத்துவம் புரியாமல் உளறாதே."

காற்று, ஆத்திரத்துடன் கூறிவிட்டு, தன் பலம் அனைத்தையும் ஒன்று திரட்டி கடலை உருட்டிப் புரட்டிப் பிழிந்து கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவென்னும் போர்க்களம் உக்கிரமடைந்து, கர்மம் தடுமாறிக்கொண்டிருக்க, நித்திய ஒளி பிரகாசிக்கின்றது.

காற்றையும் கடலையும் பார்த்து இறைவன் சிரித்தான்.

இறைவனின் சிரிப்பில் தத்துவங்கள் பட்டை தீட்டப்படுகின்றன. உறுமிக் கொண்டிருந்த காற்றும், ஓலமிட்டுக் கொண்டிருந்த கடலும் இறைவனின் சிரிப்பில் எல்லாவற்றையும் மறந்து திகைத்து நிற்கின்றன.

"இந்த அண்டத்தின் மூலமே நான்தான், என் சக்திதான் இந்த அண்டம். நான் இல்லாவிட்டால் எதுவுமே இல்லை. என்னில் இருந்துதான் எல்லாமே உயிர்பெறுகின்றன. நான், என்னும் நாமத்தின் ஜீவனே நான்தான். இதுதான் ஞானம். ஞானமும் நானே அதன் மூலமும் நானே" ஆண்டவன் அமைதியாக அறிவைப் புகட்டிவிட்டு, மீண்டும் சிரிக்கிறான். கடலும், காற்றும் இறைவனின் மெய்மையை உணர முடியாமல் தடுமாறுகின்றன.

"இறைவா! நான் இல்லாவிட்டால் காற்று உருவாக முடியுமா? காற்றுக்கு நான்தானே மூலம்?"

கடல் கேள்வியைக் கேட்டுவிட்டு குமுறுகிறது.

எங்கும் ஒரே பயங்கரச் சப்தம்.

"இறைவா! நானாக எழுந்து நானாகவே வீசும் எனக்கு, நான்தானே மூலம். எனக்குப் பயந்து ஓலமிட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கடல் எப்படி எனக்கு மூலமாக முடியும்?" காற்று கேள்வியைக் கேட்டுவிட்டு மேலும் உக்கிரமடைந்து வீசுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலும் காற்றும் கேட்ட கேள்விகளைக் கேட்டுவிட்டு இறைவன் மீண்டும் சிரிக்கிறான்.

சூனியத்தில், மின்னல்கள் பளிச்சிடுகின்றன.

மாயை அழிய, உண்மை உயிர்பெற்று ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.


"மூலம் நித்தியமானது. அதற்கு அழிவென்பதே இல்லை. அதிலிருந்து பிறந்துள்ள அனைத்துமே ஒருநாள், அழிந்து, அதாகவே ஆகிவிடும்." இறைவன், கர்மயோகத்தை எழுதி வாசித்துக்கொண்டிருக்கிறான். கடலும், காற்றும் உண்மையை ஜீரணிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. தத்துவம், மீண்டும் கேள்வியாகிறது. விரல் நொடிக்கும் நேரம்.

அண்டம் அழிந்து, மூலமாகிச் சிரிக்கிறது. மூலத்தின் சிரிப்பில், எல்லாமே அழியாத ஒளியாய் பரவிக்கொண்டிருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை எழுத்தாளர் கவிஞர் எஸ். முத்துமீரான் அவர்களின் உருவகக் கதைகள் 'இயற்கை' எனும் பெயரில் ஒரு தொகுப்பாகப் பிரசுரம் பெறுவது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

திரு. முத்துமீரான் ஏற்கனவே சிறுகதையிலும் கவிதையிலும் தனது ஆற்றலை வெளிப் படுத்தியிருக்கிறார். அவர் உருவகக் கதைகள் எழுதி தன்னுடைய அனுபவத்தையும் ஞானத்தையும் எழுத்தாற்றலையும் புலப்படுத்தியிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

— வல்லிக்கண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org